

பெண் சிங்கம்
ப்ரிவியூ!

கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI ● 13.06.2010 ● ரூ.10.00 ● 96 பக்கங்கள்



தீர்த்தமலை ரகசியம்!

அன்ன சவாரி!

நிப்பட்... நிப்பட்!

தாய்நாடு காக்கும்
தானம்பட்டி!

அதியமான் கோட்டை
அதிசயம்!

ருமபுரி, கிருஷ்ணகிரி
மாவட்ட ஸ்பெஷல்-I


சைபால் எல்லோர் வீட்டிலும் இருக்க வேண்டிய ஒன்று

இதம் தந்து

ரணம் ஆற்றும்...







சைபால்

BEST SKIN OINTMENT

எரிச்சல் தரும் வெட்டுக்காயத்தின் மேல் சைபால் தடவுங்கள். எரிச்சலைப் போக்கி இதம் தரும். காயம் இருந்த சுவடே காணாமல் போகும்.

★ வெட்டுக்காயம் ★ முகப்பரு ★ சேத்துப்புண் ★ தேமல் ★ வேனல்கட்டி ★ பித்தவெடிப்பு முதலிய வியாதிகளுக்கு சிறந்தது.

உரிமையாளர் : சைபால். S. சங்கரநாராயணன்

Mfrs. : **THE SOUTH INDIAN MFG. CO.,** MADURAI-20. Ph : 2534108

கல்கி

13.06.2010



சேனல் செய்திக

என் கேள்விக்கு என்ன பதில் ரேஞ்சில் சின்னத்திரை நட்சத்திரங்களிடம் நாம் வீசும் கேள்வியும் அவர்கள் பதில்களும்...



சின்னத்திரை நடிகர் ராகவ்விடம், *''டான்ஸ் ஷோ, காம்பியரிங்னு பிஸியா இருந்த உங்களை இப்ப டீ.வி.யில பார்க்க முடியலை?''*

''நான் ஹீரோவா நடிச்ச 'நஞ்சுபுரம்' படம் ரிலீஸுக்காக வெயிட் பண்ணி கிட்டிருக்கேன். ஜூலையில் ரிலீஸ் ஆயிடும். அதுக்கு அப்புறம் வித்தியாசமான ராகவ்வை ஆடியன்ஸ் பார்க்கலாம். அதுவரைக்கும், விளம்பரப் படங்கள், ஆல்பம்னு பண்ணிக்கிட்டு இருக்கேன். பொழைப்பை நடத்தணுமே ஸார்.''

(திறமையுள்ள புள்ள... பொழச்சுக்கும்.)

''தமிழ் மக்கள் பொழச்சுப்

நடிகர் ஜெகன்: *''சீரியல், சினிமான்னு நடிச்ச நீங்க, இப்ப குறும்படங்கள்ல நடிக்கற அளவுக்குச் சுருங்கிட்டீங்களே?''*



''கலைஞர் டீ.வி.யில நாளைய இயக்குநர் நிகழ்ச்சியின் குறும் படத்தில் நடிச்சது என்னோட ஃப்ரெண்ட் மோனிகாவுக்காக. நான் அடிப்படையில நாடக நடிகன். நடிப்புன்னு வந்துட்டா குறும்படம், பெரிய படமெல்லாம் பார்க்க மாட்டேன். சும்மா புகுந்து விளையாடணும். இதுதான் என் பாலிசி.''

(ரொம்ப புகுந்துடாதீங்க, அப்புறம் வெளியே வரக் கஷ்டமா இருக்கும்)

ரேடியோ ஜாக்கி அருண்: *ஜீ தமிழில் அஞ்சறைப் பெட்டி சமையல் நிகழ்ச்சி பண்ற ஐடியா எப்படி வந்தது?*

''சமையல்ன்னாலே பெண்கள்தானா...? ஏன் கல்யாண வீட்ல சமைக்கறது யாரு? அறுசுவை நடராஜன் மாதிரி, அறுசுவை அரசர்களெல்லாம் நம்ம ஆண்கள்தானே? ரேடியோல பேசறது வாய்ஜாலம்ன்னா, சமைக்கறது கைஜாலம். ஆண்களாலேயும் பெண்கள் மாதிரி சமைக்க முடியும்னு சொல்ல வர்ற நிகழ்ச்சிதான் அஞ்சறைட்



போகட்டும்!''

பெட்டி.''

ஜெயா டி.வி வினு: *''நல்லா பேசுறீங்களே, அழகாவும் இருக்கீங்க. நீங்க ஏன் சீரியலில் நடிக்கக் கூடாது?''*

ஏன்? தமிழ்நாட்டு மக்களை நான் அழ வைக்கணுமா? பொழச்சுப் போகட்டும்! ரசிகர்களுக்கு அவ்வளவு பெரிய ரிஸ்க் தர விரும்பல. நான் ஹலோ எஃப்.எம்ல ஜாக்கியா இருக்கறதால, டி.வி.லயும் வீடியோ ஜாக்கியா இருக்கறது கஷ்டமாத் தெரியல. நடிப்புங்கறது வேற ஒரு களம். காம்பியரிங்ல இப்படியே ஜாலியா சிரிச்சுக்கிட்டே இருந்திடலாம். நடிக்கறதுக்குதான் நிறையப் பேர் இருக்காங்களே.''



- ராகவ்குமார்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32



சொக்குதே மனம்

Priyam Entertainers Pvt Ltd,

நிறுவனத்தினரால் "**வித்வான்**" இசைப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பள்ளியை தவில் சக்ரவர்த்தி பத்மஸ்ரீ அரித்வர மங்கலம், Prof.Dr.A.K. பழனிவே அவர்கள் துவக்கி வைத்தார்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக நடிகர் பார்த்திபன். சின்னத்திரை நடிகர் கோலங் அஜய், நடிகை
யுவஸ்ரீ மற்றும் பலர் கலந்துக் கொண்டனர்.

இந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு நாராயணன் மற்றும் ஒருங்கிணைப்ப பிரியா சுப்ரமணியன் கூறியதாவது.

தமிழ் நாட்டிலுள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளுடன் இணைந்து இவ்வருடத்திற் 30லிருந்து 40வரை இசைப்பள்ளிகளை துவக்கத் திட்டமிட்டுள்ளனர். மேலும் வித் இசைப்பள்ளி அடையார், திருச்சி, மற்றும் மயிலாடுதுறையில் விரைவில் துவக்கப உள்ளது. மேலும் விவரங்களுக்கு **9840313106.**

ஜெயா டிவியில் ஒளிப்பரப்பாகி சிறப்பான வரவேற்பை பெற்ற நிகழ்ச்சி சொக் மனம் என்றால் அது மிகையாகாது. இது பிரபலமான பழைய பாடல்களை விரு ரசிகர்களுக்கான நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சி புதுப்பொலிவுடன் ஞாயிறுதோறும் இரவு 9 மணிக்கு ஜெயாடிவியில் ஒளிபரப்பாகிறது. காலத்தில் அழியாத இனிய பாடல்க புதுமையான, பிரமாண்டமான மேடை அமைப்பு, சிறந்த ஒளிப்பதிவு மற்றும் சி தொழில் நுட்பக் கலைஞர்களால் இசைக்கப் படுகின்றன.

SHS Advisory Group

No.373, 1st Main Road, Natesan Nagar,
Virugambakkam, Chennai - 600 092.
Phone : 044 - 4212 3051 / 4351 2119
www.shsadvisorygroup.com,
www.priyamentertainer.com

- Stocks.
- Mutual Funds.
- Commodities.
- Insurance.
- Loans.
- Private Equity.
- Venture Capital.
- Live Shows.
- Music School

றுவனங்களின் வளர்ச்சிக்குத் தேவையான முதலீடுகள். பிரைவேட் ஈக்குவிட்டிகள்
ன்றவைகளை SHS-ன்அசோசியேட் நிறுவனமான Fortress Financial Services
ited-யுடன் இணைந்து ஏற்பாடு செய்து தருகிறது.

றுவனங்களுக்கான Investment, Disinvestment இரண்டுக்கும் ஏற்பாடு செய்து
கிறது நன்கு வளர்ந்து வரும் நிறுவனம் மேலும் பெரிய அளவில் வளர்ந்திட
வஞ்சர் கேப்பிட்டல்" என்பதற்கு ஏற்பாடு செய்து தருகிறது.

ங்கி முதலீட்டு சேவைகளை செய்து தருகிறது.

றுவனங்களின் "பொடன்ஷியல்" தன்மையைக் கவனத்தில் கொண்டு அவற்றுக்கு
ன் மற்றும் ஈக்குவிட்டி பெற்றுத் தர ஏற்பாடு செய்து தருகிறது.

ங்குசந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாக உருவாக்கித் தருகிறது.

றுவனங்களுக்கான இன்சூரன்ஸ், டிராவல் இன்சூரன்ஸ் ஏற்பாடு செய்கிறது.

றுவனங்களுக்கான IPO க்கு ஏற்பாடு செய்துதருகிறது. ஊடகங்களில் தடம்பதித்த
S ஜெயா டிவியில் ஒளிப்பரப்பாகும் சொக்குதே மனம் நிகழ்ச்சியைத் தயாரிக்கும்
யம் என்டர்டெய்னர்ஸ் SHS குரூப்பின் ஓர் அங்கம்.

Agents / Franchisees Welcome

லும் விவரங்களுக்கு : 9003077456



நீங்கள் கேட்டவை — தராசு நீங்கள் கேட்டவை

● பா.அசோக், பிள்ளையார்குளம்

? "அ.தி.மு.க. என்ற ஒரு பெரிய இயக்கத்திலிருந்து ஒரு உறுப்பினரைக் கூட இழக்க விரும்பவில்லை" என்ற ஜெயலலிதாவின் உருக்கமான பேட்டி குறித்து...?

! ஓட்டைப்படகைக் காப்பாற்ற ஒரிசல் முயற்சி என்பது புரிகிறது. தப்பான நடவடிக்கையாகவும் தெரிகிறது. படகில் உள்ள ஓட்டையை அடைக்க வேண்டுமே தவிர, மூழ்கும் படகிலிருந்து தப்பிக்கப் பார்ப்பவரை, "போகாதே, போகாதே" என்று கேட்டுக் கொள்வதில் பயனில்லை.

● உமாதேவி பலராமன், திருவண்ணாமலை

? தாலியைக் கையில் சுற்றிக் கொண்டு ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கிறாரே ஷில்பா ஷெட்டி?

! ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலமே தம் பக்கம் கவனத்தை ஈர்க்க ஷில்பா ஷெட்டி எடுக்கும் முயற்சி பலனளிக்காது. தாலி அணிவதை நமது பெண்கள் அடிமைத்தனத்தின் அடையாளமாகக் கருதவில்லை. புனிதமாகவும் பெருமிதத்துக்குரியதாகவும் நினைக்கிறார்கள்.



★ அதைவிட ஏமாற்றம்!



★ புரியாத மதிப்பு

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? "எம்.ஜி.ஆர். உயிருடன் இருந்தபோதே ரகசியத் தகவல்கள் தந்து, என்னோடு கள்ளக் காதல் கொண்டவர் ஆர்.எம்.வீ." என கருணாநிதி கூறியிருக்கிறாரே?

! 'எம்.ஜி.ஆருக்கும் எனக்கும் இடையே இருந்த நட்பு குறையக்கூடாது என்பதில் ஆர்.எம்.வீ. ஆர்வமாக இருந்தார்' என்று கூறி, அத்துடன் விட்டிருந்தால் கௌரவமாக இருந்திருக்கும். கள்ளக் காதல், ரகசியத் தகவல்கள் எல்லாம் ஆர்.எம்.வீக்கு இழுக்கு; கலைஞருக்கும் அகௌரவம்.

● ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்

? ஏர் இந்தியா ஊழியர்கள் மீண்டும் வேலை நிறுத்தம் செய்யப் போகிறார்களாமே?

! என்ன பயன்? சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்! சட்டியை நிரப்பும் முயற்சிக்கு ஒத்துழைப்பு தருவதற்குப் பதில், சட்டியையே உடைத்து எறியத்தான் வேலை நிறுத்தம் உதவும்.

● அ.ஷண்முகசுந்தரம், பெங்களூரு

? புதிய வீராங்கனை குஷ்பு தி.மு.க.வில்

ஜாதி வாரிக் கணக்கெடுப்பு தேவைதானா?

இணையும் வைபவத்தில் அமைச்சரவை முழுவதுமே கலந்துகொண்டதாமே; அந்த அளவு பலன் இருக்குமா?

! பலன் இருக்கிறதோ இல்லையோ, கலைஞரைப் பகைத்துக் கொள்ளாமலிருக்கலாமே என்பது. பலரது உள்நோக்கமாக இருந்திருக்கலாம்!

● ச.ஆ.கேசவன், இனாம்மணியாச்சி

? திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாகக் கூறுகிறார்களே... உண்மையில் சொர்க்கம் என்று ஒன்று உள்ளதா?

! சொர்க்கம் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், கணவனும் மனைவியும் அதற்கான முயற்சி எடுத்தால், இல்வாழ்க்கை சொர்க்கமாக அமைய முடியும் என்பது தெரியும்.

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு ★

? துணை முதல்வர் மு.க.ஸ்டாலினும் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆரும், தங்கம் தென்னரசும் மதுரை விமான நிலையத்தில் வந்திறங்கியபோது வரவேற்க ஒரு தி.மு.க. பிரமுகர் கூட வரவில்லையாமே?

! 'இது உங்க ஏரியா இல்லப்பா'ன்னு தெக்கத்தி தி.மு.க. சொல்லாம சொல்லியிருக்கு! எரிமலை குமுறுது. அதன் தலையில சட்டியைக் கவிழ்த்து கலைஞர் கட்டிக் காக்கப் பார்க்கிறாரு!

● இராம வேதநாயகம், வடபாதிமங்கலம்

? ஜாதிவாரிக் கணக்கெடுப்பு தேவை தானா?

! ஜாதிவாரிச் சலுகைகள் இல்லையெனில் ஜாதிவாரிக் கணக்கெடுப்பும் தேவையில்லை. சலுகைகள் உள்ளவரை சதவிகிதக் கணக்கைச் சரிபார்க்க சாதிவாரிக் கணக்கெடுப்பு அவசியம் தான். இதனால் புதிய பிரச்னைகள் உருவாகப் போவதும் உறுதிதான்!

● சாந்தூர் சபாபதி, திருச்சி-18 ❑

? "தண்ணீர் பகிர்வு பிரச்னையில் மத்திய அரசு கைகட்டி வேடிக்கை பார்க்கிறது'' என்ற முதல்வரின் குற்றச் சாட்டு; ''இனி வரும் ஆண்டு



* ஆளுயர மாலை..

களில் தண்ணீர்ப் பகிர்வு ஒரு முக்கியப் பிரச்னையாக இருக்கப் போகிறது" என்ற பிரதமரின் பேச்சு - இவை எதைக் காட்டு கின்றன?

! நதிகளை இணைக்கும் திட்டத்தை அமுல்படுத்துவது எவ்வளவு முக்கியம் என்பதைத் தான். நதிகளைத் தேச உடைமை யாக்கி, மத்திய அரசிடம் ஒப் படைக்க வேண்டும். பிறகு, உற் பத்திக்கு உதவாத ஓராயிரம் திட் டங்களை ரத்து செய்து, அந்தப் பணத்தையெல்லாம் நதிகள் இணைப்பு முயற்சிக்குப் பயன் படுத்த வேண்டும். தொழில், விவசாயம் இரண்டுமே செழிக் கும்.

● **என்.காளிதாஸ், சிதம்பரம்**

? மும்பை தாக்குதலுக்குக் காரணமான சயீதை, பாகிஸ்தான் நீதிமன்றம் விடுவித்தது ஏமாற் றம் அளிக்கிறது என எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்துள்ளாரே?

! பாகிஸ்தானின் இந்த நட வடிக்கையை எஸ்.எம்.கிருஷ்ணா எதிர்பார்க்காதது, நமக்கு அதை விட ஏமாற்றம் அளிக்கிறதே!

● **என்.சண்முகம், திருவண்ணாமலை**

? "மாணவர்களுக்கு வருவாய் அடிப்படையில் சலுகைகளை வழங்க வேண்டும்" என்கிறாரே இல.கணேசன்?

! படிப்பில் சிறந்த, பொரு ளாதாரத்தில் பின்தங்கிய அனைத்து மாணவர்களுக்கும் ஒரேவிதமான சலுகை அல்லது அரசு உதவி என்பது ஒன்றுதான் நியாயமானதாக இருக்கமுடியும். இதைச் சொல்லும் துணிவு இல.கணேசனுக்கு இருப்பதை வரவேற்க வேண்டும். அதுவும், இன்றைய ஜாதி அரசியல் சகதியில், தனித்து நிற்பவரை ஆளுயர மாலை போட்டு வாழ்த்த வேண்டும்.






* களைத்த கௌரவம் * ...எரிமலை! * திருத்தும்... * தமிழக முயற்சி

● **முரளி நாராயணன், சென்னை-87**

? ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரைக் கொல் லும் முயற்சி பற்றி...?

! ஸ்ரீ ஸ்ரீ குறிவைக்கப்பட வில்லை என்பதாக ஒரு சந்தேகத் தைக் கிளப்பி, சிதம்பரம் குழப் பம் ஏற்படுத்த முயற்சி செய் கிறார். அமைதிக்காகவும் மனித நேயத்துக்காகவும் பாடுபடும் ஓர் இயக்கத்தின் தலைவர் அருகே, இத்தகைய சம்பவம் நிகழ்ந்ததே கவலைக்குரியதுதான் என்பதை அமைச்சர் உணர வேண்டும்.

● **ஆர்.நாகராஜன், சென்னை-117**

? பா.ம.கவுக்கு கலைஞர் கொடுத்த அல்வாவைக் கவனித்தீரா?

! என்ன பிரயோஜனம்? எஸ்.வி.சேகர் தமது நாடகத்தில் கிண்டல் பண்ணி சிரிக்க வைக்க முடியாதே!

❑ ரூ. 150 பரிசு பெறுபவர்: சாத்தூர் சபாபதி, திருச்சி - 18
✱ ரூ. 75 பரிசு பெறுபவர்: பவானி கிருஷ்ணா, பெங்களூரு

நல்லுள்ளத்துக்கு விழா!

மூத்த இலக்கியவாதி தி.க.சி.யினுடைய 86-வது பிறந்த நாள் விழா திருநெல்வேலியில் நடைபெற்றது. விழாவுக்குத் தலைமையேற்ற எழுத்தாளர் ச.செந்தில்நாதன், ''தி.க.சி.யினுடைய பெயரில் அறக்கட்டளைத் தொடங்க, தினமணி ஆசிரியர் வைத்தியநாதன் முன்னின்று ஏற்பாடு செய்துதர வேண்டும்' என்று வேண்டுகோள் வைத்தார். தினமணி ஆசிரியர், ''தி.க.சி. அறக்கட்டளையைத் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொடங்கலாம்'' என்று சொல்ல, அவ்விழாவிலேயே எழுத்தாளர்கள் பலர் முன்வந்து அறக்கட்டளைக்காகத் தங்கள் நன்கொடைகளை வழங்கினார்கள். இதுகுறித்துக் கேள்விப்பட்ட ரசிகமணி டி.கே.சி.யின் பேரனான நீப.நடராஜன், தி.க.சி.யின் அறக்கட்டளைக்கு நிதியுதவி அனுப்பித் தந்ததோடு, ஒரு கடிதத்தையும் தி.க.சிக்கு அனுப்பியிருக்கிறார். அந்தக் கடிதம் இதோ:



அன்புக்கும் மதிப்புக்கும் உரிய நண்பர் தி.க.சி. அவர்களுக்கு, வணக்கம்...

தங்கள் 86-வது பிறந்த நாள் விழாவை இலக்கிய அன்பர்கள் விமரிசையாகக் கொண்டாடினார்கள் என்பதை 'தினமணி'யில் படித்துப் பூரித்துப் போனேன். விழா என்றாலே அரசியல் வாதிக்கு உரியது என்று நினைக்கும் காலம் இது.

ஒரு மூத்த இலக்கியவாதிக்கு, சிறந்த சிந்தனையாளருக்கு, விமர்சனம் என்றால் தாக்குவதற்குரியதல்ல என்று எடுத்துக் காட்டும் நல்லுள்ளம் படைத்தவருக்கு விழா என்பது எவ்வளவு அபூர்வமான நிகழ்வு!

தினமணியோ அரைப் பக்கத்தை ஒதுக்கியதையும், பொன்னீலன் பேச்சைக் கால் பக்கத்தில் வெளியிட்டதையும் நினைத்தாலே பிரமிப்பு!

வல்லிக் கண்ணன் அவர்கள்தான் புகழுரைக்கு முழுத் தகுதி உள்ளவர் என்று சொன்னதோடு, மூன்று தன்மைகள் - ஆணவம், மேட்டுக்குடித் தன்மை, குறுங்குழுவாதம்-இல்லாதவராக இருந்தவர் அவர் என்பதை இன்றைய எழுத்தாளர்களிடம் காண முடியவில்லையே என்னும் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறீர்கள்.

குறிப்பாக ''செம்மொழி மாநாடு தமிழை வாழ வைக்கவா அல்லது தற்பெருமையைப் பறைசாற்றவா?'' என்ற உங்கள் அறைகூவல் சம்பந்தப்பட்டவர்கள் செவிகளுக்குள் நுழையுமா?

உங்களுக்கு இப்படி ஒரு விழா எடுத்தார்களே என்று நான் ரொம்பவும் சந்தோஷப்படுகிறேன். தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் அமையவிருக்கும் அறக்கட்டளை நிதிக்கு எனது சிறிய பங்கை இத்துடன் அனுப்பியிருக்கிறேன்.

தி.க.சி.வாழ்க! அவரது பெயரோடு தமிழ் வாழ்க!

கடிதம் மற்றும் புகைப்பட உதவி:
வே.முத்துக்குமார்



செந்தமிழ்ப் போட்டி-2

ஒரு பிரபல தமிழ்ப் பாடலின் ஒற்றை ஒரு வரியைத் தேர்வு செய்திருக்கிறோம். அந்த வரியிலிருக்கும் சொற்கள் சென்ற வாரம் தொடங்கி நான்கு வாரங்கள் (27.6.10 இதழ் முடிய) கல்கியில் இடம் பெறும் தலைப்புகளில் கலந்து இடம் பெறுகின்றன. குறிப்புகளைக் கொண்டு ஒவ்வொரு வாரமும் அந்தச் சொற்களைக் கண்டுபிடித்துச் சரியாக வரிசைப்படுத்தி அந்தப் பாடல் வரியைக் கண்டுபிடிக்க வேண்டும். ஒட்டுமொத்தமாகச் சேர்த்து வைத்து நான்காவது வாரம் நாங்கள் தேர்வு செய்து வைத்திருக்கும் அந்தப் பாடல் வரியையும், அதை எழுதியவரின் பெயரையும் குறிப்பிட்டு, உங்கள் புகைப்படத்தோடு சுயமுகவரியுடன் அனுப்பி வைக்க வேண்டும்/சரியான விடை எழுதிய 5 நபர்களுக்கு (குலுக்கல் முறையில் தேர்வு செய்து) பரிசு அளிக்கப்படும். வெற்றி பெற்றவர்களைப் புகைப்படத்தோடு அறிவிப்போம். கூடுதலாக, நான்காவது வாரம் இடம் பெறும் படைப்புத்திறன் போட்டியிலும் பங்கேற்று வெற்றி பெறும் ஒரு நபருக்கு லேப் டாப் பரிசு!

ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

இந்த வார குறிப்பு :

பெண்களை பாஸிடிவ்வாக பார்க்கும் பதில்.

வர்த்தகச் செய்தி



கோவையை நனைக்கும் பட்டுச்சாரல்!

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்ற பெருமைக்குரிய கோவை மாநகரத்தில் அடியெடுத்து வைத்துள்ளது, பட்டு உலகில் தனக்கென ஒரு தனி முத்திரை படைத்து வரும் ஆரெம்கேவி.


தகுதிபெற்ற அனுபவம் வாய்ந்த பட்டு கலைஞர்களால் ஒரு டிசைன் ஸ்டுடியோவை உருவாக்கி இருக்கிறது ஆரெம்கேவி. இதன் மூலம் எண்ணற்ற பல புதிய படைப்புகள் உருவாகியுள்ளன.

தீம் சேலைகளில் தேசிய விருது பெற்ற ஹம்சதமயந்தி மற்றும் ஐஸ்வர்யப் பூக்கள், நாகாக பட்டுப் புடைவைகள், வியக்க வைக்கும் 50,000 வண்ணங்கள் கொண்ட பட்டுப் புடைவை, கின்னஸ் விருது பெற்ற உலகின் நீளமான பட்டுப் புடைவை மற்றும் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு கையாளப்பட்ட இயற்கை சாயமேற்றும் முறையில் உருவாக்கப்பட்ட 'நேச்சரல்' பட்டுப் புடைவை, மூன்றாண்டு ஆராய்ச்சியின் பயனாய் உருவாக்கிய, இறகு போல இலேசான லினோ லைட் வெயிட் பட்டுப் புடைவைகள் போன்றவற்றை உருவாக்கி, உலகமே வியக்கும் வண்ணம் சாதனை படைத்துள்ளார்கள்.

ஆரெம்கேவி, கோவை நகரத்தில் மிகப் பிரம்மாண்டமான முறையில் குடும்பத்திற்கேற்ற திருவணமாய் மே 16, 2010 முதல் இயங்கி வருகிறது.

"என்ன மாப்ளே... நேத்து பூரா காணோம்?'' ''அதையேங்கேக்குறே மாம்ஸ்... ஒரு கோழி முட்டை ஆயிரத்து ஐந்நூறு ருவான்னு சொன்னாங்க. அது என்னான்னு பார்க்கலாமேன்னு போய்ட்டு வந்தேன்!'' ''என்னா மாப்ளே... நீ பாட்டுக்கு அள்ளித் தெளிக்கிற. ஒரு முட்டை வாங்குற பணத்துல அஞ்சாறு கோழி புடிச்சிடுலாமே...'' ''இது வேற... அது வேற மாம்ஸ். இது பொன் முட்டையிடும் ஈமு கோழி. ஒவ்வொரு முட்டையும் ஒரு கிராம் தங்கத்தை விடக் கூடுதல் ரேட்டு. இனிமே ஈமு கோழி வளர்ப்புக்குத்தான் என்னோட வோட்டு!''

''என்னடா இது... நாலைஞ்சி வருஷமா சும்மாணாச்சும் ஊரைச் சுத்திட்டிருந்தே... இப்ப ஈமு கோழி பக்கம் ஈஸியா தாவிட்டே?'' ''ஈமு கோழி வளர்ப்பு ஈஸி இல்லே மாம்ஸ். கஷ்டம் தான். ஆனா... கட்டுக்கட்டா கரன்சி எண்ணிகிட்டே இருக்கலாம்!'' ''எப்பிடி கனவுலயா?'' ''நீங்க வேணா மல்லாக்கப் படுத்து கனவு காணுங்க மாம்ஸ். நான் ஈமு கோழி வளர்ப்புல இறங்கிட்டேனாக்கும்'' ''அட... பாவிப்பய புள்ளை மவனே... வெவரமா சொல்லிட்டுப்போ... ''அப்பிடி கேளுங்க மாம்ஸ். வெவரமா சொல்றேன்.''



• ராஜா

"ஈமு கோழி - இதுக்குத் தாய் மண் ஆஸ்திரேலியா. புகுந்த வீடு அமெரிக்கா. இப்ப வளர்ற வீடு ஜப்பான், கனடா, பிரான்ஸ், நியூஸிலாந்து, இங்கிலாந்து, மலேசியா, சீனா, தென் ஆப்பிரிக்கா மற்றும் இந்தியா. வணிகரீதியா வளம் கொழிக்க வைப்பது, இதன் வளர்ப்பு. அதனாலேயே ஒரு தொழிலா இப்ப மாறிப் போச்சு.

சாம்பல் கலந்த கருப்புக் கலர்தான் இதனோட நெறம். அஞ்சுலேர்ந்து ஏழடி உசரம் வரைக்கும் வளரும். நல்லா வளர்ந்த கோழி, அம்பதுலேர்ந்து அறுபது கிலோ எடை காணும். ஒரு கிலோ ஈமு இறைச்சி, முந்நூறு ருவா வரைக்கும் போவுது. இதனோட இறைச்சிய எல்லாரும் சாப்பிடலாம். குறிப்பா சர்க்கரை உள்ளவங்க, இதய நோயாளிகள் பயப்படாம சேர்த்துக்கலாம். காரணம், இதனோட கறியில 95.5 சதவிகிதம் கொழுப்பு நீங்கியிருக்கு.



பிறவியிலேயே இந்த வகை கோழிக்கு, நோய் எதிர்ப்புச் சக்தி ஜாஸ்தி. ஒரு ஈமுவுலேந்து கிடைக்கற இறைச்சி மட்டும் கிலோ முந்நூறு ரூபாய்க்கு விற்கப்படுது. எலும்பு தனி ரேட்டு. ஈமுவோட தோல், இரண்டாயிரம்





ரூபாய்க்கு தோலை வியாபாரிங்க வந்து வாங்கிக்கறாங்க. ஈமு கோழிகள் வருஷத்துல மூணு மாசம், அதுவும் மூணு நாளைக்கு ஒரு முட்டை இடுது. ஒரு முட்டையோட விலை ஆயிரத்தைந்நூறு ரூவா. சுமாரா ஒரு கோழியிலேர்ந்து ஏழு லிட்டர் ஈமு ஆயில் கிடைக்குது. இது ஒரு லிட்டர் ரெண்டாயிரம் ரூவா. ஈமு எண்ணெய் மருந்து மற்றும் அழகு சாதனப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுது. மூட்டுவலிக்குப் பயன்படுது.

ஈமு கோழி நாப்பது வயசு வரைக்கும் வாழக்கூடியது. எந்த தட்பவெப்ப நிலையையும் தாங்கிக்க கூடியது. எல்லா வகையான காய்கறி, கோழித் தீவனங்களை உட்கொள்ளும். ஈமு இறைச்சி, எலும்பு, அதன் இறகு, தோலு, அதன் ஆயிலு இப்படி எல்லாத்துலயும் காசு பார்க்கலாம். எனக்கு வழிகாட்டியிருக்காரு ராஜா சாரு. அவுரோட ஈமு கோழி வளர்ப்புப் பண்ணை, தருமபுரி மாவட்டத்துல இண்டூர் கிராமத்துல இருக்கு மாம்ஸ்.'' ''எல்லாம் சரி மாப்ளே... பணங்காசு நெறைய வந்ததும்.. எந் தங்கச்சிய மறந்துட்டு வேற எங்கேயும் பறந்து போய்டாத மாப்ளே?'' ''ஈமு கோழிக்கு ரெண்டு றெக்கை இருக்கு. ஆனாலும், அதனால பறக்க முடியாது. பறக்காது. அது போல நானும் எங்கேயும் பறந்து போய்ட மாட்டேன் மாம்ஸ். இது ஈமு கோழிக மேல சத்தியம் மாம்ஸ்!'' ''அப்பிடிப் போடு... ஈமு மாப்ளே!''

வாசகர் யோசனை:
சீனிவாசன், தருமபுரி



ஆஹயா கோழி... வாஹயா லாபம்...





கல்கி



2010 ஜூன் 13
விக்ருதி வைகாசி 30
மலர் : 68
இதழ் : 46


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியன்*


மாவோ இயக்கம் உருவாக்கும் மயான பூமி!

நேற்றுவரை பெற்றோருடன் இருந்த குழந்தை, அநாதையாய்த் தலையில் கட்டுடன்... முண்டாசைப் போன்ற அந்த பிளாஸ்திரி கட்டில் 'unknown' என்ற ஆங்கில வாசகம்! கன்னத்தில் சிராய்ப்பு, கண்களில் குளம் கட்டிய நீர், அரிசிப் பல் தெரிய அழும் அக்குழந்தையின் புகைப்படம், மேற்கு வங்கத்தில் நிகழ்ந்த ஞானேசுவரி எக்ஸ்பிரஸ் ரயில் விபத்தின் பின்விளைவு. இவ்வாறு 140 வாழ்க்கைகள் கணத்தில் சூனியமாகியிருக்கின்றன. இதற்கான கொடிய சதித் திட்டங்களைத் தீட்டவும் செயல்படுத்தவும் துணியும் அமைப்புகளை ஒடுக்குவதும், அவற்றிடமிருந்து மக்களைக் காப்பதும் அரசின் பொறுப்பு; கடமை. ஆனால், பிரதமரோ, நாக்ஸல்களுக்கு எதிரான அரசின் கொள்கையை இப்போதுதான் சாவகாசமாக அறிவித்திருக்கிறார்! வளர்ச்சி அபிவிருத்தி திட்டங்களின் பயன்பாடு அடித்தட்டு மக்களுக்குக் கிட்டும் என்றும், கூடவே அரசின் இறையாண்மையும் வலிமையுடன் இயங்கும் என்றும் தமது அரசின் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

அரசு இயங்குவதற்குள், மேற்கு வங்கத்தில் நடந்தது போன்ற மேலும் அரை டஜன் சதித்திட்டங்களை, மாவோ தீவிரவாதிகள் அரங்கேற்றிவிட வாய்ப்பு இருக்கிறது!

தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டுவரும் அடித்தட்டு மக்களின் (குறிப்பாகப் பழங்குடியினர்) ஆதரவு இயக்கமாகத்தான் மாவோ இயக்கம் ஆரம்பமாயிற்று. ஆனால், இன்று அவ்வியக்கம் அந்த





அடித்தட்டு மக்களையே கிள்ளுக் கீரையாக எண்ணி, சதித் திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்துகிறது. சத்திங்கரில் பஸ்ஸில் பயணம் செய்த 24 சாமானியர்கள், கண்மூடித்தனமாகக் குண்டு வைத்துக் கொல்லப்பட்டுள்ளனர்! பெட்ரோலியம் எண்ணெய் ஏற்றிச் சென்ற ரயில் ஒன்று, மாவோயிஸ்டுகளின் குண்டுக்கு இலக்காகிப் பற்றி எரிந்ததில், மக்களுக்குக் கோடிக் கணக்கில் நஷ்டம். இப்படியாக, சாமானிய மக்களின் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் தொடர்கதையாகி வருகின்றன.

''எங்கள் இலக்கு சாதாரண மக்கள் அல்ல; அதிகார வர்க்கம்தான்'' என்று கூறிவந்த மாவோ இயக்கம், இப்போது அதிகார வர்க்கத்துக்குச் சங்கடம் உண்டாக்க சராசரி மக்களைப் பலிகொடுக்கத் துணிந்துவிட்டது!

கவனிக்கப்படாமல் விடப்பட்ட கிராம மக்கள், பழங்குடியினர் பலர் இருக்கவே செய் கிறார்கள். ஆனால், அவர்கள் ரயில் கவிழ்ப்புச் சதி போன்ற திட்டங்களை நிறைவேற்றவோ ஆதரிக்கவோ மாட்டார்கள்; தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களுக்கு மாவோ இயக்கம் அயல்நாட்டு வன்முறை இயக்கங்களிடமிருந்து உதவி பெற்று வருகிறது; தொடர்ந்து சீன ஆதரவு கிட்டி வருவதற்கான சாத்தியக் கூறுகள் மிக அதிகம். மத்திய அரசு மாவோ இயக்கத்தினருக்குத் தேதி குறிப்பிட்டு கடைசி கெடு வைத்து, பேச்சுவார்த்தைக்கு அழைக்கவேண்டும். அவர்கள் ஒப்பாவிடில் ராணுவத் தாக்குதல் நடத்தி அவ்வியக் கத்தினரை ஒழிப்பதில் தவறில்லை என்பதுடன் அது அரசின் கடமையும்கூட. இதன் பயனாகச் சில பல அப்பாவி உயிர்களும் பலியாகக் கூடும்தான். ஆனால், அதற்கு பயந்து அரசு கைகட்டி வேடிக்கை பார்த்தால், மாவோக்கள் வெகு விரைவில் இந்தியா வையே மயானமாக்கிவிடுவார்கள். அப்போது பலியாகும் அப்பாவி உயிர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது!


கல்கி
அடுத்த இதழ்... 20.06.2010
தருமபுரி-கிருஷ்ணகிரி
மாவட்ட ஸ்பெஷல்-II
காசிக்கு இணையான
சந்திர சூடேஸ்வரர்!
மாம்பழக் கண்காட்சி!
புளியமர சாட்சி!
மல்கோவா பால்கோவா...
மின்சாரப் பூங்கா
கவனிங்க...
கலெக்டர் வர்றார்!
சனிக்கிழமைகளில் கடைகளில்... உங்கள் பிரதிக்கு உடனே முந்துங்கள்...

பண்பாட்டின் இதயஸ்தானம்



ஒரு தேசத்தின் பண்புக்கு அளவுகோல் எது? ஒரு நாடு என்று இருந்தால், அதில் எல்லோரும் பண்பாளர்களாக (Culture) இருக்க முடியாது. திருடன், பொய்யன், மோசக்காரன் எல்லோரும் இருக்கத்தான் செய்வார்கள். இப்படிப் பட்டவர்கள் இருந்தாலும், 'இந்தத் தேசத்தில் பண்பு இருக்கிறது. கெடுதலான வர்கள் இருந்தாலும், கூட இந்த நாடு பிழைத்துப்போகும்' என்று தெரிந்து கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும்? ஒரு நோயாளிக்குப் பல கோளாறுகள் இருந்தாலும் டாக்டர் இருதயத்தைச் சோதனை செய்து பார்த்துவிட்டு, 'இருதயம் நன்றாக இருக்கிறது; ஆகவே பயமில்லை' என்கிறார் அல்லவா! அதுபோல் ஒரு தேசத்தில் கோளாறுகள் இருந்தாலும், அதன் பண்பாட்டை உரைத்துப் பார்க்க ஓர் இருதய ஸ்தானம் இருக்கிறதா?

இருக்கிறது. ஒரு தேசத்தின் பண்பு உயர்ந்திருக்கிறது; மனோபாவங்கள் உயர்ந் திருக்கின்றன; அங்கங்கே அழுக்குகள் இருந்தாலும், மொத்தத்தில் அது சுத்தமாக இருக்கிறது என்பதை உரைத்துப் பார்ப்பதற்கு அந்தத் தேசத்து மகா கவிகளின் (இலக்கிய கர்த்தர்களின்) வாக்கே ஆதாரமாகும். ஒரு தேசத்தின் பண்புக்கு இதயமாக அல்லது உரைகல்லாக இருப்பது, அந்த நாட்டு மகாகவியின் வாக்குத்தான்.

இலக்கிய கர்த்தர்களில் உயர்ந்தவர்கள், மட்டமானவர்கள் எல்லோரும் இருப்பார் கள். இவர்களில் அசுத்தமே இல்லாதவனின் வார்த்தைதான், அழுக்கின் கனம் இல்லாததால் காலப் பிரவாகத்தில் அமுங்காமல், என்றென்றும் மேலேயே விளங்கிக் கொண்டிருக்கும். அப்படிப்பட்டவனின் வாக்கே நமக்குக் கலாசார விஷயங்களில் பிரமாணமாகும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

கிருஷ்ணபாரதி வருணுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். ஹாலில் உட்கார்ந்திருந்த சண்முகம்தான் எழுந்து வாசல் பக்கம் போய்ப் பார்த்தார். சுசிலா கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள். அவள் படபடப்பாக இருந்தாள். அவளைப் பார்த்ததும் சண்முகம் சிரித்தார். உடனே அவருக்கு மனோகரியுடைய ஞாபகம் வந்தது. மனோகரி தென்படுகிறாளா என்று வீட்டினுள் திரும்பிப் பார்த்தார். மனோகரி கண்ணில் படவில்லை.

''என்ன அங்கிள், குழந்தை எப்படி இருக்கிறான்?'' என்று கேட்டாள் சுசிலா. மனோகரி வருவதற்குள், ஹாலோடு நிறுத்திப் பேசி அனுப்பிவிட முடியாதா என்று யோசித்துக் கொண்டிருந்தார் சண்முகம். ஆனாலும், சுசிலா கேட்டதற்குப் பதில் சொல்ல வேண்டுமே.

''கையிலே அடிபட்டிருக்கு...''

''எங்கே இருக்கிறான்?'' என்று கேட்டுக் கொண்டே, இயல்பாக ஹாலைத் தாண்டி உள்ளே நடந்தாள். அதற்குள் அவளுடைய குரலைக் கேட்டு கிருஷ்ணபாரதியே வந்துவிட்டான்.

அவனைப் பார்த்ததும் அவன் தோளைத் தொட்டு, ''சாரி பாரதி... வண்டி பஞ்சர் ஆயிட்டு... அதான் வர லேட்டாயிடுத்து... குழந்தை எப்படி இருக்கிறான்? எங்கே?'' என்று கேட்டுக் கொண்டே வீட்டினுள் பார்த்தாள் சுசிலா.

''பரவாயில்லே... எலும்பு முறிவு. படுத்திருக்கான்...'' என்றான் கிருஷ்ணபாரதி.

''அவனைக் காட்ட மாட்டீங்களா...?'' என்று உரிமையுடன் கேட்டாள் சுசிலா. அவள் குரலில் தொனித்த உரிமை



உள்ளும் புறமும்

அவனுக்கு எரிச்சலூட்டியது. ஏதோ ஒரு பெரிய விபரீதம் நடக்கப் போகிறதென்று தயங்கினான் கிருஷ்ணபாரதி. சண்முகம் சோபாவில் உட்கார்ந்து வெளியே பார்த்துக் கொண்டிருந்தார். உள்ளறையில் மனோகரி அவனுக்கு வற்புறுத்தி தோசை ஊட்டிக் கொண்டிருந்த குரல் சுசிலாவுக்குக் கேட்டது. ''அடடே... அக்காவும் ஆபீஸ்லேர்ந்து வந்துட்டாங்களா...?'' என்று கேட்டுக் கொண்டே வருண் படுத்திருந்த அவர்களுடைய பெட் ரூமுக்குள் நுழைந்தாள் சுசிலா. வேறு வழியின்றி கிருஷ்ணபாரதியும் அவள் பின்னாலேயே சென்றான். சுசிலாவிடம் இப்படி நடந்து கொள்ள வேண்டியதிருக்கிறதே என்று அவனுக்கு அவமானமாக இருந்தது. மனோகரி திரும்பி சுசிலாவைப் பார்த்தாள். கோபத்தில் அவளுடைய கண்கள் அகல விரிந்தன.

''ஹலோ அக்கா... வருண் எப்படி இருக்கிறான்...?'' என்று சுவாதீனமாகக் கேட்டுக் கொண்டே, பாப்பம்மாளுக்கு அருகே சென்று கட்டிலில் படுத்திருந்த வருணைக் குனிந்து பார்த்தாள். வருண் அவளைப் பார்த்துச் சிரித்தான். கிருஷ்ணபாரதி மனோகரியின் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான். சுசிலா குனிந்து வருணுடன் பேசிக்கொண்டிருந்தாள்.

''வந்துட்டா சக்களத்தி...'' என்று பல்லைக் கடித்து முணு முணுத்துக் கொண்டே



வண்ணநிலவன்



தோசைத் தட்டை பாப்பம்மாளிடம் வேகமாகக் கொடுத்தாள். "நீங்களே உங்க பேரனுக்கு ஊட்டுங்க..." என்று சொல்லிவிட்டு, வேகமாகச் சமையலறையை நோக்கிச் சென்றாள். கோபத்தில் மனோகரியின் உடல் நடுங்கியது. என்ன செய்வதென்று தெரியாமல் பாத்திரங்களை எடுத்து 'தொப் தொப்' பென்று கீழே வைத்தாள். கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது. அங்கேயே நிற்பதா, மனோகரியைச் சமாதானப்படுத்துவதா என்று தெரியாமல் கிருஷ்ணபாரதி யோசித்துக் கொண்டே நின்றான். பாப்பம்மாளுக்கு வருணைப் பார்ப்பதற்காக சுசிலா வந்ததில் ரொம்பச் சந்தோஷம்.

கார்த்திகா படித்துக் கொண்டிருந்த அறைக்குள் நுழைந்து, அவளை அப்படியே இறுகக் கட்டிக் கொண்டாள் மனோகரி. சத்தமில்லாமல் அழுது கொண்டிருந்தாள். கார்த்திகாவின் கன்னத்தில் அவளுடைய கண்ணீர்பட்டது. கார்த்திகாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அவளுடைய முகத்தைக் கையினால் தள்ளினாள். "எதுக்கு அழுதே...?"' என்று கேட்டாள். ஹோம்- வொர்க் நோட் திறந்து கிடந்தது. வலது கையிலிருந்த பென்சிலை இடது கைக்கு மாற்றினாள் கார்த்திகா. அம்மாவின் கன்னத்தைத் தொட்டு "அழாதேம்மா..." என்றாள்.



கோபத்தில் மனோகரியின் உடல் நடுங்கியது. என்ன செய்வதென்று தெரியாமல் பாத்திரங்களை எடுத்து 'தொப் தொப்'பென்று கீழே வைத்தாள்.

"அப்பாதான் என்னை விட்டுட்டுப் போயிட்டாங்க. நீங்களாவது என் கூட இருங்க..." என்றாள் மனோகரி. அப்பா போயிட்டாங்களா? எங்கே போயிட்டாங்க? மனோகரி சொன்னது அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. அப்போது அறை வாசலில் கிருஷ்ணபாரதி வந்து நின்றான். கார்த்திகாவை மனோகரி கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவனுக்கு எரிச்சல் வந்தது.

"ஏன் அவளைப் படிக்க விடாமே பண்றே?" என்று கேட்டான்.

"எனக்கு என் பிள்ளை வேணும்... என் பிள்ளை வேணும்..." என்று சொல்லிக் கொண்டே கார்த்திகாவைத் தூக்கி மடியில் வைத்துக் கட்டிக் கொண்டாள்.

"நீங்க வேணுமானா அவ கூடப் போங்க. நானும் பிள்ளைகளும் எங்கேயாவது போறோம்... எங்கியாவது ஏன் போகணும்? எங்க அப்பா வீட்டுக்குப் போறோம்..." அவளுடைய இறுக்கத்தில் கார்த்திகா திணறினாள்.

"உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? குழந்தைங்க மனசைக் கெடுக்காதே. வீட்டுக்கு

வந்தவளை 'வா'ன்னு ஒரு வார்த்தை கேட்கத் தெரியலை... அவளைப் பார்த்ததுமே தட்டை வீசிட்டு வந்திட்டியே...? அவ என்ன புலியா, சிங்கமா? அவளுக்குக் காப்பி கொடு...'' என்று அவளுக்கு மட்டும் கேட்கிற குரலில் சற்றுக் கடுமையாகப் பேசினான் கிருஷ்ண பாரதி.

''அவளுக்கு நான் எதுக்குக் காப்பி கொடுக்கணும்? நீங்க போய் போட்டுக் குடுங்க. நீங்கதான் பெண்கள் உரிமை, பெண்கள் சுதந்திரம்ன்னெல்லாம் பேசறீங்களே? போய் காப்பி போட்டுக் கொடுத்து அவளுக்கு உபசாரம் பண்ணுங்க...''

அவளை நல்ல மனோதத்துவ டாக்டரிடம் அழைத்துப் போய்க் காட்ட வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது.

''பையன் அடிபட்டு வந்து கெடக்கிறான். அவனைக் கவனிக்காமே இங்கே வந்து உட்கார்ந்துக்கிட்டு என்னென்னமோ பேசறியே?''

''அதுக்குத்தான் என் சக்களத்தி வந்திருக்காளே...'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு கத்தினாள் மனோகரி. கார்த்திகாவுக்கும் அழுகை வந்தது.

''என் பிள்ளை அடிபட்ட விஷயம் எனக்குத் தெரியறதுக்கு முந்தியே அவளுக்குத் தெரிஞ்சு, அவ வீடு தேடி வந்துட்டா. அவ்வளவு ஒட்டுறவு ஒங்க ரெண்டு பேருக்குள்ளே.. இதிலே நான் மூணாவது மனுஷி எதுக்கு...?''



"அடடே... அக்காவும் ஆபீஸ்லேர்ந்து வந்துட்டாங்களா...?" என்று கேட்டுக்கொண்டே வருண் படுத்திருந்த அவர்களுடைய பெட்ரூமுக்குள் நுழைந்தாள் சுசீலா.

''எங்களுக்குள்ளே ஒரு எழவும், ஒரு மண்ணும் இல்லே...'' என்று எரிச்சலுடன் சொல்லி விட்டுத் தன் பெட்ரூமுக்குள் நுழைந்தான்.

சுசீலாவும் வருணுக்குத் தோசையைப் பிட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தாள். பாப்பம்மாள் அதை வெகுவாக ரசித்துக் கொண்டிருந்தாள். கிருஷ்ண பாரதிக்கு இப்போது சுசீலாவின் மீதே அளவு கடந்த எரிச்சலும், வெறுப்பும் ஏற்பட்டது. இவ்வளவு எழுதுகிறாள், பேசுகிறாள். சிறிது கூட இங்கிதமே இல்லையே. மேலே விழுந்து விழுந்து இப்படி அன்பைப் பொழிகிறாளே. இவளை யார் வீட்டுக்கு வரச் சொன்னது? நட்பு என்கிற சலுகையை எவ்வளவு தூரத்துக்கு அத்துமீறிப் பயன்படுத்த முடியுமோ, அவ்வளவு தூரத்துக்குப் பயன்படுத்திக் கொள்கிறாள். வருண் கிருஷ்ணபாரதியைப் பார்த்ததும், ''அப்பா, அம்மாவை எங்கேப்பா?'' என்று கேட்டான்.

''உள்ளேதான் இருக்காடா...'' என்றான் சலிப்புடன்.

''அதானே? அக்காவை எங்கே..?'' என்று

சுசிலாவும் ஆச்சரியப்பட்டாள்.

''ஒனக்கு காப்பி கலந்துட்டு வரப் போயிருப்பா...'' என்று பாப்பம்மாள் சொன்னாள்.

''அவ காப்பியும் கலக்கலை. ஒண்ணும் கலக்கலை. கார்த்திகாவோட இருக்கா...''

''ஐயோ... எனக்குக் காப்பி எல்லாம் ஒண்ணும் வேண்டாம்ப்பா... இப்போ வீட்டிலே போய்ச் சாப்பிட வேண்டியது தானே?'' என்று இயல்பாகப் பேசினாள் சுசிலா.

''அட, நீ ஒருத்தி... நான் போய் காப்பி போட்டுக் கொண்டுட்டு வர்றேன்...'' என்று பாப்பம்மாள் மெதுவாக எழுந்து சமையலறையை நோக்கிச் சென்றாள். அம்மாவிடம் போய் மனோகரி சண்டையை ஆரம்பித்து விடக்கூடாதே என்று கிருஷ்ண பாரதிக்குப் பயமாக இருந்தது. நல்லவேளையாக மனோகரி கார்த்திகாவுடனேயே இருந்தாள்.

வருணுக்கும் கார்த்திகாவுக்கும் ஏதோ புரிந்தும் புரியாதது மாதிரி மங்கலாகத் தோன்றியது. ஒன்று மட்டும் பளிச்சென்று அவர்களுக்குத் தெரிந்தது: அம்மாவுக்கு சுசிலா ஆன்ட்டியைப் பிடிக்கவில்லை என்பது.

''நீ ஹோம்-வொர்க் எழுது கார்த்திகா... அம்மாவுக்குத் தலையை வலிக்குது...'' என்று சொல்லிவிட்டு அந்தக் கட்டிலிலேயே படுத்துவிட்டாள் மனோகரி. பாப்பம்மாள் தட்டுத் தடுமாறி ஏதோ ஒருவிதமாகக் காப்பியைக் கலந்து கொண்டு வந்து சுசிலாவிடம் கொடுத்தாள். சுசிலா காப்பியைக் குடித்துவிட்டுப் புறப்பட்டாள்.

''கண்ணா நான் வர்றேன்டா... பேசாமே படுத்துத் தூங்கு...'' என்று வருணிடம் சொன்னாள்.

''சரி... பாரதி நான் வரட்டுமா? அக்கா உள்ளே ஏதோ வேலையா இருக்காங்க போலிருக்கு... சொல்லிடுங்க...'' என்றாள் சுசிலா. தலையை ஆட்டினான் கிருஷ்ணபாரதி. அவள் அங்கிருந்து போனால் போதும் போலிருந்தது. ஹாலில் உட்கார்ந்து அன்றைய ஹிந்துவைப் புரட்டிக் கொண்டிருந்த சண்முகத்திடமும், வாசல் வரை வந்து வழியனுப்பிய பாப்பம்மாளிடமும் சொல்லிக் கொண்டு போனாள் சுசிலா.

(தொடரும்)



"ஆபரேஷன் முடிஞ்ச பின்னால பேசாம இருக்கணும்."

"காமெடி பண்ணாதீங்க டாக்டர்... ஆபரேஷன் முடிஞ்ச பின்னால நான் எப்படி இருப்பேன்?..."

- கே.ஆனந்தன், தர்மபுரி

காதில்விழுந்தவை



உளசலாடும் கேப்டன்?

ஜெயலலிதாவும் விஜயகாந்தும் நெருங்கி வருவதாக மீடியா செய்திகள் சொல்லுகின்றன. 'விருத்தகிரி' படத்தைச் சீக்கிரம் முடித்து வெளியிடும் வேகத்தில், தாய்லாந்தில் பிஸியாக இருக்கும் விஜய காந்த், இது குறித்த எந்த முடிவையும் அவசர கதியில் எடுப்பதாக இல்லையாம். ''மனைவி பிரேமலதா, மச்சினர் சுதீஷ் ஆகியோர் சசிகலாவையும், டாக்டர் வெங்கடேஷையும் சந்தித்ததாகச் செய்தி கள் வந்தாலும், கேப்டன் யோசித்து வரு கிறார். ''தனித்து நின்று கிடைத்த தொடர் தோல்விகள் தொண்டர் களையும், பிரமுகர்களையும் ரொம் பவே தளர வைத்துவிட்டன. எனவே, அவர்கள் ஓர் அரசியல் தோழமை கிடைக்காதா என்று ஏங்கி வருகிறார்கள். தவிர, தேர்தலைச் சந்திக்க நிதிவசதியும் இல்லை. காங்கிரஸ்தான் எங்கள் முதல் சாய்ஸ். ஆனால், தி.மு.க. - காங்கிரஸ் உறவு, வரும் தேர்தலிலும் நீடிக்கும் வாய்ப்பே அதிகம். ஆக, இது வரை தே.மு.தி.க. குறித்து கேப்டன் சொல்லி வந்த தனித்தன்மைக்கு ஆபத்து வந்துவிட்டது'' என்கிறார் தே.மு.தி.க. வின் மாவட்டச் செயலாளர் ஒருவர். இந்தச் சூழலில், சமீபத்தில் துவக்கப்பட்ட கேப்டன் தொலைக்காட்சிக்கும் எதிர் பார்த்த வீச்சு இல்லையாம். கட்சிக்காரர் களிடம் கேட்கலாம் என்றால், பசையுள்ள சிலர் கட்சியிலிருந்து அழைப்பு வந்தால், தொலைபேசியைக் கூட எடுப்பதில்லை யாம்.

• • • • •

எஸ்.ஆர்.எம். கல்வி நிறுவனங் களின் நிறுவனர் பச்சமுத்து தனிக்கட்சி யைத் துவங்கியதற்கு பல காரணங்கள் இருந்தாலும், அதில் முக்கியமான ஒன்று, 'நன்கொடை நச்சரிப்பு' என்கிறார்கள். ''தேர்தல் வந்து விட்டால் கட்சி வித்தியாசம் பார்க்காமல் எல்லோரும் பாத் திரத்துடன் வந்து விடுகிறார்கள். சென்ற பாராளுமன்றத் தேர்தலில் 50 கோடி வேண்டும் என்று அடம்பிடித்தார் வட மாவட்ட மூன்றெழுத்துக் கட்சிக்காரர். பார்த்தார் பச்சமுத்து. நானே ஒரு கட்சியை நடத்தினால், மற்றவர்கள் நெருங்க யோசிப்பார்களே என்று துவங்கி விட் டார்'' என்கிறார் அவருக்கு வேண்டிய நண்பர் ஒருவர்.

• • • • •

மு.க.அழகிரி மகள் கயல்விழி, வரும் சட்டமன்றத் தேர்தலில் குதிக்க முடிவு செய்து விட்டாராம். அவரது கணவரின் மாவட்டமான கன்னியாகுமரியில் கழகத் துக்கு செல்வாக்குள்ள ஒரு தொகுதியைத் தேடிக் கொண்டிருக்கிறாராம்.

- சஞ்சயன்



நகுப்புன்னி ரகசியம்!

இன்றைக்குக் குண்டு துளைக்க முடியாத கண்ணாடிக் கூண்டு, 24 மணி நேர cctv காமிரா கண்காணிப்பு, பல மில்லியன் டாலர்களுக்கு இன்ஷியூரன்ஸ் என்று பாரீஸ் நகரின் லூவர் (Louvre Palace) அரண்மனை அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக இருக்கும் ஓவியம். 1911-ம் ஆண்டு இந்த மோனா லிஸா காணாமல் போயிருக்கிறது! திருடியவர் ஒரு இத்தாலி நாட்டுச் சாதாரண ஓவியர். படத்தைப் பிரதி எடுத்து விற்றுக் கொண்டிருந்தார். இரண்டு ஆண்டு கழித்து மாட்டிக் கொண்ட போது 'ஓவியனும், மாடலும் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கும்போது, இது பிரான்ஸில் இருப்பது தவறு என்பதால், நம் நாட்டுக்கு கொண்டுவந்து விட்டேன்' என்றார் சாமர்த்தியமாக! அவரது தேசபக்தியைப் பாராட்டி விடுதலை செய்துவிட்டார்கள்!

இந்த சுவாரஸ்யமான கதைகளைவிட, மோனா லிஸாவின் மர்மப் புன்னகையைப் பற்றி நடந்த ஆராய்ச்சிகளும், தகவல்களும்தான் மிக சுவாரஸ்யமானவை.

2005-ஆம் ஆண்டின் இறுதியில் ஆம்ஸ்ட்டர்டாம் பல்கலைக்கழகம் (நெதர்லாண்ட்) புகைப்படங்களிலிருந்து அதில்

இருப்பவரின் உணர்ச்சிகளை புரிந்துகொள்ள ஒரு மென்பொருளைத் தயாரித்திருந்தது. போட்டோக்களில் பயன்படுத்தி வெற்றிபெற்ற அதை இந்த ஓவியத்தில் பயன்படுத்திப் பல நாட்கள் ஆராய்ச்சிக்கு பின்னர் அறிவித்த முடிவு: ''மோனா லிஸா புன்னகை சந்தோஷமான புன்னகைதான். அந்த முகம், 83 சதவிகிதம் சந்தோஷம், 9 சதவிகிதம் வெறுப்பு, 6 சதவிகிதம் பயம், 2 சதவிகிதம் கோபம் என்ற கலவையில் இருக்கிறது. கண்களின் ஓரத்தில் தெரியும் சிறிய சுருக்கங்கள், உதடுகளின் மெல்லிய வளைவு எல்லாம் ஒரு சாராசரிப் பெண் சந்தோஷத்தில் இயல்பாகச் சிரிக்கும்போது ஏற்படுபவைதான்.''

அறிவிக்கப்பட்ட முடிவு ஓவியக் கலைஞர்களிடமும், கலை விமர்சகர்களிடம் சர்ச்சையை அதிகரிக்கச் செய்ததே தவிர, இறுதி விடையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

உலகப் புகழ்பெற்ற மோனா லிஸா ஓவியம் ஒருமுறை திருடு போயிருக்கிறது.

ஸ்பெயின் நாட்டின் நரம்புமண்டல ஆராய்ச்சியாளர்களின் பயிற்சிக்கூடம் மீண்டும் ஆராய்ந்தது! பல கட்டச் சோதனைகளின் முடிவில், கடந்த ஆண்டு (2009) அக்டோபர் மாதம் மோனா லிஸா புன்னகையின் மர்மத்தைக் கண்டுபிடித்துவிட்டோம் என அறிவித்தது. ''மோனா லிஸா புன்னகைக்கிறாரா, இல்லையா என்பது பார்ப்பவரின் கண்களிலுள்ள ரெட்டினா செல்களில் பதியும் பிம்பத்தையும், அது மூளையைச் சென்று அடையும் பாதையையும் பொறுத்தது. சில சமயங்களில் ஒரு பாதை வழியாகச் செல்லும்போது சிரிப்பது போலவும், மற்றொரு சமயம் வேறு பாதை வழியாகப் பிம்பம் மூளையை அடையும்போது சிரிக்காத மாதிரியும் தெரிகிறது. சில சமயம், ஒரே மனிதருக்கே கூட இரண்டு பாதைகளும் மாறி வேலை செய்யும். அதன் விளைவுதான் இந்தத் தோற்றம்' என்று சொல்லுகிறார் இந்த ஆராய்ச்சிக்குத் தலைமையேற்ற லூயிஸ் மார்டின்ஸ் ஓட்டீரோ என்ற நரம்பியல் விஞ்ஞானி.

''ஒரு படத்தின் மிகச் சரியான நடுப்புள்ளியில் இருந்துதான் பிம்பம் ரெட்டினாவில் பதிய ஆரம்பிக்கிறது. மின்னலைவிட வேகமாக நமது மூளையில் பதிவதற்குள், பாதை மாறினாலோ அல்லது ரெட்டினா சற்றே நகர்ந்தாலோ, படத்தின் நடுப்புள்ளி நம் மூளையில் பதியாது. ஓவியத்தின் சரியான நடுப்புள்ளியில் புன்னகையை எழுதியிருப்பதுதான் ஓவியனின் திறமை'' என்கிறார் இவர்.

லியானார்டோ டாவின்ஸி திட்டமிட்டு இதைச் செய்திருப்பாரா? வாய்ப்புகள் அதிகம் என்கிறார்கள் இந்த ஓவியனைப் பற்றி ஆராய்ந்தவர்கள். ''ஓவியம், கட்டிடக் கலை, பொறியியல் துறை, வான சாஸ்த்திரம், புவியியல் இப்படிப் பல துறைகளில் பிறவி மேதையாக, நிபுணராகயிருந்தவருக்கு இது ஒரு பெரிய விஷயமாக இருந்திருக்காது. இன்று நாம் பெரிதாக எண்ணி, கொண்டாடுகிற த்ரீடி படங்கள் பற்றி அன்றே அவரது கையெழுத்தில் எழுதிய குறிப்புகள் சமீபத்தில் கிடைத்திருக்கின்றன.''

– ரமணன்



நடக்குமென்பார் நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

மேஷம்:

முயற்சிகள் வெற்றிபெறும் வாரமிது. எண்ணங்கள் யாவும் ஈடேறும். வீடு/மனை வாங்கச் சிறந்த தருணம். உத்தியோக இடமாற்றம் உண்டு. நண்பர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். திருமணப் பேச்சு வார்த்தைகள் பலன் தரும். வம்பு, வழக்குகள் வெற்றி அளிக்கும்.

ரிஷபம்:

சற்று விழிப்போடு இருக்க வேண்டிய வாரம். குடும்பத்தில் விட்டுக் கொடுத்து நடந்து கொள்வது நலம். கொடுக்கல் - வாங்கலில் கவனம் தேவை. வாகனங்களில் பயணம் செய்வதிலும் கவனம் வேண்டும். வியாபாரத்தில் கூட்டாளிகளுடன் சுமுகமாக இருப்பது அவசியமாகிறது.

மிதுனம்:

வெற்றிகரமான வாரம். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். பணவசதி தாராளமாக இருக்கும். சிலருக்கு நீண்ட தூரப் பயணம் உண்டு. சிலர் வீடு மாற்றம் காண்பார்கள். வழக்குகளில் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. சுபச் செய்திகள் குடும்பத்தைக் குதூகலப் படுத்தும்.

06.06.2010 முதல் 12.06.2010 வரை

கடகம்:

மகிழ்ச்சி நிறைந்த வாரம். மனதுக்குப் பிடித்த சம்பவங்கள் நிகழும். அயல் நாட்டு மனிதர்களால் நற்பலன் ஏற்படும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உருவாகும். பணத்தட்டுப்பாடு நீங்கும். புனிதப் பயணம் மேற்கொள்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டாகும்.

சிம்மம்:

சில நற்பலன்கள் ஏற்படும் வாரம். சுபகாரியப் பேச்சுகள் பலன் தரும். பணப் பிரச்னை இருக்காது. மறைமுக சத்ருக்க ளால் சிறிது தொல்லைகள் ஏற்படும். இருப்பிடம் மாறும் சூழ்நிலை உண்டா கும். வியாபாரத்தில் லாபம் உண்டு. சில ருக்கு உத்யோக இடமாற்றம் ஏற்படலாம்.

கன்னி:

நல்லவை நிறைவேறும் வாரம். புதிய தொழில் முயற்சிகள் பலன் அளிக்கும். உற்றார் உறவினர்கள் உதவுவார்கள். மறைமுக வருமானம் இருக்கும். சில ருக்கு வெளியூர் பயணங்கள் வாய்க்கும். இறைவழிபாடு, சங்கடங்களை நீக்கும்; நற்பலன் பெருகும்.

துலாம்:

மகிழ்வு பொங்கும் வாரம். தொழில் வழி மாற்றம் உண்டாகும். பூமி மூலம் ஆதாயம் கிட்டும். குலதெய்வ வழிபாடு செய்து முடிப்பீர்கள். வாகன வசதிகள் ஏற்படும். குழந்தைகளுக்கான சுபச் செலவுகள் செய்வீர்கள். நற்பலன்களால் சந்தோஷம் காண்பீர்கள்.

விருச்சிகம்:

நற்பலன்கள் கிட்டும் வாரம். நண் பர்கள், உறவினர்கள் மூலம் நல்ல தகவல் கள் வந்து சேரும். நீண்ட காலப் பிரச்னை ஒன்று முடிவுக்கு வந்து மன துக்கு சந்தோஷத்தை அளிக்கும். வர வேண்டிய பணவரவு வந்து சேரும். வீடு/மனை வாங்க நல்ல நேரம்.

தனுசு:

மனநிறைவு தரும் வாரம். வேலைப் பளு குறையும். கடன் சுமை தீரும். சிலருக்கு சொந்த வீடு வாங்கும் யோகம் கிட்டும். பணவரவு உண்டு. நண்பர்கள், உறவினர்களால் அனுகூலம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

மகரம்:

வளம் தரும் வாரம். திடீர் தனயோகம் கிட்டும். உத்யோகத்தில் பதவி உயர்வு ஏற்படும். சிலருக்குப் புதிய பணி தேடி வரும். கடன் சுமை விலகும். வியாபாரத் தில் வெற்றிகள் உண்டு. குழந்தைகள் வழி சுபச்செலவு ஏற்படும். பொருளா தாரக் கஷ்டங்கள் தீரும்.


கும்பம்:

நன்மைகள் கிட்டும் வாரம். வாக்கு வன்மை மேன்மையாகும். பணக்கஷ்டம் இருக்காது. கடன் சுமை விலகிடும். நீண்ட தூரப் பிரயாணம் தேடி வரும். குடும்ப வாழ்வில் இருக்கும் பிரச்னை களுக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கும்.

மீனம்:

சுமுகமான பலன்கள் ஏற்படும் வாரம். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். பூர்விகச் சொத்து விற்பனையாகும். பூமி வழியில் யோகம் இருக்கும். பணக்கஷ் டம் இருக்காது. சிலருக்கு வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். ●





மாதப்பன்

"**தீ**ர்த்த மலைக்கு ஒரு தரம் வந்து செல்லுங்க. தீராத நோய் களெல்லாம் தீர்ந்து போகும்ங்க!" என்று பழைய திரைப்படப் பாடல் மெட்டுல, ராகத்தோட ஒரு குரல் காத்துல மிதந்து வந்துச்சு. மலையடிவாரத்துல மாதப்பன் என்பவர் பாடிட்டு இருந்தாரு. தீர்த்தமலை பயணத்துல நம்ப கூடவே வந்தவர், தீர்த்தமலை ரகசியங்களையும் அதிசயங்களையும் சொல்லிட்டே வந்தாரு.

தருமபுரி மாவட்டத்துல அரூர் நகரத்துலேருந்து, பதினைந்து கி.மீ. தூரத்துல உள்ளது இந்த மலை. லிங்க வடிவ மலை இது. புராண இதிகாச வரலாற்றுச் சிறப்பு கொண்டது. இராமன் வந்து, இந்தப் பூமியில சிவனை ரெண்டு எடங்கள்ல பிரதிஷ்டை செய்து வழிப்பட்டதா புராணங்கள் சொல்லுது. ஒரு இடம் இராமேஸ்வரம். இன்னொரு இடம் தீர்த்த மலை. புராண காலத்துல இதுக்கு ஹரி மலைன்னு பேரு. கடல் மட்டத்துலேருந்து இரண்டாயிரத்தைந்நூறு அடி உயர மலையில, பல இடங்கள்ல தீர்த்தம் எந்நேரமும் கொட்டிட்டே இருக்கறதால, காலப்போக்குல 'தீர்த்தமலை'னு பேரு நெலைச்சிடுச்சி. ஊருக்கும் தீர்த்தமலைன்னுதான் பேரு.

தீர்த்தமலையில கோயில் கொண்டிருப்பவரு, தீர்த்தகிரி ஈஸ்வரர். அவருக்குத் தோன்றாத் துணையாக அருகிருப்பவரு,




யோகம் தரும் தீர்த்தம்!



இயற்கையின் வழிபாடு!

அருள்மொழி வடிவாம்பிகை. சுவாமி சன்னதிகளையொட்டி மலைப்பாறை இடுக்குகள் வழியா, பல இடங்கள்ல தீர்த்தங்கள் அழகழகா கொட்டிட்டே இருக்கு. ஓய்வு ஒழிச்சல் இல்லாம இயற்கையே சுவாமிக்கு அபிஷேகம் செய்யுது. ஒவ்வொரு தீர்த்தத்துக்கும் ஒவ்வொரு பேரு. ஒவ்வொண்ணுக்கும் ஒவ்வொரு மகிமை, ஒவ்வொரு வகைக் குணம். தீர்த்தமும் ஒவ்வொரு வகை ருசி. இந்த மலைக்கு எதுத்தாப்புல இருப்பது அனுமன் தீர்த்தம். அதுக்கும் ஒரு கதை இருக்கு.

தீர்த்தகிரீஸ்வரருக்கு இப்பவும் உச்சி கால பூஜை மட்டும்தான். இராமர் வழிபட்டப்பவும் உச்சிகால பூஜை மட்டும்தான். தீர்த்தம் எடுத்து வரக் காசிக்குப் பறந்து போகிறார் அனுமன். திரும்பி வரக் கால தாமதம் ஆகுது. குறிப்பிட்ட நேரத்தில் பூஜை நிறைவடையணும். அதனால, மலைப் பாறைகள் மீது அம்பு எய்கிறார் இராமன். தீர்த்தம் கொட்டுது. சுவாமிக்கு அபிஷேகம் பண்ணி வழிபடத் தொடங்குறாரு. காசியிலேருந்து தீர்த்தத்தோடு அனுமன் மலையேறி வர்றாரு. பாதி தூரம் வர்றப்ப பூஜை மணி சப்தம் கேக்குது. கோபத்துல அனுமார் (அவருக்கு ராமர் பேர்ல கோபம் கூட வருமா?) தண்ணீர்க் கூஜாவைத் தூக்கி



பதினொரு தீர்த்தங்கள். மூலிகைத் தன்மை நிறைந்தவை.

அனுமன் தீர்த்தம் : உடல்ல உள்ள நச்சுத் தன்மையை நீக்கி, மனோபலத்தைத் தர வல்லது ● **இராமர் தீர்த்தம் :** தலை சம்பந்தப்பட்ட சீலைப்பேன், பொடுகு, புழுவெட்டு, சொட்டைகளை நீக்கும். சரும நோய்களைத் தீர்க்கும் ● **குமார தீர்த்தம் :** இதுல கந்தக சக்தி இருக்கு. சுறுசுறுப்பைத் தரக் கூடியது ● **கௌரி தீர்த்தம் :** மாலைக்கண் நோய் அகலும். மலட்டுத் தன்மை நீங்கும். குழந்தைப்பேறு கிட்டும். கல்யாண யோகம் வரும் ● **அக்னி தீர்த்தம் :** தேமல் மறையும், தோல் நோய் குணமாகும். காக்கா வலிப்பு மற்றும் ஜன்னி குணமாகுது ● **அகத்தியர் தீர்த்தம் :** மூலிகை நவபாஷாணத் தீர்த்தம் இது. குன்மம் என்கிற க்ஷயரோகம் குணமாகும். சர்க்கரை, ரத்த அழுத்த நோயைக் கட்டுக்குள் வைத்திருக்கும் ● **எம தீர்த்தம் :** உஷ்ண உடலைக் குளிர்ச்சிப் படுத்தும். இரத்தப் பித்த நோயைத் தணிக்கும் ● **வசிட்ட தீர்த்தம் :** உடல் வலிவு தரும். மனசுக்குப் பொறுமை தரும் ● **இந்திர தீர்த்தம் :** இளமையை நீடிக்கும். முதுமையைத் தாமதப்படுத்தும் ● **வர்ண தீர்த்தம் :** நினை வாற்றலைப் பெருக்கும் ● **வாயு தீர்த்தம் :** வாயுக் கோளாறுகள் போக்கும்.

வீசறாரு. அது போய் விழுந்த இடம்தான் அனுமன் தீர்த்தம். தீர்த்த மலையிலிருந்து பத்துப் பன்னிரண்டு கி.மீ. தூரத்துல இருக்கு. ஊத்தங்கரை பக்கத்துல.

இப்பவும், முறைப்படி தீர்த்தமலைக்கு வர்றவங்க, மொதல்ல அனுமன் தீர்த்தத்துல நீராடிட்டுதான் இங்க வர்றாங்க. தீர்த்த மலை அடிவாரத்துலேருந்து ஒரு கி.மீ.தூரத்துல மலை மேல கோயில் இருக்கு. மலைப்பகுதி முச்சூடும் மூலிகைச் செடிகள் வளர்ந்து கிடக்கு. மலையேறும் போது, அந்த மூலிகைக் காத்தை சுவாசிக்கறதே தனி சுகம். இராமர் தங்கியிருந்த மலை என்பதாலோ என்னவோ, வானரங்கள் எண்ணிக்கையில் அடங்காம உலவிட்டு இருக்கு. பொரிகடலையைக் தரையில கொட்டினா, அதுல, பொரிய அதுக சட்டை பண்றதே இல்லை. நிலக் கடலையையும் பொட்டுக் கடலையையும் தனியா பிரிச்சி பொறுக்கித் தின்னுகிட்டு இருக்குங்க!



ஆயிரம் லிங்கத்தோடு...

தீர்த்தமலை தீர்த்தங்கள்ல தலையிலே ஏந்திக் குளிக்கிறது ஒரு அனுபவம். பருகுறது ஒரு பரவசம். அதனையே சமையலுக்கும் பயன்படுத்தி, சகல நோய்களையும் விரட்டுவது ஒரு மகத்துவம். நாப்பத்தெட்டு நாள் தொடர்ந்து பயன்படுத்துறவங்களுக்கு, இப்பவும் எப்பவும் நோய்கள் வந்து தொல்லைகள் தர்றது இல்லே என்பது பக்தர்கள் நம்பிக்கை. தருமபுரி மாவட்டத் திலேயே, அருணகிரிநாத சுவாமிகளால் பாடல் பெற்ற திருத்தலம் இது ஒன்னுதான். வரலாறு பேசும் கல்வெட்டுகள் பதினெட்டு, இக் கோயிலில் உண்டு.



வாசகர் யோசனை:

கோவிந்தசாமி, ஊத்தங்கரை



கோகுலம்

ஜீன் 2010 விலை ரூ.8/-

குழந்தைகளின் குதூகலம்!

படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி வந்தே விட்டது!

முதல் பரிசு - ரூ. 10,000/-
இரண்டாம் பரிசு - ரூ. 7,500/-
மூன்றாம் பரிசு - ரூ. 5,000/-



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-2010

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ.500 சன்மானம் பெறும். யார் வேண்டுமானாலும், எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம். என்றாலும், எழுதுபவர் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு.

விதிமுறைகள்:

* கல்கியில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.

* சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்படமாட்டா.

* அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும், போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தர வேண்டும்.

* படைப்பாளி முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராக இருந்தால், அதற்கான ஏதாவதொரு அத்தாட்சி (பள்ளியிறுதிச் சான்றிதழ் போன்றவை. நகல் மட்டுமே அனுப்பவும்) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

* முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.

* தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால்தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

* போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும் வரை வேறு இதழுக்கோ, இணைய தளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக்கூடாது.

* பரிசுக்குரிய கதைகளை, நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

* முடிவு வெளியாகும் வரை, எவ்விதக் கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.

* 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2010' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கல்கி, கல்கி பில்டிங்ஸ்,
47-NP ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

* **கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி: ஜூன் 15.**

* **போட்டி முடிவும், முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 1 (01.08.2010) ஆண்டு மலரில் வெளியாகும்.**

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

- ஆசிரியர்



பிருந்தா எம்.பி.பி.எஸ். டு ஐ.ஏ.எஸ்.!



தருமபுரி, கிருஷ்ணகிரி

"நம்ம நாட்டுல மக்கள் தொகை அதிகம்; அது நம்மளோட வளர்ச்சிக்குத் தடையா?"

இது ஐ.ஏ.எஸ். நேர்முகத் தேர்வின்போது ஊத்தங்கரை பிருந்தாவிடம் கேட்கப்பட்ட கேள்வி. "ஒருபோதும் தடையில்லை. மக்கள் சக்தியை முழுமையாக, பரவலாகப் பயன்படுத்தினால், நம்முடைய வளர்ச்சி விகிதம் வீழ்ச்சியே அடையாது. மேலும், ஜனத்தொகைப் பெருக்கம் மிகக் குறைவாக உள்ள சில வெளிநாடுகளில், நம் மனிதவளத்தைப் பயன்படுத்தினால் நல்ல முன்னேற்றம் கிட்டும்." - பிருந்தாவின் இந்த பதில்தான் ஐ.ஏ.எஸ். தேர்வில் அகில இந்திய அளவில் ரேங்க் ஹோல்டராக அவரை உயர்த்தியிருக்கிறது.

சாதாரணக் குடும்பம். அம்மா - அப்பா இருவரும், சொல்லிக்கறாப்ல படிக்கலை. அப்பாவுக்குத் தெரிஞ்சதெல்லாம் விவசாயம் மட்டும்தான். அம்மாவுக்கும் காடுகரை வேலை தெரியும். பிருந்தாவோட அண்ணன் சங்கர். சென்னையில சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி வைச்சு நடத்திட்டு வர்றாரு. அவுரு ஏன்... அதை நடத்துறாரு? அவருக்கு ஐ.ஏ.எஸ். ஆகணும்னு ரொம்ப ஆசை, கனவு, லட்சியம் எல்லாமே இருந்தது. நெறைய அட்டெம்ப்ட் எழுதியும் அவரால பாஸ் பண்ண முடியலை. ஒரு அகாடமி ஆரம்பிச்சுட்டாரு. திருச்சி, கி.ஆ.பெ.மருத்துவக் கல்லூரியில எம்.பி.பி.எஸ். முடிச்சாங்க பிருந்தா. மேல்மருவத்தூர் மருத்துவக் கல்லூரியில பணி. வீட்ல அண்ணன் ஐ.ஏ.எஸ். ஆக முடியாமப் போனாலும் பரவாயில்லை; தான் ஐ.ஏ.எஸ். ஆகணும்னு பிருந்தா மனசுக்குள் சின்னப் பொறி. அண்ணனோட அகாடமியிலே சேர்ந்து படிச்சு முதல் முயற்சியிலேயே ஐ.ஏ.எஸ். ஆகிட்டாங்க.

"கிராமத்துப் பொண்ணு நான். என்னோட பணியில, கிராம மக்களுக்கான சேவை முன்னிலைப்படுத்தப்படும். மருத்துவம் - கல்வி- வேலைவாய்ப்புகள்ல கிராம மக்களுக்குச் சிறப்பாகத் திட்டங்கள் சென்றடைய அதிகமாகவே பாடுபடுவேன்!" எனச் சொல்கிறார் பிருந்தா!

வாசகர் யோசனை : **கவி செங்குட்டுவன்,**

ஊத்தங்கரை

திரும்பும் திசையெல்லாம் திருக்கோயில்களைக் கொண்டு திகழ்கிறது நம் தேசம். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று. கோயில் இல்லா ஊரில் குடியிருக்காதே என்றெல்லாம் சொல்லி, மனித வாழ்வை முறைப்படுத்தியது நம் மரபு. மக்களைக் காக்கவே இறைவன் கோயில் கொண்டிருக்கிறான் என்றால், அங்கே காண்கின்ற பிரம்மாண்டங்கள் எதற்காக? கோபுரம், கொடிமரம், விமானம், மண்டபங்கள்... இவற்றின் தேவை என்ன? எதை உணர்த்துவதற்காக இந்த சிருஷ்டிகள்? இந்தக் கேள்விகளுக்கு விடைதேடும் மீள்பார்வைத் தொடர் இது!

கண்டறியாதன

ஒளி ரேகைகள் கிழக்கு வாசலை வருடுகின்ற அதிகாலை! அந்த வேளையில், பெருவளை வாய்க்காலில் நீராடுவது ஒரு சுகம். உடலின் வெம்மை குறைந்து, மனம் ஒன்றிச் சன்னிதியில் வீற்றிருக்கும் சிவந்த முகக்காரியைத் தரிசிப்பது ஓர் ஆனந்தம்!

இரைச்சல் இல்லை; 'நகரு, நகரு' இல்லை; அமைதியாக, ரம்மியமாக, புத்தியும் மனமும் பொங்கித் ததும்புகின்ற அதிசய வேளை! மந்திர முழக்கமும், மணியொலியும், கைகோத்தபடி நிகழும் தீபாராதனை வெளிச்சத்தில், தாமரை மடலின் உட்புறச் செம்மையை வெளிப்படுத்தும் திருமுக மண்டலம்; 'ஓ... என்னைப் பார்க்க வந்திருக்கிறாயா?'' என்று விசாரிக்கும் புன்முறுவல்; 'என்ன கலக்கம்? நான் இருக்கிறேன். அஞ்சாதே?' என்று துணிவளிக்கும் நயனங்கள்; 'நாங்களும் உடனிருக்கிறோம்' என்றுணர்த்தும் எட்டு கர ஆயுதங்கள்; காலடியில் அசுரத் தலைகள்;

ஒளிரும் மகுடத்தின் பின்னே தகிக்கும் செந்தழல்; அந்த வெம்மையால் கருண்டு போகாமல், உயர்ந்து நிற்கும் நாகம்! மகாராணிபோல மலர்ந்த வீராசனக் கோலம்! ... என்றபோதும், அச்சத்தை ஏற்படுத்தாத அழகி ஸ்ரீ மாரியம்மன்.

வாள்கூரோ, வாழ்கின்ற செந்தமிழின் சொல்கூரோ, தோள் கொடுத்த இல்லாள் விழிகூரோ.. தெள்ளமுதே! நீயே திருவருள் கூறாய்; சமயபுரத்தாயே! நின் தாளே சரண்.



ஸ்ரீநிவாச ராகவன் - பதினெட்டு ஆண்டுகளுக்கும் மேல் ஆன்மிகப் பத்திரிகைகளில் பணி; அவை தொடர்பான பயணங்கள்; கட்டுரைகள்; நூல்கள்; ஊடகப் பணிகள்... என்று பல்வேறு தளங்களில் செயல்பட்டுக் கொண்டிருப்பவர். இவர் எழுதிய சித்திர பூமி சதுரகிரி, குருக்ஷேத்திரம், ராமன் எத்தனை ராமனடி போன்ற நூல்கள் பரவலான கவனத்தைப் பெற்றவை!



கண்டேன்!

எண்ணங்கள் ஒடுங்கி, ஒருநிலைப்பட்டு சன்னிதியில் நிற்கும் வினாடிகளுக்கும் யுகாந்திர பலம் உண்டு. சமயபுரம் ஓர் உதாரணம்!

விஜயநகரப் பேரரசு விஸ்தரிப்பின்போது, கம்பண்ண உடையாருக்கு வெற்றி கிடைக்க

ஈவியவள் என்று இந்தத் தேவியைச் சொல்வார்கள். அதை நிஜம் என்று நினைவூட்டுவதைப்போல, திருச்சிக்கு அருகே 'கம்பரசம்பேட்டை' என்றொரு ஊரும் இருக்கிறது.

ஊர்ப் பெயரே ஒரு வரலாற்றைச் சொல்கிறது என்றால், திசையெங்கும் அருள் நிலையங்களாக வியாபித்திருக்கும் ஆலயங்கள் என்ன சொல்கின்றன? கோபுரம், கொடிமரம், விமானம், சிற்பம்... என்று இவ்வளவு பகுதிகள் ஏன்? திருவிழாக்களின் தேவை என்ன?

'அச்சத்தின் விளைவாக, மனிதனால் கற்பிக்கப்பட்ட கருத்துதான் இறைவன்.' என்று சொல்வது சரிதானோ? இப்படியெல்லாம் சஞ்சலமும், சந்தேகமும் கேள்விகளை அடுக்கும்.'

சரி; சந்தேகம் கேள்விகளை எழுப்பட்டும். அனுபவம் பதில்

ஸ்ரீநிவாச ராகவன் 1 ஆலயம்

சொல்லுமா என்றால் சொல்லாது. ஏன்? அந்த அனுபவமே பதிலாகத்தான் இருக்கும். அனுபவம் என்பது, எப்போதுமே அனுபவத்தால் அறியப்படுவதுதான்; வார்த்தைகளால் அல்ல!

ஆண்டவன் விஷயமும் இப்படித்தான்.

மார்க்கண்டேயனுக்காக வெளிப்பட்ட காலசம்ஹாரர் கோலத்தை திருக்கடையூரில் தரிசிக்கிறோம். மார்க்கண்டேயனின் நம்பிக்கை மலையாக இருந்தது. அதனால்தான், சிலா ரூபத்திலிருந்து சீறி வெளிப்பட்டார் சிவன். ஆனால், நாம் மார்க்கண்டேயனாக இல்லை.

'இந்தத் தூணில் இருக்கிறான்' என்று உறுதிபடச் சொன்ன பிரகலாதனின் வாக்கை மெய்ப்பிக்க, தூணைப் பிளந்து வெளிப்பட்டான் நரசிம்மன்; ஹிரண்ய வதம் புரிந்தான்; ஆவேசம் ததும்பிய இந்தக் கோலத்தை 'அண்டங் கீறிச் சிரித்தது செங்கட் சீயம்' என்பான் கம்பன்.

இந்த உக்கிர ஸ்வரூபத்தை பாண்டிச்சேரி அருகிலுள்ள 'சிங்கர்குடி'யில் மூலவராகத் தரிசிக்கிறோம். ஆனால், நாம் பிரகலாதனாக இல்லை.

இந்த இரு சம்பவங்களிலுமே தொடர்பு இருக்கிறது. இருவருமே சிறுவர்கள். அதனால், அவர்களின் நம்பிக்கை அழுத்தமாய், வலிமையாய் இருந்தது.

'குழந்தைகளாய் இருக்கும்போதே - அவர்களுக்குள், நல்ல எண்ணங்களை, நல்ல சிந்தனைகளை, நல்ல பழக்கங்களை, நல்ல குணங்களை ஏற்படுத்திக் கொடுங்கள். அவையே, அந்தக் குழந்தைகளைப் பிற்காலத்தில் நல்லவர்களாக உருவாக்கிவிடும்.

- இப்படியொரு செய்தியைத்தான், இந்த ஆலயங்கள் நமக்கு மௌனத்தால் உபதேசிக்கின்றன.

இவை மட்டுமா? பசித்து அழுத பிள்ளைமேல் பரிவு கொண்டு பரமன் பாலூட்டிய தலம் சீர்காழி; பரமன்மேல் பரிவு கொண்டு, தன் கண்ணையே பெயர்த்துப் பரமனுக்கு அப்பிய வேடனின் தலம் திருக்காளத்தி!

நம்பிக்கைக்கு அடுத்த இடம் பரிவுக்கு!

உள்ளங்கவர் கள்வனாக இருப்பவன் தான், தாயினும் சாலப் பரிந்து உதவுகிறான். நம்பிக்கையும், பரிவும் கைகுலுக்கும் சமயத்தில் பக்தி ஒளிர்கிறது.

'பல காலம், தவமிருந்த பத்மபாதருக்கு நரசிம்மரின் தரிசனம் கிடைக்கவில்லை; ஆனால், மந்திரமோ, ஜபமோ செய்திராத



வேடனுக்கு, ஒரு நாளில் தரிசனம் கிடைத்தது' என்று ஸ்ரீசங்கர சரிதத்தில் செய்தி!

நம்பிக்கையும் பரிவுமே இறையருள் கைகூடுவதற்கான விசா. திருச்சியின் தாயுமானவரும், திருக்கருகாவூரின் கர்ப்பரட்சாம்பிகையும் இந்தப் பரிவுக்கு சாட்சியமாக விளங்குகிறார்கள்.

ஆலயங்கள் பெரும் தத்துவ விளக்கங்கள்!

'அண்டமாய் அவனியாகி அறியொணாப் பொருளு'மான இறைவன்,

இங்கே பலப்பல வடிவங்களிலே எழுந்தருளியிருக்கிறான். வாஞ்சிநாதரை வழிபட்டு திருமகளை அடைந்தார் திருமால் என்கிறது ஸ்ரீவாஞ்சியத்தின் தலபுராணம். அதே திருமால்தான், சிவபிரானின் சாபத்தை நீக்கியவராக ஹரசாபவிமோசனப் பெருமாள் என்று திருக்கண்டியூரில் தரிசனம் அருள்கிறார்.

இறை வழிபாட்டில், ஏற்றத்தாழ்வு இல்லை என்கிற நுட்பத்துக்கும் ஆலயங்களே சாட்சியங்கள்.

பிற்படுத்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த நந்தனாரைத் தில்லையிலே தன்னுள் ஒடுக்கிக் கொண்டான் ஆடல்வல்லான்; அதே குலத்தைச் சார்ந்த திருப்பாணரை, திருவரங்கத்திலே தன்னுள் ஒடுக்கிக் கொண்டான் அரங்கநாதன்!

பசிக்கு அழுத பிள்ளையின் மேல் பரிவு கொண்ட பரமன் பாலூட்டிய தலம் சீர்காழி!

இறைவனோடு தொடர்புடைய எதுவுமே அற்பமில்லை. நஞ்சைக் கக்கும் பாம்புக்கும், அந்தப் பாம்பைத் துரத்தும் பறவைக்கும்கூட ஆலயத்தில் இடமுண்டு. பிரபஞ்சத்தில் இறைவனுக்குத் தொடர்பில்லாத எதுவுமே இல்லை என்கிற சூட்சுமம் இது!

நம்முடைய பார்வையில், அற்பம் என நினைக்கும் கோவணம், ஒரு வணிகனின் சொத்துகளை மட்டுமல்ல; குடும்பத்தோடு அந்த வணிகனும் ஏறி அமரும் எடைக்குச் சமமாய் இருந்தது என்பது திருநல்லூரில் நிகழ்ந்த அற்புதம்!

வாணிபம் செய்து பொருளீட்டி, தன்னுடைய வருவாயில் சிவனடியார்க்குக் கௌபீனமும் உணவும் அளிக்கும் திருப்பணி புரிந்த அமர்நீதி நாயனாரின் சரிதம் நிகழ்ந்த தலம் இது. இங்குதான், தன்னுடைய திருவடியை திருநாவுக்கரசருக்குச் சூட்டியருளினார் சிவபிரான். சிவாலயங்களில் அபூர்வமாக சடாரி சாதிக்கும் திருத்தலம் இது!

இறைவன் 'பத்துடை அடியவருக்கு எளியவன்; பிறருக்கு அரிய வித்தகன்!'

பற்றுகளை விட்டால் இறைவனைக் காணலாம் என்றல்ல; அந்தப் பற்றை இறைவனிடம் கொண்டால், அவனைக் காணலாம். வெறும் யோகமும், ஞானமும், சாஸ்திர அறிவும், பூஜைகளும் மட்டுமே இறைவனைத் தரிசிக்கப் போதுமானதல்ல! இணையற்ற நம்பிக்கையும், அன்புமே இறையருளை ஈர்க்கின்றன.

மேலாடை நழுவுகிறதே என்று பதறிய பக்தையின் பொருட்டு, தன் தலையைச் சாய்த்து, அவள் சூட்டிய மாலையை ஏற்றருளினார் சிவபிரான். அப்படிச் சாய்ந்த லிங்கத் திருமேனியை நிமிர்த்தத் தன் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு இழுத்த குங்கிலியக் கலயருக்காகச் சற்றே நிமிர்ந்தும் கொடுத்தார் பெருமான். இந்த இரண்டுமே திருப்பனந்தாளில் நடந்த அற்புதம்தான்!

இப்படி மனித மனத்துக்கு மருத்துவம் பார்ப்பவை ஆலயங்கள்! கவலையுடன் நாடுகின்ற உள்ளங்களுக்கு ஆறுதலளிக்கின்றன. சஞ்சலிக்கின்ற மனத்துக்கு, துணிவூட்டுகின்றன. நம்பி நிற்கும் உள்ளங்களோ, தாமே ஆலயமாகின்றன. அங்கே இறைவன் எழுந்தருளவும் செய்கிறான். பூசலார் நாயனாரின் இந்த அற்புதமனக் கோயிலை, திருநின்றவூரின் இருதயாலீஸ்வரர் கோயில் இன்றும் உணர்த்திக் கொண்டுதான் இருக்கிறது.

ஆலயங்களில் இத்தனை காரணம் என்றால், அங்குள்ள கோபுரங்கள் எதைக் குறிக்கின்றன?

(அடுத்த வாரம் கோபுர தரிசனம்)

தாய்மண் காக்கும்

அந்த ஊர் எல்லையில நேதாஜி நற்பணி மன்றம் போர்டு இருக்குற பிராக்கெட்ல 'முன்னாள் இராணுவ வீரர்கள் மட்டும்' என்று அறிவிப்பு! ஒரு சங்கம் ஆரம்பிச்சு நடத்துற அளவுக்கு, முன்னாள் இராணுவ வீரர்கள் இந்தக் கிராமத்துல இருக்காங்களா? சந்தேகம் தட்டியது நம்ப சராசரி மூளைக்கு. சந்தேக வலையை விரிச்சோம். சட்டுன்னு வந்து மாட்டுனார் கோவிந்தன். அவரும் ஒரு முன்னாள் இராணுவ வீரர்தான்.

கிருஷ்ணகிரி மாவட்டத்துல தானம்பட்டி கிராமம். ஐந்நூறு குடும்பங்கள் வசிக்குது. ஒவ்வொரு குடும்பத்துலேர்ந்தும் குறைஞ்சது ஒரு நபராவது மிலிட்டரில இருக்காங்க. இல்லேனா முன்னாள் இராணுவ வீரரா இருக்காங்க.

''எங்க ஊர் இளந்தாரிகள் பிரிட்டிஷ்காரன் காலத்துலேர்ந்து இன்னிக்கு வரைக்கும், இராணுவத்துக்கு வேலைக்குப் போயிட்டிருக்காங்க. என் அப்பா கூட பிரிட்டிஷ் பீரியடுல இராணுவத்துல சேர்ந்தவர்தான். அவர் காலமாகி பல வருஷம் ஆகுது. என்னைச் சேர்த்து, என்கூட பொறந்தவங்க மொத்தம் அஞ்சு பசங்க. அதுல மூணு பேர் மிலிட்டரி. நான் விவசாயி!'' எனக் கூறும் ஹரிராமன், தானம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர்.

''வேற வேலைக்குப் போகாம ஏன் உங்க ஊர்ல எல்லாருக்கும் மிலிட்டரி மோகம்?'' எனக் கேட்டோம். ''எல்லாருக்கும் படிப்பு கம்மி. அப்ப அஞ்சாவது படிச்சாப் போதும். அதுக்கப்புறம் எட்டாப்பு. இப்ப ப்ளஸ் டூ. அதனால, மேற்கொண்டு படிக்காம பசங்க பெரும்பாலும் இப்பவும்




* கோவிந்தன்


* சத்யா


* ஹரிராமன்



சிப்பாய் கிராமம்!

தானம்பட்டி!

இராணுவ வேலைக்கு ஓடிப் போறாங்க. ஊர்ல, மூணு பேருக்கு மட்டும்தாங்க வேற வேலை. ஒருத்தரு போலீஸ். மத்த ரெண்டு பேரு டீச்சரு!'' என்கிறார் ஹரிராமன்.

சமீபத்துல மணிப்பூர்ல நக்ஸல்கள் வெறித்தாக்குதலில், இறந்து போன எண்பத்து நான்கு இராணுவ வீரர்களில் ஒருத்தர் தானம்பட்டி கிராமத்தின் தானப்பன்.

''வயசு நாப்பது. மனைவி, புள்ளைங்க இருக்கு. கிராமத்து மயானத்துல அன்னைக்கு ஒட்டுமொத்த கிராமமே திரண்டு நின்னுச்சு. இராணுவ மரியாதையோட தகனம் நடந்துச்சு'' என்கிறார் கிராமத்தின் முன்னாள் இராணுவ வீரர் ஒருவர்.

பத்து வருஷமாக இராணுவத்தில் இருக்கும் முனிரத்னம் என்பவரைத் திருமணம் செய்துகொண்ட சத்யா, ''கணவனைப் பிரிஞ்சு இருக்கறதுல கஷ்டம் ஏதுமில்லையா?'' என்று கேட்டால், டக்குனு பதில் பாய்ஞ்சு வருது: ''இதுல என்ன கஷ்டம்? வருஷத்துக்கு ஒரு தடவை ரெண்டு மாச லீவுல ஊருக்கு வந்துட்டுப் போறாங்க. ரெண்டு வருஷம் நானே அவுங்க கூடவே தங்கியிருந்தேன். கண்ணாலம் ஆகி நாலு வருஷம் ஆகுது. மூணு வயசுல பையன் இருக்கான். வாழ்க்கை சந்தோஷமாத்தான் போய்ட்டு இருக்கு!'' என்கிறார்.

''ஏழாம் வகுப்பு வரைக்கும் படிச்சுட்டு, பதினாறு வயசுல இராணுவத்துல சேர்ந்தேன். இருபத்தி நாலு வருஷம் சர்வீஸ்ல ஹவில்தாரா ரிட்டையர்டு ஆனேன்'' என்கிறார் கோவிந்தன். ''இப்ப எனக்கு மாசம் ஆறாயிரம் ரூபா பென்ஷன் வருது. வீட்டுக்குத் தேவையான மளிகை மற்றும் இதரப் பொருட்களை, எங்களோட கேம்ப் ஆஃபீஸ் கடைகள்ல மலிவு விலைகள்ல வாங்கிக்கறோம். இந்த ஊர்ல இப்ப மட்டும் சுமார் முந்நூத்தைம்பது பேர், இராணுவத்துல சர்வீஸ்ல இருக்காங்க. ரிடையர் ஆகி வந்தவங்கள்ல நூத்தைம்பது பேர், நேதாஜி நற்பணி மன்றத்துல செயல்படுறாங்க. சிக்குன்



குன்யா காய்ச்சல் பரவினப்ப, இந்த மன்றம் மூலமா பதினேழாயிரம் ரூபாய் மதிப்புல, கிராம மக்களுக்கு மருந்து மாத்திரைகள் வாங்கித் தந்திருக்கோம்.

இராணுவ வீரர் குடும்பங்களில் யாரும் இறந்துட்டா, ஈமச்சடங்கு செலவுகளுக்காக ஐந்தாயிரம் ரூபாய் தந்து வருது நேதாஜி நற்பணி மன்றம். எனக்கு ஒரே மகன். பத்தாம் வகுப்பு வரைக்கும் படிச்சான். அவனோட பத்தொன்பதாவது வயசுல, அவனையும் இராணுவத்துல சேர்த்து விட்டுட்டேன்!'' - பெருமிதம் சொட்டுகிறது கோவிந்தனின் குரலில்.

வாசகர் யோசனை:

இரா.கணேசன், சேலம்



சர்.தாமஸ் மன்றோ நினைவுத் தூண்!

தருமபுரி நகரம், மதிகோன்பாளையம் ஏரியா. திருப்பத்தூர் மெயின் ரோட்ல ஒரு மசூதி முன்பாக கம்பீரமா எழுந்து நிக்குது, ஒரு நினைவுத் தூண்! ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்துல சேலம்-தருமபுரி-கிருஷ்ணகிரி ஒன்றுபட்ட மாவட்டப் பகுதிகள்ல பனிரெண்டு கோட்டைகள் இருந்திருக்கு. அதனால இந்தப் பகுதி பாராமஹால் என அழைக்கப்பட்டுள்ளது. அதன் ரெவின்யூ அதிகாரியாக (கலெக்டர்) இருந்தவர் சர்.தாமஸ் மன்றோ.

1792 ஏப்ரல் முதல் 1799 மார்ச் வரைக்கும் ஏழு ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். அப்போது சிறந்த நிர்வாகியாகவும், நேர்மையான அதிகாரியாகவும், பொது மக்களிடம் நல்ல பெயர் பெற்றிருக்கிறார். அதனைப் போற்றும் விதமாக, அவரது மறைவுக்குப் பின்னர் ஆங்கிலேய அரசு, அவருக்கு நினைவுத் தூண் எழுப்பிக் கௌரவப்படுத்தியது. குறிப்பிட்ட மசூதி எதிரே, இப்பவும் அந்த நினைவுத் தூணை நீங்க பார்க்கலாம்.




லிட்டில் இங்கிலாந்து!

இங்கிலாந்து எல்லார்க்கும் தெரியும். லிட்டில் இங்கிலாந்து? அது நம்ப தமிழ்நாட்டுல இருக்கு. கிருஷ்ணகிரி மாவட்டம், தளி என்கிற ஊர்தான், லிட்டில் இங்கிலாந்து என ஆங்கிலேயர்களாலேயே அழைக்கப்பட்டிருக்கு. தமிழக வெயில் அவர்களைப் பாடாய்ப்படுத்தியபோது, அவர்களுக்கு ஓசூர் அருகேயுள்ள 'தளி' சொர்க்கபூமி. இங்கிலாந்து சீதோஷ்ணம் அதே தட்பவெப்ப நிலை 'தளி'யில். அதனால இந்த ஊரு ரொம்பப் புடிச்சுப் போயி, ஆங்கிலேயர்கள் பலரும் விரும்பி தங்கியிருந்திருக்காங்க. அவுங்க வெச்சிட்டுப் போன பேருதான் 'லிட்டில் இங்கிலாந்து!'



வேலம்பட்டி வெல்லம்!

தருமபுரி மாவட்டம், வேலம்பட்டி கிராமத்துல உருண்டை வெல்லம் உற்பத்தி கன ஜோர். அந்த ஊர் பேரை, யாரையும் கருத்துக் கேட்காம 'வெல்லம்பட்டி'னு வெச்சிடலாம். இந்தியாவுல முதன்முதலா கரும்பு உற்பத்தி, இந்த தருமபுரி மாவட்டத்துலதான் தொடங்கப்பட்டதாகச் சொல்றாங்க. வேலம்பட்டி சுத்தியுள்ள கிராமங்கள்ல கரும்பு சாகுபடி அமோகம். குறிப்பிட்ட கிராமத்துல, கரும்புப் பால்ல உருண்டை வெல்லம் காய்ச்சும் கொட்டாய்கள் நெறைய இருக்கு. இருபது லிட்டர் கொண்ட கரும்பு பால் ட்ரம். ஆறு ட்ரம் கரும்புப் பாலை அகலமான கொப்பரையில கொட்டிக் காய்ச்சுறாங்க. ஒரு கொப்பரை கரும்புப் பால்ல அதிகபட்சமா ஐம்பது உருண்டை வெல்லம் உற்பத்தி ஆவுது. வேலம்பட்டி உருண்டை வெல்லம், நல்ல தித்திப்புங்கோ.



தருமபுரிதான் டாப்ஸ்!

ஒஹோ... ஒசூர் ரோஜா!

ரோஜாப் பூக்களின் தாலாட்டில் ஒசூர் ரம்யமாக இருக்கிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தின் கெலமங்கலம், தளி, தேன்கனிக்கோட்டை, சூளகிரி, ஒசூர் பகுதிகள்ல ரோஜா மலர் உற்பத்தி அதிகம். இங்கிருந்து பெங்களூர் போய் இங்கிலாந்து, ஆலந்து, தாய்லாந்து, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகுது. 'ஒசூர் ரோஜா'ன்னா உலகம் பூரா தெரியும். காதலர் தினத்தன்று ரோஜாப் பூக்கள் அதிகமா விற்பனை ஆகும் இடங்களில் ஒசூர் ரோஜா சந்தைக்கு இந்தியாவில் முதலிடம். இங்கு விளையிற அடர்ந்த சிவப்பு நிறமுள்ள ரோஜா மலருக்கு, உலகம் முழுவதும் ஏகக் கிராக்கி. ரோஜா மலர்களில் அது தாஜ்மஹால் என வர்ணிக்கப்படுது. ஆண்டொன்றுக்கு சுமார் நூறு கோடி ரூபாய் அளவில் அன்னிய செலவாணி ஈட்டித் தருது ஒசூர் ரோஜா!



வாசகர் யோசனை:


கோவிந்தசாமி, ஊத்தங்கரை.

டேஸ்டி டூர்

லதா சேகர்

உலகிலேயே படு பாப்புலர் ஸ்வீட் என்றால் அது சாக்லெட்தான். ரொமான்டிக் கிஃப்டில் முதலிடம் இந்த கோக்கோ தேவதைக்கு.

வொர்கோஹலிக், அல்கஹோலிக் போல் சாக்கோ ஹோலிக்கும் உண்டு. எங்கும் எப்போதும் எந்நேரமும் சாக்லெட் வாயில். ''யார் சொன்னது சாக்லெட் கெடுதல் என்று... ரொம்ப நல்லதாக்கும், எத்தனைவித நன்மை தெரியுமா? சொல்றேன் குறிச்சுக்கோ...'' என ஒரு சாக்லெட்டானந்தா வாயில் அடக்கியபடியே





சொன்ன பெனிஃபிட் லிஸ்டை அப்படியே செப்புகிறேன்...

★ டார்க் சாக்லெட்டில் மினரல், மாக்னீஷியம், காப்பர்... என்று தடபுடலாக இருக்கிறது. இதயத் துடிப்பு சீராக வேலை பார்க்க உதவுகிறது.

★ சாக்லெட் சாப்பிடுபவர்கள் அதிக நாட்கள் உயிர் வாழ்வார்களாம்.

சுமார் 4000 வருடங்களுக்கு முன்னாலேயே, மத்திய அமெரிக்காவில் தொடங்கியது சாக்லெட் பயணம். 'மயன்' (மாயா) நாகரிகத்தில் கோக்கோ என்பது ஒரு புனிதமான பரிசு. கோக்கோ என்றால் அவர்கள் மொழியில் 'குட்ஃபுட்.'

1700-ல் சாக்லெட் என்பதை சாலட்டாகச் சாப்பிட முடியும் என்று மெக்ஸிகோவில் கண்டு பிடித்தனர். அதுவரை கோக்கோ ட்ரிங்க்தான். 1840-ல் பிரிட்டிஷ் கம்பெனிகளான காட்பரீஸ் மற்றும் ஃப்ரை அண்ட் சன்ஸ் எடிபிள் சாக்லெட் செய்து மக்களை அசத்த ஆரம்பித்தனர்.

கோக்கோ மரத்தின் அடிமரப் பகுதியில் முலாம்பழ வடிவில் காய்க்கும் பழங்களின் உள்ளே, இருபதிலிருந்து முப்பது கோக்கோ பீன்ஸ் இருக்கும். ஒரு பவுண்ட் சாக்லெட் செய்ய சுமார் 400 பீன்ஸ் தேவைப்படுமாம். மில்க் சாக்லெட், டார்க் சாக்லெட் என வகைகள் உண்டு. அமெரிக்கர்கள் மிக அதிகமாகச் சாப்பிடுவது மில்க் சாக்லெட் வெரைட்டி.

மெக்ஸிகோ புராணங்களிலேயே ''சாக்லெட்-சொர்க்கத்தில் கடவுளின் ஸ்வீட். கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டது சா





கடவுளின் ஸ்வீட்!

லெட்... மனித இனத்திற்கு ஸ்பெஷல் பரிசு கோக்கோ மற்றும் சாக்லெட்...'' என பக்திப் பெருக்கெடுத்து குரல்கம்ம சொல்கின்றனர்.

1615-ல் ஸ்பானிஷ் அரசிளங்குமரியான மரியா தெரஸா தன் வருங்காலக் கணவன் லூயிஸ் XIVக்கு எங்கேஜ்மென்ட் பரிசாக மிக நேர்த்தியுடன் அலங்கரிக்கப்பட்ட பெட்டியில், சாக்லெட்டைக் காதல் பரிசாகக் கொடுத்ததிலிருந்து காதல் சின்னமாக சாக்லெட்டிற்கு பிரமோஷன்.

பணக்காரர்களால் மட்டுமே சாக்லெட்டைச் சுவைக்க முடியும் என்று ஒரு காலம் இருந்தது. நிக்காரகோவா போன்ற இடங்களில் ஒரு அடிமையை வாங்க வேண்டுமென்றால் 100 கோக்கோ பீன்ஸ் கொடுத்தால் போதுமானது.

மிக அதிகமான கோக்கோ உற்பத்தி ஆப்ரிக்காவில்தானாம். சுவையான சாக்லெட் என்று பார்த்தால் ஸ்விஸ் சாக்லெட்டுகள் முன்னணியில் இருக்கின்றன. ஸ்விட்ஸர்லாந்து போய் சாக்லெட் பெட்டியுடன் இந்தியா திரும்பாதவர் உண்டா? ●

ஒரு சாக்லெட் ரெஸிப்பி ஈஸி அண்ட் சிம்பிள் இதோ...

தேவை:

மில்க் பவுடர், சர்க்கரை, கோக்கோ பவுடர், பட்டர், நட்ஸ்.

சர்க்கரை, மில்க் பவுடர், கோக்கோ மூன்றுமே சம அளவில் எடுத்துக் கொண்டு மில்க் + கோக்கோவை சலிக்கவும்.

✱ ஒரு கடாயில் சிறிதளவு தண்ணீர் விட்டுச் சக்கரையை அடுப்பில் வைக்கவும். கரைந்ததும் ஒற்றைக் கம்பிப் பதம் வந்த பிறகு, பால்+கோக்கோ மிக்ஸரை கலக்கவும். சிறிது பட்டரை போடவும்.

✱ நன்றாக எல்லாம் ஒன்று சேர்ந்து வந்தவுடன் கேஸை ஆஃப் பண்ணி இறக்கி விடவும்.

✱ பட்டர் தடவிய ப்ளேட்டில் கொட்டவும்.

✱ மேலாக நட்ஸை தூவி விடவும். கட் செய்யவும்.

✱ கெட்டியாக வேண்டுமானால் ப்ரிஜ்ஜில் வைக்கலாம்.

அவள் அப்படி ஒன்றும் அழகில்லை, வாயில் போட்டா சுவையில்லை, அப்படி ஒன்றும் கலரில்லை என்று யாருமே சாக்லெட்டைப் பார்த்துப் பாடவே மாட்டார்கள்!

அதியமான் கோட்டை அதிசயம்

● ஆயுள் வளர்க்கும் நெல்லிக் கனியை அவ்வைக்குத் தந்த அதியமான் ஆண்ட மண் தருமபுரி. அதற்குச் சாட்சியாக எழுந்து நிற்கிறது நெல்லிக் கனி தந்த மணியம்பாடி அய்யர் மலை. அடிவாரத்தில் வெங்கட்ரமண சுவாமி திருக் கோயில்.

● சங்க காலத்தில் தருமபுரியின் பெயர் தகட்டூர், தகடூர், தகடாபுரி. பூவின் புறவிதழ் அமைப்பைக் கொண்டதாகவும், தட்டை மலைகளைக் கொண்டதாலும் இப்பெயராம். பதினேழாம் நூற்றாண்டில்தான் தர்மபுரி என்று பெயர் பெற்றிருக்கிறது.

● கடையேழு வள்ளல்களில் அதியமான் அரசாண்ட பூமி. சாட்சி, அவன் காலத்தில் எழுப்பிய மண்கோட்டை மண் மேடாகக் காட்சி தருகிறது. கோட்டைச்



சுவரின் கிழக்கு நுனியில் அதியமான் காலத்தில் காசியிலிருந்து தருவிக்கப்பட்ட உன்மத்த கால பைரவர் அருள்பாலிக்கிறார்.

● கிட்டத்தட்ட 4 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்ட அதியமான் கோட்டையின் நடுப்பகுதியில், சென்றாய பெருமாள் கோயில், உள் மண்டபத்தின் மேற்சுவர்களில் மகாபாரத, இராமாயணக் கதைகளின் ஓவியங்கள் கவர்கின்றன. தொல்பொருள் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிற இக்கோயிலையும், பெருமாளையும் வந்து வணங்கிச் சென்ற வி.ஐ.பிக்களில் முக்கியமானவர்கள் ராஜீவ் காந்தி - சோனியா காந்தி.





● இக்கோயிலிலிருந்து தருமபுரி கோட்டைக் கோயிலுக்கு செல்லும் சுரங்க வழிப் பாதை இருந்திருக்கிறது. இப்போது பாதுகாப்புக் கருதி சுத வடைப்பு செய்திருக்கிறார்கள்.

● அதியமான் - அவ்வையின் நட்பைப் போற்றும்விதமாகத் தமிழக அரசால் அமைக்கப்பட்டிருக்கும் அதியமான் கோட்டம் முக்கிய சுற்றுலாத் தலமாகி வருகிறது.

● கோட்டத்துக்கு முன்புறம் அதியமான் பொன்தட்டில் வைத்து அவ்வைக்கு நெல்லிக்கனி தரும் காட்சி வெண்கலச் சிலையில் வடிக்கப்பட்டிருக்கிறது. சிலையின் மதிப்பு 5 லட்சம்; எடை கிலோ சுமார் அறுநூறு.

● வரலாற்றுத் தொன்மம் வாய்ந்த அதியமான் காலத்து நிகழ்வுகள் கோட்டத்தின் மண்டபத்தில் பதிக்கப்பட்டிருப்பது மேலும் ரசிப்புக்குரியது.

● எதிரிகளை மறைந்திருந்து தாக்கும் பொறிகள், அகழிகள் வைத்து அந்தக் காலத்திலேயே அற்புதக் கோட்டை கட்டியிருக்கிறார் அதியமான்.

வாசகர் யோசனை: **சேகர், தருமபுரி**

● **எஸ்.அமிர்தா, வடபழனி**

அண்ணலும் நோக்keyனார்.... ஜானkey அவளும் நோக்keyனாள்.... எல்லாமே key கவனிச்சீங்களா....?

அண்ணல் ராம்keyயை, அன்னை ஜானkeyயிடம் சேர்த்து வைத்த அனுமன் monkeyயை மறக்கலாமா....!

● **வி.ஜி.சத்தியநாராயணன், நங்கநல்லூர்**

அன்னப் பறவை இருந்தது உண்மையா?

சோத்துக்காக ஆலாய்ப் பறக்கும் நாம் எல்லோருமே ''அன்னப்பறவைதான்''!

● **எ.இ.ராகவன், கரூர்**

ஆண்களின் வாய்க்கு 'தையல்' போடுவதால் பெண்களுக்கு 'தையலார்' என்று பெயர் வந்ததோ?

பாஸிடிவ்வாகப் பார்த்தால்.... பெண்கள் தேவதையாக இருந்தாலும் ராக்ஷஸியாய் இருந்தாலும், அன்பு செலுத்துவதில் ஒரே மாதிரி "Tailor-made" ஆக இருப்பதால், 'தையலார்' என்று வந்திருக்கலாமில்லையா. மேலும் விட்டுப் போன உறவுக்கும் ஒட்டுத் தையல் போடுபவள் பெண். ஆண் 'கந்தையானாலும் கசக்கிக் கட்டுவான்'.... ஆனால் பெண் அந்தக் கந்தையைத் தைத்துக் கொடுப்பாள்; அதனால் தையலை வாழ்த்துவோம்.

● **இ.ராஜலட்சுமி, ஹூப்ளி**

''ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் செய்யலாம்'' என்று சொல்வது தவறில்லையா?

சொன்னவர் 'கல்யாணம் ஆயிரங் காலத்துப் பொயிர்' என்று தவறாகப் படித்திருப்பார்!



● **கு.சங்கர், திருப்பரங்குன்றம்**

'நாம் இன்னும் அதற்குத் தயாராக வில்லை' என்பது என் பதில் என்றால், தங்கள் வினா என்னவாக இருக்கும்?

''நாம் (ஆண்கள்) ஏன் தாயாராவதில்லை''?

● **போ.வெங்கடலட்சுமி, கோவில்பட்டி**

''காபி'' ராகம் சரி....''டீ'' ராகம்?

பொண்டாட்டி ''டீ'' ராகத்துக்கு கணவன் தலை ''ஆட்டி'' தாளம்....!

● **''குலசை'' க.மீ.நஜ்முதீன், காயல்பட்டினம்**

அந்தக் காலத்துப் பெண்களுக்கும், இந்தக் காலத்துப் பெண்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

படும் பாடு வேறு....!

தையல

● **குருசாமி, அரசரடி**

ஒரு நூல் எப்படி இருக்க வேண்டும். எப்படி இருக்கக் கூடாது. ஒரு வாசகனாகக் கூறுங்கள்?

கண்டபடி நூலில் கயிறு திரித்தால் வாசக தோஷம். நேர்மையாக நூல் பிடித்தாற் போல் இருந்தால் வாசக சந்தோஷம்!

● **பா.அசோக், திருவில்லிப்புத்தூர்**

பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே நறுமணம் இருந்தால்?

Romance ''ரோமா''ன்ஸ் ஆகிவிடும்....!

● ப.கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி

உலகத்தைப் 'பார்' என்று சொல்வது ஏன்?

தன்னைத்தானே சுற்றியபடி தள்ளாடி நகர்வதால் "BAR"!

● என்.சீத்தாலட்சுமி, சென்னை

செத்தவன் கையில் வெத்திலைப் பாக்கு வைப்பது ஏன்?

ஆளுக்காள் போட்ட வாய்க்கரிசி ஜீரணமாக வெத்திலைப் பாக்கு. செத்தவனுக்கு ஏது ஜீரணம் என்கிறீர்களா? அதுதான் 'DIEgestion'..!

● அ.அப்துல் காதர், மேற்கு தாம்பரம்

ஏழை, பணக்காரன் இருவருக்குமே தீர்க்க முடியாத பிரச்சினை எது?

பணப் பிரச்னை. ஏழைக்கு பிரச்னையைத் தீர்ப்பதில் பிரச்னை.... பணக்காரனுக்கு பணத்தைத் தீர்ப்பதில் பிரச்னை!

வாழ்த்துதுமே!



● மு.மதிவாணன், அரூர்

மனைவி மந்திரி ஆவது எப்போது?

கணவன் முந்திரி(கொட்டை) ஆகும்போது!

● எம்.செல்லையா, சாத்தூர்

ஔவை இன்றிருந்தால்?

அவ்வை இல்லத்தில் சேர்த்திருப்பார்கள். அவரும் பாவம் 'முதியோர்தம் தலைவாசல் மிதித்து விட்டேன்' என்று முனகியிருப்பார்கள்! ●

கலக்க வருதுப்பா

கல்கி

ரீடர்ஸ் கெட் ரெடி

விருதுநகர் மாவட்ட வாசகர்களே!

இப்ப உங்க ஊருக்கே வருது கல்கி டீம்...

- உடனடித் தேவை?
- உங்கள் ஊர்ப் பெருமை?
- வாட்டம் தரும் வேதனை?
- அமைதி தரும் ஆலயங்கள்?
- பெருமைப்பட வைக்கும் தலைவர்கள்?
- மனசைச் சுத்திகரிக்கும் டூரிஸ்ட் ஸ்பாட்?
- கலை இலக்கியத்தில் உங்க மாவட்டத்தின் பங்களிப்பு?
- அடிப்படைத் தேவைகள் நிறைவேறிடுச்சா... இல்லையா?



வாசகர்களே...



உங்க மாவட்டத்தைப் பத்தி நீங்க அனுப்புற தகவல்கள்தான் கல்கி விருதுநகர் மாவட்ட ஸ்பெஷல் இதழ்களுக்கு அஸ்திவாரம்!

விவரங்கள் எதிர்ப்பக்கத்துல இருக்கு!

விருதுநகர் மாவட்ட வாசகர்களே...

கெட் ரெடி! கெட் ரெடின்னேன்!

ஆமாம்! உங்கள் விருதுநகர் மாவட்டத்துக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்புகள் மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனிக் கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- விருதுநகர் மாவட்டத்தின் பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ். ஆன்மிக, வியாபார, சுற்றுலாத் தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன். சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல். நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்... என்றவாறு, கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசித் தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கடிதங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி : 18.06.2010

கலக்க வருதுப்பா கல்கி
விருதுநகர் மாவட்டம்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடுறோம்!

அன்ன சவாரி!



கிருஷ்ணகிரி மக்களின் சமீபத்திய குளுமையான பொழுதுபோக்கு. அவதானப்பட்டி குளத்தின் படகு சவாரியும், அதனையொட்டி இருக்கும் பூங்காவும்தான். இந்தக் குளம் கே.ஆர்.பி. அணைக்கட்டின் கருணையால் பிறந்த குழந்தை. கிட்டத்தட்ட 40 ஏக்கர் பரப்பளவு கொண்ட இக்குளத்துக்கு அணையிலிருந்து புதுத் தண்ணீர் வந்து கொண்டிருக்க, பழைய தண்ணீர் பாசனத்துக்காக வெளியேற்றப்பட்டுக் கொண்டே இருக்கிறது. எனவே, புதுத்தண்ணீரில் படகு சவாரி புத்துணர்ச்சி மட்டுமல்ல, புதுத் தெம்பையும் தருகிறது. 2004-ல் கிருஷ்ணகிரி கலெக்டராக இருந்த மங்கத்ராம் என்பவரின் கனவுதான் அவதானப்பட்டி படகு சவாரிக் குளமாக விரிந்திருக்கிறது. எழுந்து நிற்கும் இரண்டு மலைகளுக்கு நடுவே தேங்கித் தளும்பும் இக்குளத்தின் கரைகளில், மாவட்டத்தின் புகழ்பெற்ற மாரியம்மன் கோயில், காட்டுவீர ஆஞ்சநேயர் கோயில் ஆசீர்வாதங்களைத் தர ஆயத்தமாக இருக்கின்றன. பத்து அடி ஆழம் கொண்ட அவதானப்பட்டி படகு சவாரிக் குளத்தில், சவாரியின் போது ஏதேனும் அசம்பாவிதம் நிகழ்ந்தால், காப்பாற்றுவதற்காக நான்கு பேர் கொண்ட முதலுதவிக் குழு ஒன்று படகில் ரோந்துப் பணியில் வருவது போலச் சுற்றிக்கொண்டே வருகிறது. அன்னப்பறவை வடிவில், முதலை வடிவில், மீன் வடிவில் உள்ள படகுகளில் சவாரி செய்வது, மனத்தின் மென்மையான பக்கங்களை வருடி விடுகிறது. பழுது நீக்கப்பட்ட ஊஞ்சல் பலகைகளும், குழந்தைகளை மகிழ்விக்கும் ரங்கராட்டினங்களும் பூங்காவுக்குப் புதுப்பொலிவைக் கொடுக்கின்றன. அங்கிருந்து தெற்கு நோக்கி சேலம் மெயின் ரோட்டிலே மூன்று கிலோ மீட்டர் தூரத்தில்







வளசை திருவிழா!

இருக்கிறது கிருஷ்ணகிரி டேம். தென் பெண்ணையாற்றின் கொடை. காமராஜர் காலத்தில் கிருஷ்ணகிரிக்குக் கிடைத்த வரப்பிரசாதம். இந்த அணையைச் சுற்றியிருக்கும் பகுதியில் பசுமையின் ஆதிக்கம் அதிகம். மாவட்டத்தின் சுற்றுலாத் தலைவர் என்று கிருஷ்ணகிரி அணையைச் சொல்லலாம். வளசைத் திருவிழாவின் போது, குடும்பம் குடும்பமாக இங்கு கூடும் மக்களால் அணை அழகாகி விடுகிறது. ''சென்னை ராஜ்யத்தின் முதன் மந்திரி திரு.க.காமராஜ் நாடார் அவர்கள் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தினைத் திறந்து வைத்ததன் ஞாபகார்த்த சின்னம் இது'' - என்கிற அறிவிப்புப் பலகையோடு ஆரம்பமாகும் அணைப் பகுதியின் வலது-இடதுபுறங்களில் 35ஏக்கர்,15 ஏக்கரில் பூங்காக்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. மான் காட்சி யகம் மனத்தைக் குதூகலப் படுத்து கிறதெனில், தென்பெண்ணையாற்று நீர் குளிப்பாட்டி அனுப்பி வைக்கிறது. இன்னும் கவனமாகச் சாலை வசதி களைச் செய்திருக்கலாம் அணையின் மேற்பகுதியில், கன்னா பின்னாவென்று அலையும் ஓடும், குதிக்கும், மக்களை ஒழுங்குபடுத்தி உதவப் போதிய பணியாளர்கள் இல்லை, அணையின் பெருமைகளையும், முக்கியத்துவத் தையும் சொல்ல கைடுகளை ஏற்பாடு செய்வதில் நிர்வாகத்துக்கு என்ன சிக் கலோ தெரியவில்லை. ஆங்காங்கே காரைபெயர்ந்து விரிசல் விட்டிருக் கும் அணைப் பகுதிகளைப் பழுது நீக்க பொதுப் பணித் துறைக்கு எப் போது யோசனை வரும் என்றும் தெரியவில்லை. கிருஷ்ணகிரி மட்டுமல்ல, மாவட்டத்துக்கே நீர் ஆதாரமாக இருக்கும் இந்த அணையை அதிக அக்கறையோடு கவனித்துப் பராமரித்தால், நீர்த் தாயின் ஆசீர்வாதம் கிருஷ்ணகிரியை இன்னும் வளப்படுத்தும்!

வாசகர் யோசனை:
கோபி பச்சமுத்து, கிருஷ்ணகிரி



கிருஷ்ணகிரி அணையின் சுற்றுவட்டார பகுதி மட்டுமே செழிப்பாக இருக்கிறது.

மாஸ் மசாலா சினிமா ரூட்டில் சற்றும் மனம் தளராமல் வேகமெடுத்திருக்கிறது சிங்கம். கொடுவா மீசை, கர்லாகட்டை தோள்கள், தொண்டைக் கிழிய சவுண்டு, நரம்பு புடைக்கும் சண்டை, நச் நச் என்று வசனங்கள். செண்டிமெண்டுக்கும் லவ்ஸுக்கும் ஆடைகுறை அனுஷ்கா. இரண்டரை மணி நேரமும் புல்லட் ட்ரெயின் ஸ்பீடு. நின்று நிதானித்து யோசிப்பதற்குள், 'சிங்கத்தின் வேட்டை தொடரும்' என்று இறுதி டைட்டில் கார்டு ஓடத் தொடங்கி விடுகிறது.

தீயவர்களைப் பந்தாடும் வீரமிக்க இளைஞன் என்ற ஒன்லைனுக்கு வெரைட்டி விருந்து, ஹரி. தூத்துக்குடி மாவட்ட நல்லூர் சப்-இன்ஸ்பெக்டர் சூர்யா, எப்படி சென்னையில் ஆள் கடத்தல் செய்யும் பிரகாஷ்ராஜை வேட்டையாடி, நெல்லூரில் வைத்துக் கொல்லுகிறார். நடு நடுவே ஜில் பிரதேசங்களில் அனுஷ்காவோடு கொஞ்சம் மாடர்ன் குத்தாட்டம். அப்பா செண்டிமெண்ட், போலீஸ் பிரதாபம், அச்சுபிச்சு காமெடி, அரிவாள், துப்பாக்கி என்று கனகச்சித கமர்ஷியல் காக்டெயில். இதெல்லாம் பழசுதான் என்றாலும், சீட் நுனியில் உட்கார வைத்ததுதான் டைரக்டர் ஹரியின் சாமர்த்தியம்.

வேகத்துக்கு நடுவே பொடிசு பொடிசாய் மின்னும் சில பளிச் அழகுகள் உண்டு. அனுஷ்கா ஐ லவ் யூ சொன்னவுடன், சூர்யா முகத்தில் சட்டென ஒளிரும் தயக்கம்+அதிர்ச்சி, வீட்டுக்குப் போய் கண்ணாடி முன்னால் நின்று தன்னையே ரசித்துப் புன்னகைப்பதில் போய் முடியும். நாசரின் டிரைவிங் லைசென்ஸ் காலாவதி ஆகிவிட்டது என்பதும் அதைத் தொடர்ந்து அனுஷ்கா அடிக்கும் கமெண்டுகளும் தியேட்டரில் நல்ல கலகல.

பாடல்களிலும் பின்னணி இசையிலும், தேவிஸ்ரீபிரசாத்துக்கு மாஸ் ருசி பிடிபட்டு விட்டது. பிரகாஷ்ராஜும், சூர்யாவும் மோதும் இடங்களில் வசனங்கள் பளபள

சிங்கம்



கத்தி. கேமரா எடிட் டிங் என்று எதைத் தொட்டாலும் டாப் கியர்.

மொத்த படத்தையும் தூக்கி நிறுத்துபவர் சூர்யா. அடுத்த படம் வரை, ரசிகைகளின் கனவிலும், ரசிகர்களின் நினைவிலும் தூக்கப் போகிறார். அனுஷ்கா சீக்கிரம் மும்பைக்கு ஏற்றுமதியாக எல்லாத் தகுதியும் படைத்த வெண்ணெய் சிற்பம்.

காமெடி என்று, கொடுங்கையூர் குப்பைமேடு ரேஞ்சுக்குப் போகிறாரே விவேக்! இனியும் அவரை சின்னக் கலைவாணர் என்று அழைப்பது நியாயமாகுமா?

சிங்கம் - கமர்ஷியல் பாய்ச்சல்.

- ஆர்.வெங்கடேஷ்

சினிமா விமர்சனம்

''யாரும் சொல்லலாம் எங்கள் பிரச்னையை...''



''பால்ய விவாஹம் தருமபுரி மாவட்டத்தின் ஆந்திர, கர்நாடக எல்லையோரக் கிராமங்களில் நடைபெறும் விஷயம். மிக இளம் வயது திருமணங்களைச் செய்பவர்கள் அனைவருமே இம்மாவட்டத்தின் கன்னட, தெலுங்கு பேசும் மக்கள்தான். தமிழ்க் குடும்பங்களில் இவ்விஷயங்களை அதிகமாகப் பார்க்க முடியாது! தருமபுரி மாவட்டத்துக்காரர், கோரிப்பாளையம் ஹீரோ 'ராமகிருஷ்ணன்'. இவர் இயக்குநர் சேரனின் உதவியாளரும் கூட.

''வறட்சியான மாவட்டம், 'வானம் பார்த்த பூமி' எனப் பல குறைகள் எங்கள் மாவட்டத்துக்கு இருந்தாலும், இதெல்லாம் இந்த மாவட்டத்தின் ஒருசில பகுதிகளுக்கு மட்டும்தான் பொருந்தும். நான் பிறந்தது இம்மாவட்டத்தின் பில்பருத்தி கிராமத்தில். வளர்ந்தது மெனசி என்ற ஊரில். நிறைய உறவுகளையும் நட்பையும் தந்த ஊர் இது. இந்த மாவட்டத்தைப் பற்றி ஆழமாக அறிந்து கொள்வதற்கு முன்பாகவே, சென்னை வந்து விட்டேன். பதினேழு வயதுக்குப் பிறகு தர்மபுரி மாவட்டத்தைப் பற்றி அதிகம் அறிந்து கொண்டது எல்லாமே மீடியா மூலமாகத்தான்.

இந்த மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்னையை, ஒரு படைப்பாளியாக சினிமாவில் கொண்டு வரலாமே என்று சிலர் என்னிடம் கேட்கிறார்கள். எங்கள் மாவட்டக் குடிநீர்ப் பிரச்னையை நான்தான் சொல்ல வேண்டும் என்று நினைப்பதே குறுகிய எண்ணத்தின் வெளிப்பாடு. இப் பிரச்னையை யார் வேண்டுமானாலும் திரையில் சொல்லலாமே!'' என்கிறார் ராமகிருஷ்ணன்.

''இன்றைய தமிழ் சினிமாவில் கோவை, மதுரை மாவட்டத்துக்காரர்களின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. தருமபுரி மாவட்டம், சேலம் மாவட்டத்துடன் இணைந்திருந்தபோது நிறைய சினிமாக்காரர்களை இந்த மாவட்டம் தந்திருக்கிறது. மீண்டும் வெகு விரைவில் நிறையப் படைப்பாளிகளை இம் மாவட்டத்திலிருந்து எதிர்பார்க்கலாம்.

- ராகவ்குமார்



செம்மொழி மாநாட்டு ஏற்பாடுகள் சுறுசுறுப்பாக நடந்துகொண்டிருக்கும் வேளையில், ஒரு தமிழ் இளைஞர் இமயமலையில் ஏறி, எவரெஸ்ட் சிகரத்தில் நின்றுகொண்டு 'தமிழ் வாழ்க' என்று உரக்கக் குரலெழுப்பி இருக்கிறார். அவர் பெயர் சந்தோஷ் குமார். சென்னையில் பிறந்து வளர்ந்து, சிங்கப்பூரில் இஞ்சினியரிங் முடித்து அங்கேயே வேலை பார்த்தவர். அண்மையில் சென்னை வந்திருந்த சந்தோஷ் குமாருடன் ஒரு சந்தோஷமான சாதனை சந்திப்பு:



'**நா**ன் சிங்கப்பூரில் 2006-ல் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது, ஒரு நண்பர் சொன்னதன்பேரில் விளையாட்டுப் போல ஒரு மலையேற்றக் குழுவில் இடம்பெற்று, இந்தோனேஷியாவில் மலை ஏறினேன். பல சிரமங்களுக்குப்பின் முறைப்படி மலை யேற்றப் பயிற்சி எடுத்தேன்.

எனது இலட்சியமான, எவரெஸ்ட் சிகரத்துக்கு மலையேற்றப் பயணம் மேற்கொள்ள சுமார் 25 லட்சம் ரூபாய் தேவை என்பதால், பல்வேறு ஸ்பான்சர்கள் மூலமும் அதற்கு ஏற்பாடு செய்துகொண்டு எவரெஸ்ட் பயணத்துக்குத் தயாரானேன்.

எங்கள் குழுவில், உலகின் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த மொத்தம் 24 மலை யேறுபவர்கள் இருந்தனர்.

கடந்த மார்ச் 28ஆம் தேதி சென்னையிலிருந்து புறப்பட்டு மறுநாள் காட்மண்டுவை அடைந்தேன். காட்மண்டுவிலிருந்து 2000 மீட்டர் உயரத்தில் உள்ள ஓர் இடத்துக்கு ஹெலிகாப்டர் மூலம் சென்று, அங்கிருந்துதான் நடந்தே இமய மலையேறுவது ஆரம்பமாகிறது.

இமயத்தில் 5300 மீட்டர் உயரத்தில் ஒரு முகாம் உள்ளது. இதற்கு பேஸ் கேம்ப் என்று பெயர். இங்கே இருந்து உணவு, தங்குவதற்கான டென்ட்கள், இதர தேவைகள் அனைத்தும், ஹெலிகாப்டர் மற்றும் காட்டெருமை மூலமாக பேஸ் கேம்புக்கு கொண்டு வரப்படுகின்றன. பன்னிரண்டு நாட்கள் மலையேறி, நாங்கள் அந்த பேஸ் கேம்ப்பை அடைந்தோம். வழியெங்கும்

பனியும், பாறைகளும்தான். ஒரு புல், பூண்டு கிடையாது. ஆனால் பல இடங்களில் கருப்பு நிறக் காக்கைகளைப் பார்க்க முடிந்தது.

பேஸ் கேம்பிலிருந்து புறப்பட்டு, 6050 மீட்டர் உயரத்தில் உள்ள முதல் நிலை கேம்ப்பை அடைந்த பிறகு, மீண்டும் கீழே இறங்கி பேஸ் கேம்புக்கு வந்துவிடுவோம். இது ஒரு வகை மலையேற்றப் பயிற்சி எனலாம். ஒரு முறை முதல் நிலை கேம்ப் வரை சென்று பேஸ் கேம்புக்குத் திரும்ப மூன்று நாளாகும். இதுபோல ஆரேழு முறை பயிற்சி செய்த பிறகு, முதல் நிலைக் கேம்பிலிருந்து 6450 மீட்டர் உயரத்தில் உள்ள இரண்டாம் நிலை கேம்ப் வரை சென்று மீண்டும் முதல் நிலை கேம்ப் வழியாக பேஸ் கேம்புக்குத் திரும்புவோம். இப்படி ஏறுவதும் இறங்குவதுமான பயிற்சிக்குப்பின் தான் எவரெஸ்ட் சிகரத்துக்கு இறுதிக்கட்டப் பயணம் மேற்கொள்ள முடியும்.

வழி நெடுகப் பனிப்பாறைகள் நிறைந் திருக்கும். பகலில் சூரிய வெப்பம் அதிக மாகும்போது, திடீர் திடீரென்று பனி உருகி பனிக்கட்டிகள் கீழே விழும். வெயில் நேரத்தில் பனி உருகி, பாறைகளின் இடையில் மனித எலும்புக்கூடுகளைப் பார்த்தபோது ஒரு கணம் பயத்தில் உறைந்து போனோம்.

உடன் வந்திருந்த அனுபவம் வாய்ந்த இருபது நேபாளிகள், நாங்கள் மலை ஏற உதவினர். இமயமலையில் மேலே போகப் போக ஆக்சிஜன் குறையும் என்பதால் கேஸ் அடுப்புகள் நிதானமாகத்தான் எரியும்.

ஒவ்வொரு ஆக்சிஜன் சிலிண்டரும் பன்னிரெண்டு கிலோ எடை இருக்கும். அதைச் சுமந்தபடிதான் மலை ஏறவேண்டும்.

எவரெஸ்ட் தமிழன்



ஒவ்வொரு கட்டத்திலும் பலர் தோல்வி யடைந்து பின்வாங்கினர்.

புறப்பட்ட ஐம்பத்து நாலாவது நாள் காலை (மே 23) 8850 மீ. உயரத்தில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து, அங்கே நான் சென்னையிலிருந்து ஆசையாக எடுத்துக் கொண்டு சென்றிருந்த 'தமிழ் வாழ்க!' என அச்சிட்ட தாளை உயர்த்திப் பிடித்து 'ஜெய் ஹிந்த்' என்று சொல்லி, ஒரு இந்தியனாக, எவரெஸ்ட் சிகரத்தில் காலடி வைத்த முதல் தமிழனாகப் பெருமைப்பட்டேன்.

– எஸ்.சந்திரமௌலி



மணி

''ஒகேனக்கல் அருவிக்கு அருகே கராத்தே, குங்ஃபூ, களரி, மல்யுத்தம்... என்ற பெயரைக் கேட்டுவிட்டு இவையெல்லாம் வீர விளையாட்டுக்கள்தானே என்று நீங்கள் நினைத்தால் ஏமாந்து போவீர்கள். அப் பகுதியில் செய்யப்படும் எண்ணெய் மசாஜ்ஜின் பெயர்கள் இவை'' என்கிறார் ஒகேனக்கல் மசாஜ் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் மணி; கழுத்தில் அரசாங்கம் அங்கீகரித்திருக்கும் மசாஜ் தொழிலாளர் இவர் என்ற அடையாள அட்டை ஆடுகிறது. அதை ஒதுக்கி விட்டுப் பேசுகிறார் மணி.

''ஒகேனக்கல் அருவிக்கு நிகரா, எண்ணெய் மசாஜும் படு ஃபேமஸ் ஸார். அருவிக்கு தலையைக் காட்டறதுக்கு முன்னே எங்க கையாலே எண்ணெய் தேய்ச்சுக்கிட்டுப் போனாதான் குளியல் குளியலா இருக்கும். நான் முப்பத்தேழு வருஷமா மசாஜ் தொழில்லதான் இருக்கேன். ஆரம்பத்துல 16 ரூபாய்தான் ஃபீஸ். இப்போ அமுதா அம்மா கலெக்டரா வந்த பிறகு, குறைந்தபட்ச கட்டணம்னு 50 ரூபாயை நிர்ணயம் பண்ணி, எங்க ஆட்களுக்கு அடையாள அட்டையைக் கொடுத்திருக்காங்க. ஆறுதலான விஷயம். மற்றபடி எங்க வாழ்க்கை சிரமங்கள், சிக்கல்களால் பிசுக்கேறிப் போன மல்யுத்தம்தான்'' என்கிறார்.

''அப்படி என்னங்க சிரமம்?'' என்றால், சிறிய புன்னகையை உதிர்த்துவிட்டுப் பேசுகிறார்.

''சீஸன்ல மட்டும்தான் (ஜனவரி-ஜூன்) கொஞ்சம் வருமானம் பார்க்கலாம். மத்த நாட்கள்ல நாங்க மலைக்கு முள் எடுக்க போவோம்; தேன் எடுத்து விற்போம். அப்ப மலைகள்ல நாங்க சந்திக்கிற சிரமங்கள் சொல்லி மாளாது'' என்றவரிடம் தொழில்ரீதியா வேறென்ன சிரமங்கள்?'' என்று

வாழ்க்கையே



கேட்டால், மணியிடமிருந்து வார்த்தைகள் வருத்த அருவியாய்...

''ஒருநாளைக்கு ஒருத்தர் ரெண்டு பேருக்கு இல்லைங்க, சராசரியா 10லிருந்து 15 பேருக்கு மசாஜ் பண்றோம்ங்க. மனுஷ உடம்பு



போல வியாதி பிடிக்கக் கூடிய வேற எந்த ஒண்ணும் கிடையாது. ஒரு கஸ்டமருக்கு மசாஜ் கொடுக்கறப்போ, அவர் உடம்புச்சூடு அப்படியே எங்க உடம்புல ஏறிக்கும்.(?) நாளாக நாளாக இந்தச் சூட்டின் அளவு அதிகமாகிக் கண்களைப் பாதிக் கும். மேலும், சரும நோய் பாதிப்புள்ளவங்களுக்கு மசாஜ் செய்யும்போது, அந்த நோய் தொற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு அதிகம். அப்படி ஒருத் தர் இறந்தும் போயிருக்கார்'' என்கிறார் மணி.

''மசாஜ் தொழிலைக் கத்துக்க அரசாங்கம், பயிற்சி எதுவும் தர்றாங்களா?'' என்று மணியிடம் கேட் டால், பட்டென்று பதில் வருது. ''ஸார்... அரசாங்கம் தர்றது கேரள ஆயுர்வேத



...ல்யுத்தம்!

மசாஜ். அதைக் கத்துக்கிட்டு நாம ஒண்ணும் பண்ண முடியாது. ஏன்னா நம்ம ஆட்கள் எல்லோருமே உழைக்கறவங்க... அதனால அவங் களுக்கு நம்முடைய மசாஜ்தான் ஒத்து வரும். ஆயுர்வேத மசாஜ் ஃபாரின் காரங்களுக்குத்தான் ஏற்றது'' என்கிறார்.

''எந்தெந்த எண்ணெயில் மசாஜ் செய்யறீங்க...?'' என்றால், நல் லெண்ணெய், பொன்னாங்கண்ணி எண்ணெய், சந்தபதி, அரைக்கீரை... போன்றவை மசாஜுக்கு உகந்தவை. நல்லெண்ணெய் மசாஜுக்கு நாட் டையே எழுதிக் கொடுத்திடலாம், அவ்ளோ இதம், அவ்ளோ நல்லது'' என்கிறார் அவர்.

பெண்களுக்கு மசாஜ் செய்ய பெண் தொழிலாளிகள் இருக்கிறார்கள். தனியிடமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வாசகர் யோசனை:

மாதவராஜ், தருமபுரி

புகையிலை பூமி!

ஊருக்கு வருகிறபோதெல்லாம் நான் முதலில் கிழவரைத்தான் பார்ப்பேன். கார் கண்ணாடியை இறக்கி ஹாரன் சத்தத்தை எழுப்பினாலே, கிழவர் கொக்கரித்துச் சிரிக்க ஆரம்பித்து விடுவார். ''என்னடா கொமாரு! பொண்டாட்டி பிள்ளைங்க எல்லாம் சவுக்கியந்தானா?'' என்று சிங்கம் போலச் சத்தம் எழுப்புவார். பள்ளிக்கூடம் போகிற சின்னப் பெண்கள் களுக்கென்று சிரித்தபடி நகர்வார்கள். எனக்கு வெட்கமாக இருக்கும். எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை என்பது கிழவருக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும் அப்படித்தான் கேட்பார்.

எப்பொழுது ஊருக்கு வந்தாலும் மறக்காமல் இரண்டு கட்டு பீடி, ஒரு கவுளி வெற்றிலை, வாசனைப் புகையிலை எல்லாம் வாங்கிவந்து கிழவரிடம் கொடுத்து விடுவேன். ''உங்க ஊர்ல பீடி பிடிச்சா போலீஸ்ல புடிச்சுக்குவாங்களாமே! நெசந்தானா! துப்பு கெட்ட ஊர்ல எதுக்கு கொமாரு எச்சிப் பானை கழுவணும். ஊருக்கே வந்துடேன். எருமையில இப்ப நல்ல லாபம்னு சொல்லறாங்க!'' வெற்றிலை போட்டுக்கொண்டு உல்லாசமாய்ப் பேசுவார்.

வழக்கத்திற்கும் அதிகமாக இந்த முறை புகையிலை வாங்கிவந்தேன். கல்மேடை அதிரும்படி அமர்க்களமாய்ச் சிரித்தார் கிழவர். ''வா வா கொமாரு! இப்படி உட்காரு. ரெண்டு நாளா புகையில இல்லாம வாயி நமநமன்னு ஆயிடுச்சி!'' புகையிலையைப் பார்த்தால் கிழவருக்குக் கொண்டாட்டம்தான்.

கிழவர் புகையிலைப் போட்டுக்கொண்டு, அதன் விறுவிறுப்பை ரசிக்க ஆரம்பித்தார். நான் பக்கத்தில் உட்கார்ந்தேன்.

''கொமாரு... உனக்கு விசயம் தெரியுமா? நம்ம கோள்காரன போலீஸ் புடிச்சி







எழில்வரதன்

கிட்டுப் போயிடுச்சி!''

''என்னாச்சி தாத்தா! சாராயக் கேஸா?''

''பாம்புப் புத்தை இடிச்சி கிணறு வெட்டுனான். போலீசு புடிச்சிகிட்டுப் போயிடுச்சி!''

''பாம்புப் புத்தை இடிச்சதுக்கேவா போலீஸ்ல புடிச்சிட்டுப் போனாங்க?''

''புத்தை இடிச்சா சர்க்காருக்கு என்ன வந்திச்சி. கெணத்தில பொதையல் இருந்திச்சாம் கொமாரு. தங்க நகைங்க!''

''பொதையலா?''

''அதானே கதை! எருமை ஏமாந்த நேரத்தில, ஏழு குடம் பால் கறக்குற ஏமகாதகப் பயலுங்க ஆச்சே நாம. கெடைச்ச பொதையலுக்கு ஊதுவத்தி கற்பூரம் காட்டி, எலுமிச்சம்பழத்தை வெட்டிப் போட்டுட்டு நகை அத்தனையையும் தானே அமுக்கலான்னு பார்த்தான். பொதையலுக்கு காவல் இருந்த பூதந்தான் அவனை போலீசுல காட்டிக் குடுத்ததுன்னு வெச்சிக்கோ!''

''என்ன தாத்தா பொதையல்னு சொன்னீங்க சரி! இப்ப பூதம்னு கதை விட ஆரம்பிச்சிட்டீங்களே... குண்டு பல்ப் கண்டு பிடிச்ச அன்னிக்கே, பேயிங்க எல்லாம் ஓடிப்போன கதை உங்களுக்கு தெரியாதா?''



"குண்டு பல்ப் இல்லே குமாரு, எந்த பல்ப்பைக் கண்டுபிடிச்சாலும், பூதம் ஓடிப்போகாது. ஓடிப் போனதா நாம நெனைக்கிற பூதங்க எல்லாம் மனுசன் கண்ணுக்குத் தெரியாம மறைஞ்சி வாழ்ந் துட்டுத்தான் இருக்கு."

"பாக்கு மராமட்டம் கம்பீரமா நடமாடின ஒருத்தி, காசு பணத்தைக் கட்டி அரசாண்ட ஒருத்தி, உச்சிக் குடுமி பிடிச்சி பேய ஓட்டத் தெரிஞ்ச ஒருத்தி, இந்த ஊருக்குள்ள நடமாடுனாங்கங்கற கதை தெரியுமா கொமாரு உனக்கு. வேட்டை நாய துணையா வெச்சிருந்தவ, இப்ப பொதையல் பூதமா தங்கி இருக்கிற எறும்புக் குழி எதுன்னு தெரிஞ்சா, ஊர் மண்ணு மேல செருப்பு போட்டுக்கிட்டு நீ நடக்க மாட்டே! தைரியமிருந்தா அவ ளோட கதையைச் சொல்லறேன் கேளு!"

"நீ நம்ப மாட்டே கொமாரு. நூறு வருஷத்துக்கு முந்தி ரத்தமும் சதையுமா வாழ்ந்த ஒருத்தி, தான் சம்பாதிச்ச சொத்தை, பெத்த புள்ளைங்களுக்குக் கொடுக்காம, மண்ணுக்குள்ள பொதைச்சி வெச்சி பூதமா போயிட்டா. பழைய தருமபுரி பக்கம் இருக்கே அந்த ராமக்கா ஏரிக்கரையில ஆடு மேச்சவதான் ராக்காயி. அவகிட்ட ஒரு நூறு உருப்படி ஆடுங்க அந்தக் காலத்திலேயே இருந்திருக்கு. நூறு உருப்படி ஆடு இருந்திச்சின்னா, இந்தக் காலத்தில அது ரெண்டு பஸ் வெச்சிருக்கிற ஒனருக்கு சமம்.

ஊர்லையே பெரிய பவிசு உள்ளவ ராக்காயிதான். ஆடு மேய்க்கப் போகும் போதும், அலங்காரமாதான் போவா. கழுத்துச் சங்கிலி, மூக்குத்தி, தோடு, கால் காப்பு, ஜிமிக்கின்னு அவ செஞ்சி போட்டுக்கிட்ட நகைங்கள வண்டியில ஏத்தலாம்னு ஊருக்குள்ள பேசிக்குவாங்க. பொம்பளைங்க வயிறு எரியாத நாள் கிடையாது. பொம்பளைங்க வயிறு எரிஞ்ச நேரமோ என்னமோ, காவேரிக் காட்டுல மாடு மேச்ச ராக்காயி புருஷன் இடி எறங்கி, செத்தான். புருஷன் செத்த பின்னாடி, பொட்டு வெக்கிறததான் விட்டா ராக்காயி. நகை போடறதை விட வேயில்லை.

ராக்காயிக்கு ஆணும் பொண்ணுமா ரெண்டு பிள்ளைங்க. ரெண்டு பிள்ளைங் களுக்குமே நல்லபடியா கல்யாணம் பண்ணா. அன்னசாகரத்து எண்ணெய் வேவாரிக்குத்தான் கல்யாணம் பண்ணிக் குடுத்தா. புருஷன் வீட்டுக்குப் போனவ, கிழவி நகையவும் கொஞ்சம் திருடிட்டுப்



போயிட்டா. அன்னையில இருந்து மகளை வீடு சேத்தறதே இல்லே. மகனாப் பொறந்தவன் அதைவிடக் கேவலம். கல்யாணம் ஆன பின்னாடியும் அவனுக்கு குமரிப் பைத்தியம். அவனையும் தூரத்திட்டா கிழவி.

கிழவியா பொறந்தவ எப்பவுமே சாகாம இருக்க முடியுமா? மரம் செடி யெல்லாம் மனுஷனாட்டம் தெரிய ஆரம்பிச்சதுமே கிழவிக்குத் தெரிஞ்சி டுச்சி. சீக்கிரமே சொர்க்கத்துக்குப் போகப் போறோம்னு... ஆட்டையெல்லாம் அவ ஒவ்வொண்ணா விக்க ஆரம்பிச்சா. வித்து வந்த காசையெல்லாம் நகையாப் பண்ணி

மேலுக்குப் போட்டுக்கிட்டு ஒருநா அய்யோன்னு செத்துப் போனா.

கதறி அடிச்சிக்கிட்டு மகன் வந்தான். பதறி அடிச்சிக்கிட்டு மக வந்தா. செத்துக் கிடந்த கெழவி ஒடம்புல ஒரு பொட்டு நகையில்ல.

அப்பத்தான் சட்டி பானை செய்யற முத்துப்பாட்டன் சொன்னான்: 'யே யப்பா! இந்த ஆயா ரெண்டு மாசத்துக்கு முன்னாடி என்கிட்ட வந்து மூடி வெச்ச ரெண்டு மண் குடுவையை வாங்கிட்டு வந்துச்சு. இங்க வந்து பார்த்தா நகையவும் காணோம். குடுவையவும் காணோம். அப்படின்னா அவ குடுவைக்குள்ளதான் நகைங்களை போட்டு எங்கியாவது பொதைச்சி வெச்சிருக்கணும்னு சொன்னான்.

ராக்காயி மகன் கள்ளக் குடிச்சாலும் கணக்கா யோசிக்கிறவன். வீட்டுக்குள்ள பொதைச்சதை அப்புறம் தேடலான்னு, கிழவியைப் போயி காட்டுக்குள்ள பொதைச்சிட்டு வந்தான். ஆனால் என்ன புண்ணியம். அங்க தோண்டி, இங்க தோண்டி எங்க எல்லாமோ தோண்டிப் பார்த்தும் வீடு தரை மட்டம் ஆனதுதான் மிச்சம். கிழவி நகை பொதைச்ச இடத்தைச் சாகிற வரையில் அவனால கண்டுபிடிக்க முடியலே! ராக்காயி பேரனுக்கு மகனா பொறந்தவன்தான் இந்தக் கோன்காரன். கடைசியில அந்தக் கோன்காரன் கை வெச்சி பொதையலை எடுத்தான். என்ன பிரயோஜனம்? அவனை போலீசு இல்லே புடிச்சிக்கிட்டுப் போச்சி!'' கிழவர் கதையைச் சொல்லி முடித்து ஒரு பீடியைப் பற்றவைத்துப் பெரிதாகப் புகை விட்டார். நான் கிழவரை முறைக்க ஆரம்பித்தேன்.

எனக்கு சட்டென்று பொறி தட்டியது. ''கிழவியின் பேரனுக்கே தெரியாத கதை உனக்கு மட்டும் எப்படித் தெரியும்?''

''என்னயவே சந்தேகப்படறீயா கொமாரு? ராக்காயி தொரத்தின மக இருக்காளே... அந்த மகளுக்கு கடைசி மகனாப் பொறந்தானே ஒருத்தன் அது நான்தான். நஞ்சுண்டன் என் பேரு!'' கிழவர் மார்தட்டிக் கொண்டார்.

''நாந்தான் நஞ்சுண்டன்னு சொல்லிட்டா இந்தக் கதையை நான் நம்பிடணுமா தாத்தா! ஒரு மரியாதைக்கு உம் கொட்டினா கதை விடறீயே...'' நான் எகத்தாளமாய் சிரிக்க ஆரம்பித்தேன்.

''நம்பிக்கை இல்லையா கொமாரு. புதையல் இருந்த கிணத்தை வந்து பாரு. நான் ஆதாரம் சொல்லறேன்!'' கிழவர் என்னைக் கூப்பிட்டார். இரண்டு ஆள் ஆழத்திற்கு வெட்டப்பட்ட பாதிக் கிணறு பாவமாய் இருந்தது. பக்கத்தில் சின்னதும் பெரியதுமாய் பாம்புப் புற்று.

''ஏன் தாத்தா! உனக்குத்தான் பொதையல் இருக்கிற எடம் முன்னாடியே தெரிஞ்சிருக்குதே! நீ யாருக்கும் தெரியாம தோண்டி எடுத்திருக்கலாமே!''

''எண்டா கொமாரு தெரியாம பேசறே! இலுப்பை மரத்துப் பேயை ஓட்டின ராக்காயி காவல் இருக்கிற பொதையல என்னால எடுத்திருக்க முடியுமா? சொல்லு. அந்த ராக்காயி சாதாரண ஆளு இல்லே கொமாரு. அவளுக்கு பாம்பு கடிச்ச விசத்தை எறக்கவும் தெரியும்.

> **''ஒரு போரிலாவது வெல்லப் பாருங்கள் மன்னா...''**
> **''ஏன் அமைச்சரே?''**
> **''சும்மா உங்களைப் புகழ்வதற்கேனும் தங்களை ஒப்பற்றவர் என்று ஜால்ரா அடித்து பாடும் புலவர்கள் கூடத் தற்போது தங்களை 'துப்பற்றவர்' என்கிறார்கள்.''**
> **- கே.ஆனந்தன்**

மிருகத்தோட வாயைக் கட்டவும் தெரியும். சொல்லிவிட்டு கிழவர் பெருமூச்சு விட்டார். அவரை விடப் பெரிதாக நானும் மூச்சு விட்டேன்.

''ஏன் தாத்தா, அந்த ராக்காயிக் கிழவி ஒழுக்கமா தன் பிள்ளைங்களுக்கு கொடுத்திருந்தா, அவளோட பிள்ளைங்க சந்தோஷமா இருந்திருப்பாங்க இல்ல. ஏன் இந்த மனுஷங்க சம்பாதிச்ச காசை திங்காம மண்ணுக்குள்ள பொதைக்கிறது.''

''எல்லாம் விதிதான் கொமாரு. யாரு உச்சாணிக் கொம்புல இருக்கணும், யாரு எருக்குழியில விழணும்னு விதி எழுதி வெச்சவனைத்தான் காரணம் கேக்கணும். மூணு தலைமுறை முழுசா ஆண்டு அனுபவிச்ச குடும்பத்தை நான் பாக்கவேயில்லை கொமாரு. அரசாண்டு அனுபவிச்ச வம்சமெல்லாம் அன்னக்காவடி தூக்குறதையும் நான் பாத்துப்புட்டேன். சரித்திரமா வாழ்ந்த கிழவியோட வம்சம் தரித்திரம் புடிச்ச கதை இதுதான்'' கிழவர் பெருமூச்சு விட்டபடி சொன்னார்.

''எல்லாருக்கும் ஒரு சரித்திரம் இருக்கும்னு சொல்வரியே தாத்தா! எங்க பரம்பரை சரித்திரம் உனக்குத் தெரிஞ்சிருக்கணுமே...'' விபரீதம் அறியாமல் நான் கேட்டேன்.

''தெரியாம என்ன... ஆனா சொன்னா நீ சங்கடப்படுவே.''

''பரவாயில்லை சொல்லு தாத்தா.''

''ராக்காயிக் கிழவியோட அப்பன் இருக்கானே, அவன் கிரீடம் இல்லாட்டியும் ராஜாவாட்டம் வாழ்ந்தவன். அவன் வீதியில நடந்தா குடை பிடிக்க ஒரு ஆளு, எச்சில் சொம்பு தூக்க ஒரு ஆளு இருப்பாங்க. அந்த நஞ்சுண்டனோட வெத்தலைப் பெட்டிய சுமந்துகிட்டு, கூடவே கொடை பிடிச்சிகிட்டு போனவன் பேரு அருவாக்கண்டன். அவன்தான் உன்னோட எள்ளு தாத்தா.

நான் கிழவனை முறைத்துப் பார்த்தேன். கடுப்போடு முகம் திருப்பிய எனக்கு எதிரில் வருகிற என் அப்பா தெரிந்தார். தப்பிக்க எளிய வழி. ''தாத்தா, அப்பா தேடிட்டு வந்துட்டாரு. நான் வர்றேன்!''

புற்றையும் கிணற்றையும் பார்த்தபடி கிழவர் சொன்னார். ''இந்தக் கதையை யார்கிட்டேயும் சொல்லாத கொமாரு. ஊர் ஒரு தினுசா பேசும்!''

ஊருக்குள் காரை உருட்ட ஆரம்பித்தேன். காரில் இருந்த அப்பா, ''அந்த குளுகுளு மிஷினை போடு குமாரு. ஒரே



புழுக்கம்!''

''யப்பா! கோன்காரன் கொல்லையில புதையல் கெடைச்சதாமே...''

''ஆமா குமாரு! ஏழெட்டு கொடம் நகைங்கள்னு சொன்னாங்க. கோன்காரனையும், அவன் பொண்டாட்டியவும் விசாரிக்க போலீசு கூட்டினு போயிருக்கு!''

''கோன்காரனோட கொள்ளுப்பாட்டி நகைங்கதான் அதுன்னு ஊர்ல பேசிக்கிறாங்களே! அவ பேரு கூட காக்காயியாமே!''

''கோன்காரனோட கொள்ளு பாட்டி காக்காயா? என்னா பேருடா இது! அப்படி

ஒருத்தி இருந்ததா நான் கேள்விப்பட்டதே இல்லையே! கோன்காரனே கூழுக்குச் செத்தான். அவனோட கொள்ளுபாட்டி மட்டும் மகாராணியாவா இருந்திருப்பா! கெடைச்ச நகைங்க எல்லாம் அதியமான் காலத்துதுன்னு பேசிக்கிறாங்க.''

''ராக்காயி அப்பன்கிட்டதான் நம்ம தாத்தா வெத்தலை பொட்டி சொமந்து கூலி வாங்கினாங்களாம். அந்தக் காலத்தில நமக்குக் கூழுக்கே கஷ்டமாமே.''

''யாரு, அந்த திண்ணைத் தூங்கி



கிழவன் சொன்னானா? கொஞ்சநாளா அவனுக்கு புத்தி மாறாட்டம் வந்துடிச்சி. பாம்புப் புத்தை எட்டி எட்டி பார்த்துக் கிட்டு வெகாலம் வந்தவனாட்டம் சிரிக் கிறானாம்!''

நான் மவுனமாகக் கார் ஓட்ட ஆரம்பித்தேன். 'வெத்தலைப்பெட்டியான் குடும்பம்' என்று ஊருக்குள் எங்கள் குடும்பத்திற்கு ஒரு பெயர் உண்டு. அதற்கு அர்த்தமென்ன... கிழவன் சொன்ன வார்த்தையை நான் யோசித்துப் பார்த்தேன். குடைப் பிடித்து ஏவல் செய்தவனின் வம்சம் காரில் போகிறது. ஆள் வைத்து அதிகாரம் செய்தவனின் வாரிசு, ஒரு வாய் புகையிலைக்காக அரசமரத்தடிக் கல் மேடையில் காத்திருக்கிறது. அப்பா பதறிக் கத்த ஆரம்பித்தார்.

''குமாரு, பெரிசா ஹார்னு அடிடா, காது கிழியற மாதிரி உடாம ஹார்னு அடி!''

''எதுக்குப்பா?''

''எதிர்ல உன் சித்தப்பன்காரன் சைக்கிள்ல போறான் பாரு... அவன் துள்ளி ஓடட்டும் அடி!''

''அந்த ஆளு ஓரமாத்தானே போறாரு!''

''இப்ப ஓரமாத்தான் போறான். ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி நாம காசு முடை வந்து கஷ்டத்தில இருந்தப்போ, இவன் ஒத்தை மாட்டு வண்டியைப் பூட்டிக் கிட்டு வந்து நம்ம முன்னாடி எத்தனை எளக்காரமா நின்னான் தெரியுமா? இப்ப நாம கார்ல போறோங்கறதை அவன் பார்த்து வயிறு எரிய வேணாமா? அப்பா பழைய வன்மத்தை மனசில் வைத்துக்கொண்டு பதற, நான் மனதுக்குள் சிரித்துக்கொண்டே ஹார்ன் அடித்தேன். வண்டிச் சக்கரம் போல குடைசாய்ந்துக் கொள்ளும் வாழ்க்கை என்று தெரிந்தாலும், மனிதர்கள் புதையல் பூதமாக மாறித் தன் அகங்காரத்தை எப்பொழுதும் காத்துக்கொண்டேதான் இருக்கிறார்கள்.

தருமபுரியின் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியைப் போன்றே, கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஊத்தங்கரைக்கு அருகே சிங்காரப்பேட்டை தென்பெண்ணை ஆற்றில் இருக்கிறது தூவல் நீர்வீழ்ச்சி. அங்கு சென்று வரச் சரியான பாதைகள் இல்லாததால், அது அவ்வளவாகப் பிரபலமாகாமல் இருக்கிறது.

- கோவிந்தசாமி, ஊத்தங்கரை

போராட்டத்தின் திரிசூலம்!

'விடுதலைப் போராட்டத் திரிசூலம்' என வர்ணிக்கப்பட்டவர், சுப்பிரமணிய சிவா. அவரது சமாதி, வரலாற்றுத் தடயமாகக் காட்சியளிக்கிறது, தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி கிராமத்தில். திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு என்ற ஊரில் பிறந்தவர். தம் இறுதிக் காலத்தில் இன்னுயிர் நீத்தது பாப்பாரப்பட்டியில்.

ஆந்திர மாநிலம் அலிபுரம் சிறை. சுப்பிரமணிய சிவா அங்கு அடைக்கப்பட்டிருந்தார். சிறையில் இருந்த தருமபுரி அன்னசாகரம் தியாகி எம்டன், கந்தசாமி குப்தா, டி.என்.தீர்த்தகிரியார் போன்றோருடன் தொடர்பு ஏற்பட்டது சிவாவுக்கு. அந்த நட்பு வலுவானது. சிறையிலிருந்து விடுதலை ஆன பின்னர், அவர்களுடன் சுப்பிரமணிய சிவாவும் பாப்பாரப்பட்டிக்கு வந்து சேர்ந்தார்.



அப்பகுதியில் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டு, விடுதலைப் போராட்டத்தின் விளைநிலமாக அப்பகுதியை மாற்றினார் சுப்பிரமணிய சிவா. வ.உ.சி., மகாகவி பாரதி பாடல்களைப் பாடி விடுதலை வேட்கையை மக்களிடையே தோற்றுவித்தார். பாரத மதத்தை உருவாக்கத் திட்டமிட்டிருந்தார். நேதாஜியின் குருவாக விளங்கிய சித்தரஞ்சன் தாஸ், பாப்பாரப்பட்டியில் பாரதமாதா கோயில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டியுள்ளார். அந்த ஆலயம் எழாமலே போனது சோகம்தான்.

வாசகர் யோசனை:
கே.ஆனந்தன், தருமபுரி.







விரல் நுனியில் விருந்து!

இன்டர்நெட் A to Z காம்கேர் கே. புவனேஸ்வரி - விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை - 600 002. விலை ரூ.160.00

இன்டர்நெட் எனப்படும் 'இணையம்' குறித்த விரிவான விவர நூல் இது. இவ்வுலகத்தின் எந்த மூலையில் நடக்கும் எதையும், நம்முடைய கணினி மற்றும் செல்பேசித் திரைகளில் காட்டி நம்மை ஆச்சரியப்படுத்தும் தொழில்நுட்பம் இதுவாகும். மேலும், பொது அறிவு விஷயங்கள், உலக அளவில் நமக்குப் பயன்படும் தொழில் தொடர்புகள் ஆகியவற்றையும் தெரிந்து கொள்ள உடனுக்குடன் உதவுவதில் இணையதளங்கள் பயன்படுகின்றன.

நூல் ஆசிரியர் காம்கேர். கே. புவனேஸ்வரி கணினித் துறையில் 18 வருடங்களுக்கும் மேலான அனுபவம் பெற்றவர் என்பதினால், இன்டர்நெட் குறித்த விழிப்புணர்வைத் தனது விரல் நுனியில் விருந்தாகத் தந்துள்ளார்.







புலன்விழிப்பு (கவிதைகள்) பா.சேதுமாதவன், உலா பதிப்பகம், 132, வங்கி ஊழியர் குடியிருப்பு, திருவானைக்காவல், திருச்சி-5. விலை ரூ.30.00

ஏகப்பட்ட கவிதை நூல்களும், நிறையப் புதுக்கவிதைக் கவிஞர்களும் பெருகிவிட்ட நிலையில், பா.சேதுமாதவன், சிற்றிதழ்களில் வெளியான படைப்புகளை நூலாகக் கொண்டு வந்துள்ளார். சில தலைப்பில்லாத கவிதைகளும், ஐக்கூக்களும் கூட உள்ளன. இச் சமூகத்தின் மீது தனக்குள்ள விமர்சனங்களை எளிய நடையில் கவிதைகளாகத் தந்திருக்கிறார்.

குரு தத்துவக் கதைகள் - சி.எஸ். தேவநாதன் - ராஜராஜன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை-17.விலை ரூ.60.00

பழைய காலத்தில் 'குரு' என்பவர் மரியாதையில் மிக உயரத்தில் வைக்கப்பட்டிருந்தார். கிட்டத்தட்ட கடவுளாகவே மதிக்கப்பட்டார். முன்பு கல்வி என்பதும் குருகுலம் மூலமாகவே போதிக்கப்பட்டது நினைவுகூரத்தக்கது. இந்நூலில் குரு என்பவரின் தகுதி, சீடர்களின் கடமைகள் ஆகியவற்றைக் கதைகள் மூலம் சொல்லியிருக்கிறார் ஆசிரியர். குரு-சீடன் உறவு முதல், எது உண்மையான அறிவு என்பது வரை 37 கதைகள் மாணவர்களுக்குப் பயன்படும்படியாகத் தொகுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் வடமொழியில் வழங்கி வந்தவை. இங்கே தெள்ளிய தமிழ் நடையில் இளைய தலைமுறைக்கு வழங்கியுள்ள ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.

- வசந்தபாரதி

நூல் அறிமுகம்



''பேங்க்ல போய் லாக்கர் இருக்கான்னு கேட்டேன், திட்றாங்க சார்! எதுக்காக?''

''நான் சரியாகக் கவனிக்கலே! அது 'பிளாட்பேங்க்.'

- ஏ.விக்டர் ஜான்



''அம்மனுக்கு தங்க நகை செய்ய நன்கொடை கேட்டவங்ககிட்ட தாராளமா நிதி உதவி தர்றானே கபாலி?''

''எப்படியும் நகையெல்லாம் பின்னாடி அவன்கிட்டதானே போகப்போவுது.''

- ப.கோபி பச்சமுத்து



''சம்மர் கோர்ஸுக்குப் போனியா? என்ன தெரிஞ்சுக்கிட்டே?''

''வினோதினிக்கு ஐஸ்கிரீம் பிடிக்கும், பரிமளாவுக்கு பப்பிள்காம் பிடிக்கும், நந்தினிக்கு பாப்கார்ன் பிடிக்கும், பிரீத்திக்கு ஃபைவ் ஸ்டார் பிடிக்கும்.''

- மலைரத்னசாமி



''போர்ல தோத்ததுக்கு மன்னர் ஏதோ புதுக்காரணம் சொல்றாரே... என்னது?''
''எதிரி நாட்டு மன்னன் ஊக்க மருந்தை பயன்படுத்திட்டானாம்!''

- ப.கோபி பச்சமுத்து



''தற்கொலையா... என்கிட்ட வாங்க!''

''டாக்டர்... எனக்கு அடிக்கடி தற்கொலை பண்ணிக்கலாம்னு எண்ணம் வருது... பயமாவும் இருக்கு.''
''நீங்க நேரா என்கிட்டே வரவேண்டியதுதானே!''

- அரூர் மு.மதிவாணன்



''ஹலோ நான் கஸ்டமர் கேரிலிருந்து ரமேஷ் பேசறேன்... உங்களுக்கு எவ்வாறு உதவலாம்.''
''ஒரு ஆயிரம் ரூபா கடன் கொடுத்து உதவ முடியுமா சார்!''

- எல்.மோகனசுந்தரி

சத்தியம்

'நான் நகைச்சுவையாகப் பேசுவது எது சத்தியம் என்று சொல்லத்தான். சத்தியந்தான் உலகத்தின் பெரிய நகைச்சுவை'

- பெர்னார்ட் ஷா



* யூதர் திருச்சபையில் ஏசுநாதர்

அயோத்தி-

12 இளமைப் பாலம்

போன நூற்றாண்டு நாற்பதுகளில் என்று நினைக்கின்றேன்; அப்பொழுது நான் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். அக்காலக் கட்டத்தில், தொலைக் காட்சிகள் இல்லை; அரசியல் சிலம்பாட்டங்கள் இல்லை; கிரிக்கெட், சாமன்யனின் லாகிரி வஸ்துவாக ஆகவில்லை. கோவில் உற்சவங்களும், கூட்டுக் குடும்பங்களில் நிகழ்ந்த குடும்பச் சண்டைகளுந் தாம் ஊர்த் தெருவாசிகளுக்குப் பொழுதுபோக்கு.

என் எதிர்த்த வீட்டுத் திண்ணை மிகவும் பெரியது. அங்குதான், சீட்டாட்டம் அல்லது கூட்டுக் குடும்பச் சண்டைக் காட்சிகள் அனைத்தும் அரங்கேறும்.

ஒருநாள், வயதான ஒருவர் மிகுந்த கோபத்துடன் கத்தினார்: ''என்னடா சத்தியம்? பெரிய சத்தியத்தைக் கண்டுட்டே? அவா அவா சௌகர்யந்தானே சத்தியம்? பகவானும் கீதையிலே இதைத்தானே சொல்றார்?''

நான் அப்பொழுது கீதை படித்திருக்கவில்லை. பெரியவர் அப்படிச் சொன்னதினால், பகவானும் அப்படிச் சொல்லியிருக்கக் கூடுமென்றுதான் நினைத்தேன். பிறகுதான் தெரிந்தது, கீதையும், திருக்குறளும் யார் தலையில் வேண்டுமானாலும் பொருந்தும் குல்லாய் என்று.

அந்தக் கிழவர் என் மனத்தை விட்டு அகலவில்லை. அவர்தான் நம்முடைய தற்காலத்திய அரசியல்வாதிகளின் பாரம்பரிய முன்னோடியாக என் மனக் கண்முன் நிற்கிறார். 'அவரவர்களுடைய சௌகர்யந் தானே சத்தியம்?'

ராஜீவ் கொலை வழக்கு சம்பந்தமான ஜெயின் கமிஷன் அறிக்கையின் காரணமாகத் தானே அன்று சோனியாஜி தலைமையிலான காங்கிரஸ், தி.மு.க. கூட்டணியில் இருக்கும் வரை கூட்டணி ஆட்சிக்கு

இந்திரா பார்த்தசாரதி



அன்றும் இன்றும்!

ஒத்துழைப்புத் தர மாட்டோமென்று, ஆதரவை விலக்கிக் கொண்டது? அது அந்தக் காலத்திய சத்தியம். இன்று நிலவுவது இக்காலச் சத்தியம்.

பகவான் கீதையில் சொன்னாரோ இல்லையோ, நடைமுறையில், அவர், மஹாபாரதத்தில், பொய்யே பேசியறியாத தருமனை 'பாண்டவர்களுடைய சௌகர்யத்துக்காக' பொய் சொல்லும்படித் தூண்டுகிறார். தருமன் ஒரு தார்மிக மனப்போராட்டத்துக்கு (existential dilemma) உள்ளாகிறான். முதல் பாடமே அவனுக்குக் கடைசிப் பாடமாகவும் அமைந்து விடுகின்றது. அதற்கு மேல், அவன் கற்க விரும்பவில்லை. பொய்க்கு உண்மைப் போர்வைப் போர்த்தி, சத்தியத்தை அவரவர் சௌகர்யத்துக்கேற்ப, வளைத்துப் போட முடியும் (அரசாங்கம் தரும் பொருளாதாரப் புள்ளி விவரக் கணக்கு இதற்குச் சரியான சான்று) என்பதே அந்த முதல் அரசியல் அரிச்சுவடிப் பாடம். இந்த அரசியல் பாடம் கற்றுத் துறைபோகிய நம்முடைய இன்றைய அரசியல்வாதிகள், இன்று, சத்தியத்துக்கே, தான் சத்தியந்தானா என்ற அடையாளச் சிக்கல் ஏற்படும்படிச் செய்யக்கூடிய வல்லுநர்கள் ஆகிவிட்டார்கள்.



சத்தியத்தைக் குறிக்கத் தமிழில் மூன்று சொற்கள் இருக்கின்றன. 'உண்மை', 'வாய்மை', 'மெய்மை'. உள்+மை= மனத்தினாலும், 'வாய்+மை= வாக்கினாலும், 'மெய்+மை= சரீரத்தினாலும், சத்திய ஒழுக்கத்தைக் குறிக்கவே மூன்று சொற்கள். இவற்றில், 'வாய்மை'யையே முதற் கருத்தாகக் கொண்டு, ஓர் அதிகாரம் பாடியிருக்கிறார் வள்ளுவர்.

வள்ளுவர் ஓர் யதார்த்தவாதி. நடைமுறைக்கு எது சாத்தியமென்று உணர்ந்தவர். சமூகக் கூட்டுறவில் மொழிப் பரிமாற்றம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. அதனால்தான், சத்தியத்தை


அவர் 'வாய்மை' என்றே குறிப்பிடுகிறார். எது சத்தியம் என்பதை உள்ளம் தீர்மானிக்கின்றது. இந்த அளவில் அது 'உண்மை'. ஆனால், அதைச் செயல்படுத்தும் கருவிகள், நாக்கும், சரீரமும். மனத்தளவில் ஒருவன் தனக்குத் தானே உண்மையைப் போற்றுபவனாக இருத்தல் வேண்டும்.

'தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்'

'நெஞ்சு' என்பதை இங்கு வள்ளுவர் 'மனச்சாட்சி' (conscience) என்ற பொருளில் ஆளுகின்றார். 'நெஞ்சத்திற் குறுகிய கரி (சாட்சி) இல்லை' என்று கலித்தொகையிலும் வருகிறது. எது நல்லது, எது கெட்டது என்று துலாக்கோல் போல் ஆராய்ந்து துணியும் மனச்சாட்சி வலிமையாக இருந்தால், பொய் சொல்லும்போது தயக்கம் ஏற்படும். இதனால், மனத்தில் இறுக்கம் (stress) கூடும். இக்காலத்தில், இதன் அடிப்படையில்தான் 'உண்மை அறியும் கருவிகள்' (lie detectors) செயல்படுகின்றன. தவறு செய்ய விரும்புகின்றவனையும், செய்யாமல் தடுப்பது இந்த மனச்சாட்சிதான். 'உனக்கே நீ நேர்மையானவாக நடந்துகொள்' ("Be true to thine own self") என்கிறான் பொலோனியஸ் 'ஹாம்லெட்'டில்.

யதார்த்தவாதியாகிய வள்ளுவர் பொய் சொல்லுவதற்கான சந்தர்ப்பங்களும் உள்ளன என்கிறார். மஹாபாரதத்தில், பாண்டவர்கள் வெற்றி பெறவேண்டுமென்றால், துரோணர் போரில் கொல்லப்பட்டால்தான் அது முடியும் என்பதற்காக, தருமனைப் பொய் சொல்ல வைக்கிறான் கிருஷ்ணன். ஆனால் வள்ளுவரோ, பொய் சொல்லுவதினால், பிறருக்கு நன்மை ஏற்படுமானால், சொல்லப்படும் பொய்யே சத்தியமாகும் என்கிறார். ஆகவே, இரண்டு பொய்களுக்கும் வித்தியாசம் உண்டு. ஒன்று, கிருஷ்ணன் கூறுவது, அழிவு நோக்கியது. வள்ளுவர் சொல்வது ஆக்கம் நோக்கியது.

'பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்'



ஒருவனைக் கொல்வதற்காக இன்னொருவன் துரத்திக் கொண்டு வருகிறான். துரத்தப்படுகின்றவன் உங்கள் வீட்டுக்கு வந்து அடைக்கலம் கேட்கின்றான். நீங்கள் அவனை 'இந்த இடத்தில் ஒளிந்து கொள்' என்று சொல்கின்றீர்கள். சிறிது நேரம் கழித்து, துரத்துகின்றவன் உங்களிடம் வந்து 'இங்கு யாராவது ஓடி வந்தார்களா?' என்று கேட்கின்றான்.

என்ன பதில் சொல்வீர்கள்?

'ஆமாம், ஒருவன் வந்தான், அவனை நான் இந்த இடத்தில் மறைவாக இரு என்று சொன்னேன்' என்றா பதில் சொல்வீர்கள்?

அவ்வாறு சொன்னால், அது அரிச்சந்திர சத்தியம். ஆனால் வள்ளுவர் கூறுகிறார், சத்தியத்துக்கு அதனளவில் பரிபூரண (absolute) அர்த்த எல்லை எதுவும் கிடையாது.

எது மற்றவர்களுக்குக் குற்றமற்ற நன்மையைத் தருகின்றதோ அது பொய்யின் தோற்றம் கொண்டாலும் அதுவே உண்மை. ஏனெனில், இங்கு அவன் மறைந்திருப்பதைக் கூறுவது அவனுக்குத் தீமையாக முடியும்; அவன் கொல்லப்படுவான். ஆகவே இங்கு எது உண்மை என்றால், 'இங்கு யாரும் ஓடி வரவில்லையே?' என்று பதில் கூறுவது பொருள்.

பைபிளில், ஏகநாதர் யூதர் திருச் சபையினரால் குற்றம் சாட்டப்பட்டு, போன்டியஸ் பைலேட் முன் நிற்கும்போது, ரோமானிய ஆளுநராகிய அவன் ஒரு கேள்வி கேட்கின்றான்: 'சத்தியம் என்றால் என்ன?' அவன் பதிலுக்காகக் காத்திருக்கவில்லை.

காரணம் அங்கிருந்த ஒவ்வொருவருடைய சௌகர்யமும் அவரவர் சத்தியமென்று அவனுக்குத் தெரியும். ஏகநாதரை அவர்களிடமே ஒப்படைத்து விட்டு அவன் கை கழுவுகிறான். இதில் அவன் பொறுப்பு எதுவும் இல்லை என்பதற்காக.

கம்பன் அயோத்திமாநகரில் உண்மை பேசுகின்றவர்களே இல்லை என்கிறான். இப்பொழுதைய பாப்ரி மஸ்ஜித் பிரச்னையை முன் கூட்டியே தீர்க்கதரிசனத்தால் அறிந்து அவன் இவ்வாறு சொல்லவில்லை. பொய் பேசுகின்றவர்கள் இருந்தால்தானே, இவன் பொய் பேசுகிறான், இவன் உண்மை பேசுகிறான் என்று பாகுபடுத்திக் கூறமுடியும்? எல்லாருமே உண்மையைப் பேசினால், 'உண்மை' 'பொய்' என்ற சொற்கள் தனித் தனியாக அகராதியில் எப்படி இடம் பெறும்? 'உண்மை இல்லை பொய்யுரை இலாமையினால்' என்பது அவன் கூற்று.

கம்பன், அயோத்தி மாநகரில் உண்மை பேசுகின்றவர்களே இல்லை என்கிறார்

கம்பன் இக்காலத்தில் இருந்திருந்தால் இதை இப்பொழுது மாற்றிச் சொல்லியிருக்கக் கூடும். 'பொய் இல்லை, உண்மை உரை இலாமையினால்..'


எவ்வழி அரசு, அவ்வழி மக்கள்.

தான்.

வள்ளுவர் 'பிறருக்குப் புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்று சொல்லவில்லை. வள்ளுவ உள்ளத்தை நன்கறிந்த பரிமேலழகர் 'பிறருக்கு' என்ற சொல்லை வருவித்துக் கொள்கிறார். வள்ளுவத்தைப் பரிமேலழகரைக் காட்டிலும் நன்கு அறிந்தவர்களாகக் காட்டிக் கொள்ளும் இக்காலத்திய அரசியல்வாதிகள், ''தமக்கும் தம் உற்றார் உறவினருக்கும்' என்ற சொற்களை வரவழைத்துக் கொண்டு இக்குறளுக்குப் பொருள் சொல்லக்கூடும். 'தமக்கும் தம் உற்றார் உறவினருக்கும் புரைதீர்ந்த நல்ல அரசியல், பொருளாதாரப் பலன்களைத் தருமாயின், நாம் சொல்லுகின்ற பொய்கள் அனைத்தும் சத்திய வாக்கு என்பதில் சந்தேகமேயில்லை' என்பது இக்காலப்

(நிறைந்தது)

கல்வெட்டுகள்



பாடப்புத்தக உலகம்!

அமரர் கல்கி

பாடப் புத்தகங்கள் பிரசுரிப்பதிலும், அவற்றை அங்கீகரிக்கும்படி செய்வதிலும் ஊழல்கள் மிகப் பிரசித்தமானவை.

ஒரு சமயம், ஒரு பிரபல பாடப் புத்தகக் கம்பெனிக்காரரிடம், "இதோ இந்தப் பாடப் புத்தகத்துக்கு ஒரு ரூபாய் விலை வைத்திருக்கிறீர்களே? இதில் எத்தனை பிரதி செலவாகும்? இந்த ஒரு புத்தகத்தில் உங்களுக்கு என்ன கிடைக்கும்?'' என்றேன்.

''குறைந்தபட்சம் பத்தாயிரம் புத்தகங்கள் விற்கும். அங்கும் இங்கும் ஆட்களை அனுப்பி வேலை செய்தால் இருபதினாயிரம் புத்தகம் விற்கும். மூன்று வருஷத்தில் குறைந்தது ஐம்பதினாயிரம் விற்கலாம். ரொம்ப செல்வாக்குள்ளவர்கள் ஒரு லட்சம் புத்தகம் விற்று விடுவார்கள்'' என்றார்.

''ஒரு லட்சம் புத்தகம் விற்றால் ஒரு லட்சம் விலை ஆயிற்றே? அதில் உங்களுடைய லாபம் என்ன?'' என்று கேட்டேன்.

''என்னுடைய பங்கு இருபத்தையாயிரம் வந்தால் பெரிய காரியம்.''

''பாக்கியெல்லாம்?''

''பிரதிக்கு நாலு அணா வீதம் லட்சம் பிரதி தயாரிப்பதற்கு இருபத்தையாயிரம் ரூபாய் செலவு ஆகும்.''

''இதில் புத்தகம் எழுதிய ஆசிரியருக்கு என்ன பங்கு?'' என்றேன்.

''ஆயிரம் முதல் இரண்டாயிரம் ரூபாய் வரையில் கொடுப்போம்.''

''இவ்வளவுதானா?''

''பின்னே என்ன? எண்பது ரூபாய், தொண்ணூறு ரூபாய் சம்பளம் வாங்கும் உபாத்தியாயருக்கு ஆயிரம், இரண்டாயிரம் மொத்தமாய்க் கிடைத்தால் வாங்கிக் கொள்ள வலிக்குமா?''

''சரி; பாக்கி ஐம்பதினாயிரத்துக்கு என்ன கணக்கு? சொல்லுங்கள்!''

''அங்கங்கே பாடப் புத்தகம் விற்கும் கடைக்காரர்களுக்கு 100க்கு 15 வீதம் கமிஷன் கொடுப்போம். அதில் பதினையாயிரம் போகும். பாக்கி முப்பத்தையாயிரமும் நாலாபுறமும் ஆள்கள் அனுப்புவதற்கும், ஜில்லா போர்டு - நகரசபை மெம்பர்களைப் பார்த்துச் சரிகட்டுவதற்கும் சரியாய்ப் போய்விடும்!''

மேலே நான் எழுதியிருக்கும் சம்பாஷணை மூன்று நாலு வருஷத்துக்கு முன்பு நடந்தது. இப்போது ஒருவேளை விகிதாசாரம் மாறுபட்டிருக்கலாம்; அல்லது லஞ்சமே ஒழிந்து போயிருக்கலாம். ஆயினும் பாடப் புத்தகங்களின் உற்பத்திச் செலவு, விற்பனைத் தொகை லாபம் இவை குறித்த விவரங்கள் அதிகமாக மாறியிராதென்றே நினைக்கிறேன்.

- 6.6.1948 கல்கி

1 சை	க்	2 கோ	■	3 ஐ	■	■	4 வீ
■	■	ட்	■	ம்	■	5 கொ	ல்
■	6 உ	ட	ல்	பொ	ரு	ள்	■
7 பா	■	ய	■	ன்	■	ளி	■
8 த	ள	ம்	■	■	9 கொ	■	10 ந
ம்	■	■	11 ஆ	■	12 சு	வ	டு
■	13 இ	ர	வி	ல்	■	■	தி
14 மா	லை	■	■	■	15 ய	ட்	சி

இதோ சரியான விடை





கங்கிராட்ஸ்! சபாஷ்!! தேங்க்ஸ்!!!

அன்பார்ந்த வாசகர்களே!

வந்து குவிந்த 'திக்திக்' குறுக்கெழுத்துப் போட்டியில், சரியான விடையெழுதியவர்களில் ஒரு அதிர்ஷ்டசாலி வாசகரைக் குலுக்கலில் தேர்வு செய்தோம். அவருக்கு 500 ரூபாய் மதிப்புள்ள பரிசுப் பொருள் அனுப்பிவைக்கப்படுகிறது.

வெற்றி பெற்ற வாசகி: **எஸ்.புவனா, கரூர்**

- வெற்றி பெற்ற வாசகிக்கு கங்கிராட்ஸ்!
- சரியான விடையெழுதியவர்களுக்கெல்லாம் ஸ்பெஷல் சபாஷ்!
- கலந்து கொண்டவர்களுக்கு தேங்க்ஸ்!

திக் திக் குறுக்கெழுத்துப் போட்டி முடிவு

ஆங்கில மூலம் : டி' ஆர்.சி. நிலாண்ட் (ஆஸ்திரேலியா)

ஆங்கில வழி தமிழில் : தஞ்சாவூர்க்கவிராயர்



ஐயோ சிலந்தி!

கிழவர், செய்து வைத்த சிலை மாதிரி எந்தச் சலனமும் இன்றி வரவேற்பறை நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

பேரன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து விட்டான். அவன் பூட்ஸ் சத்தம் தொம் தொம்மென்று கேட்டது.

''ஜோ! வந்துட்டியா?''

''ஹாய், தாத்தா!''

கிழவர் அந்த வீட்டுக்கு வந்து ஒரு வருஷம் கூட முழுசாக ஆகவில்லை. மகள், மருமகன், பேரன் மூன்றே பேர் தான். மகளும் மருமகனும் இவர் மீது காட்டிய நெருக்கத்தை பேரன் காட்ட வில்லை. காரணம் புரியவில்லை.

பள்ளிக்கூடப் புத்தகப்பையைப் பேரன் தொப்பென்று போடும் சத்தம் கேட்டது. இதோ அவரைத் தாண்டி நடந்து போகிறான். பக்கத்திலிருக்கும் ஃப்ரிட்ஜில் இருந்து ஒரு ஆப்பிளை எடுத்து 'சர்ரக்' என்று கடிப்பது கேட்டது.

மெல்ல நடந்து வந்து அவர் முன் நிற்கிறான். எங்கோ வெறித்தபடி இருக்கும் அவர் நீல விழிகளை உற்று நோக்குகிறான்.

பேரனை நோக்கித் திரும்பிய விழிகள் விழித்தபடி இருந்தன. அவருக்குப் பார்வை இல்லை.

இயலாமை. பயமுறுத்தும் இயலாமை.

''கொழந்தே! பள்ளிக்கூடம் இன்னிக்கு நல்லா இருந்துதா?''

''ஓ.கே. தாத்தா! என்ன, பசங்களோட சண்டை போட்டதுக்கு டீச்சர் அடிச்சாங்க! வலிக்கவே இல்லை!''

கிழவரின் வாய் அகலத் திறந்தது. ஆனால் கண்களில் எந்தச் சலனமும் இல்லை. சிறுவனுக்கு இந்தத் தோற்றம் விசித்திரமாக இருந்தது.

திடீரென்று பையனின் பார்வை எங்கோ தாவியது. தாத்தாவை நெருங்கிக் கத்தினான்.

''தாத்தா! நகராதீங்க! உங்க தோள் பட்டை மேல ஒரு சிலந்திப் பூச்சி இருக்கு!''

கிழவரிடம் யாரோ அவர் காலுக் கடியில் வெடிகுண்டை வைத்தது போல் திகில். முகத்தில் பீதி.

''தூரத்துடா! அடிச்சுத் தூரத்துடா! இல்லேன்னு பிடிச்சு தூர எறிஞ்சிடு!''

தாத்தாவின் பீதி அவனுக்குப் பிடித்தது.

''தாத்தா நகராதீங்க! பிடிச்சுட றேன்!

உங்க காலுக்கு வந்துட்டுது! துக்கினியூண்டு சிலந்திதான்!''

சட்டென்று தாத்தாவின் தொடையில் ஓர் அடி அடித்தான். சிலந்தியைத் தூக்கித் தரைவிரிப்பில் போட்டான். தன் பூட்ஸ் காலை அதன்மீது வைத்து ஆ, ஊ என்று சத்தம் போட்டபடி துவைத்து விட்டான்.

கிழவர் அப்படியே நாற்காலியில் பயத்தோடு சாய்ந்து கிடந்தார். அவருக்கு மூச்சுவாங்கியது. முகம் வெளுத்துவிட்டது. கைகளில் நடுக்கம்.

''இந்த சிலந்திச் சனியன்களை எனக்குப் பிடிக்கவே பிடிக்காது!''- முணுமுணுத்தார்.

''தாத்தா, அதை நசுக்கிக் கொன்னுட்டேன்!''

''வெரிகுட்... ஜோ நல்ல பையன் ஆச்சே!''

கிழவரின் குரலில் நிம்மதி. ஆசுவாசம்...

தன் பைக்குள் கையைவிட்டு மூன்று நாணயங்களை எடுத்து நீட்டினார்.

''ஜோ! இந்தா லாலி பாப் வாங்கிச் சாப்பிடு!''

அன்று இரவு ஜோவின் அம்மா சொன்னாள்...



''குழந்தைக்குக் காசெல்லாம் குடுத்து பழக்கம் பண்ண வேணாம்!''

''ஆறு பென்ஸ்தான் அம்மா கொடுத்தேன்!''

''வேண்டாம்னு சொன்னா கேளுங்கப்பா. நாங்க வேற பாக்கெட் மணி தர்றோம்!''

''சரிம்மா!''

மகளைப் பற்றி அவருக்குத் தெரியும். அவள் தயவில் அவர் இருக்கிறார். தலையாட்டத்தான் வேண்டும். ஆனால் கிழவர் பேரனுக்குக் காசு கொடுப்பதை நிறுத்தவில்லை.

அவருக்கும் அவனுக்கும் இடையே விழுந்து விட்ட இடைவெளியைப் பிறகு எப்படிக் குறைப்பது?

அவரிடமும் கையிருப்பு குறைந்து கொண்டே வந்தது. ஒரு நாள் பேரனிடம் 'காசு இல்லேடா கொழந்தே' என்று சொல்லி விட்டார்.

பையனுக்குச் சமாதானமாக வில்லை. எவ்வளவோ கெஞ்சிப் பார்த்துவிட்டான். தாத்தா மசியவில்லை.

பையனுக்கோ பணம் தேவையாக இருந்தது. தாத்தா மீது கோபம் கோபமாக வந்தது.

''சரியான கிழட்டு மாடு'' - வெறுப்புடன் சொல்லிவிட்டு வெளியேறினான்.

பையனின் மனசுக்குள் ஒரு யோசனை. விபரீதமான யோசனை.

அன்று அம்மாவும் அப்பாவும் வீட்டில் இல்லை. தாத்தா வெறித்த பார்வையுடன் வராந்தாவில் உட்கார்ந்திருந்தார்.

திடீரென்று அவருக்கு அருகே சென்று பயத்துடன் கத்தினான்.

''தாத்தா! உங்க பக்கத்துல சிலந்தி!''

''எங்கே? எங்கே?'' கிழவர் தீனமான குரலில் கத்தினார். அவர் உடம்பு நடுங்கியது.

''உங்க மேல இல்ல. உங்க முன்னாடி இருக்கும் மேஜை மேல!''

''கொன்னுடு! ப்ளீஸ், அதக் கொன்னுடு! எங்கிட்ட வர விடாதே!''

முகமெல்லாம் வியர்வை பெருக நடுங்கும் குரலில் கத்தினார் தாத்தா.

''தாத்தா! அது உங்களை ஒண்ணும் பண்ணாது! மேஜை மேலதான் இருக்கு!''

தாத்தா நாற்காலியை விட்டு எழுந்திருக்க முயன்றார்.

''ஆ! தாத்தா, மேஜையிலேர்ந்து அது உங்களைக் குறி வச்சிதான் நகருது! அதுசரி; தாத்தா! அது உங்களை மோப்பம் பிடிச்சுருமா!''

''டேய், கொல்லுடா அதை!'' தாத்தா அலறினார்.

''கொல்லு! கொல்லு!''

பையனுக்கு ஒருவிதமான சந்தோஷம் உண்டாயிற்று. அவ்வளவு பெரிய கிழவர் அவன் சொன்னதைக் கேட்டு நடுங்குகிறார்!

''சரி, நான் அதைக் கொன்னா நீ என்ன குடுப்பே?''

''என்ன வேணாலும், என்ன வேணாலும் தர்றேன்டா! இப்ப

துக்கடா நியூஸ்!

சேர மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறையின் முரசுக் கட்டிலில் கண்ணயர்ந்து உறங்கிய மோசிகீரனார் பிறந்த பூமி தர்மபுரி மாவட்டத்தின் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாரமாம். கடையேழு வள்ளல்களில் ஒருவரான மலையமான் திருமுடிக்காரி பிறந்த ஊரான காரிமங்கலமும் இந்த மாவட்டம்தான்.

-கே. ஆனந்தன், தருமபுரி

அது எங்க இருக்கு?''

''சொல்றேன். ஆறு பென்ஸ் தருவியா?''

''சரிடா... சரி''

பையன் எதையோ பட்டென்று அடிப்பது போல் பாவ்லா செய்தான். சின்னதாய் ஒரு வெற்றிப் பெருமூச்சு விட்டான்.

''அப்பாடா! தாத்தா இனிமே அதால உன்னை ஒண்ணும் பண்ண முடியாது! சரி, ஆறு பென்ஸ் குடு! ஐயையோ தாத்தா! அதுக்கு உயிர் இருக்கு! சீக்கிரம் ஆறு பென்ஸ் குடு! அதை ஆறு பென்ஸாலேயே அடிச்சுக் கொன்னுடறேன்!''

தாத்தா நடுங்கும் கைகளால் பையைத் துழாவினார். காசுகள் தரையில் சிதறின.

பையன் ஒரு ஆறுபென்ஸ் நாணயத்தை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டான். மீதியைத் தாத்தாவிடம் கொடுத்தான். அவர் தடவிப் பார்த்துப் பதற்றத்துடன் ஒரு ஆறுபென்ஸை எடுத்து சிறுவனின் கையில் வைத்தார்.

''தாத்தா, ரொம்ப நன்றி. ஏ, அப்பா எவ்ளோ பெரிய சிலந்தி! பிரவுன் கலர்ல... கால்ல எல்லாம் முடியோட...''

''சொல்லாதே! அதைப்பத்தி சொல்லாதே!'' கிழவர் கூக்குரலிட்டார்.

''சிலந்தியைப் பத்தி எதுவும் சொல்லாதே. இங்கேருந்து போயிடு. அதைக் கொன்னுட்டே இல்லியா?''

''கொன்னுட்டேன் தாத்தா! அப்படியே கொழகொழன்னு நசுங்கிடுச்சு! வேணும்னா தொட்டுப் பாரேன்!''

கிழவர் கத்தினார்.

''வேண்டாம். வேண்டாம். பெருக்கி வெளியே எறிஞ்சுட்டுவா!''

பையன் நமுட்டுச் சிரிப்புடன் சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

முழுசாக இரண்டு ஆறு பென்ஸ் நாணயங்கள்!

''தாத்தா! ஏன் இப்படி சிலந்தியைக் கண்டாலே பயந்து நடுங்கறே?''

''அதுங்களைக் கண்டாலே பிடிக்காது. என் வாழ்நாள் பூராவும் அதுங்களைப் பாத்தாலே கொமட்டிகிட்டு வரும்! எங்க சிலந்தியைப் பார்த்தாலும் கொன்னுடுவேன்! இந்த வீட்டுல நிறைய சிலந்திங்க இருக்கும் போலிருக்கு!''

''தாத்தா, கவலையேபடாதீங்க. ஒரு சிலந்தி பாக்கி இல்லாம ஒழிச்சுக் கட்டிடறேன்! உங்களுக்காகத்தான் தாத்தா! ஆனா நீங்க இஷ்டமில்லாம போனா எனக்கு ஒரு பென்னிகூட தர வேணாம்!''

கிழவன் கையை ஆட்டினார்.

''சரி போ. என்ன தனியா விடு. அப்புறம் உனக்கு நான் ஆறுபென்ஸ் கொடுத்தை அம்மாகிட்டே சொல்லாதே.''

துக்கடா நியூஸ்!

தருமபுரி மாவட்டம் வறட்சியில் மட்டுமல்ல... டாஸ்மாக் வசூலிலும் தமிழகத்திலேயே முதலிடத்தில் இருப்பது வேதனையிலும் வேதனை! குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடைப்பது இம்மாவட்டத்தைப் பொறுத்தவரை குதிரைக் கொம்புதான் என்றாலும் மது விநியோகம் மயக்கம் வர வைக்கிறது.

–கே.ஆனந்தன், தருமபுரி

''பயப்படாதீங்க தாத்தா. அது நம்ம ரெண்டு பேருக்கு இடையில் உள்ள ரகசியம்!''

ஜோ குதித்துக் கொண்டு ஓடினான்.

பையன் தந்திரக்காரன். பத்து நாளைக்கு சிலந்தி பற்றி மூச்சுக்காட்டவில்லை. ஒரு நாள் தாத்தா தானாக ஜோவிடம் கேட்டார்.

''உனக்கு சிலந்தி மேல வெறுப்பு இல்லியா ஜோ?''

''ஊகும்.''

''நான் அதுங்களை வெறுக்கறேன்.''

பையன் யோசித்துவிட்டுக் கேட்டான்.

''தாத்தா, உங்களுக்காக நான் ஒரு சிலந்தியைக் கொன்னேன்னு வச்சுக்கிங்க. காசு உண்டுதானே?''

தத்தாவின் முகம் சட்டென்று மாறியது. பின் சகஜ நிலைக்கு வந்து, தலையை ஆட்டினார்.

''அப்ப சரி. எனக்குக் காசு கொடுங்க!''

தாத்தாவுக்கு எங்கிருந்துதான் அப்படி ஒரு கோபம் வந்ததோ.

''ஏய், என்ன என்னை 'ப்ளாக்மெய்ல்' பண்றியா? ஓடிப்போ இங்கிருந்து! கெட்-அவுட்! அம்மா வரட்டும்! உன் பிள்ளையோட லட்சணத்தைப் பாருன்னு சொல்றேன்!''

பையன் பயந்துவிட்டான். ஓடியே போய் விட்டான். ஆனால் அவனுக்குள் ஒரு வன்மம் துளிர்த்தது.

கிழவர் மனம் கனத்துப் போயிற்று. இப்போது சிறுவனை தமது நட்பு வட்டத்திலிருந்து ஒரு காட்டுப் பூனையைப் போல விரட்டிவிட்டார்.

பேரனுக்கும் அவருக்குமிடையே ஒரு பெரிய இடைவெளி விழுந்துவிட்டது.

அவன் இருந்தால் சிலந்தி இருப்பதைப் பார்த்து எச்சரிக்கை செய்வான்!

இரவில் அவரைச் சுற்றிச் சிலந்திகள் ஊர்ந்தன. பயத்துடன் எழுந்து கொள்வார். அவர் உடம்பு பூராவும் நூற்றுக்கணக்கான சிலந்திகள். அவற்றின் மயிர் அடர்ந்த கால்கள் அவர் உதட்டில் பட்டன.

அவரை நோக்கி ஒரு பெரிய சிலந்தி வந்தது. படுக்கையை விட உயரமாக இருந்தது. கன்னங்கரேல் என்று உடம்பெல்லாம் மஞ்சள் வரிகளுடன், சிலிர்த்து நிற்கும் முடிகளுடன். கால்மூட்டுகள் உடைந்த குச்சி மாதிரி இருந்தன. கண்கள் ஆரஞ்சுப் பழ சைஸுக்கு இருந்தன. அவரைச் சுற்றி அது வலை பின்னியது.

கிழவர் கத்தினார். கூச்சலிட்-



டார். யாருமே உதவிக்கு வரவில்லை.

ஒரு நாள் -

வழக்கம்போல் நாற்காலியில் உட்கார்ந்து தூங்கி விழுந்து கொண்டிருந்தார்.

ஜோ, தன் நண்பனுடன் வந்து சேர்ந்தான். நண்பனைப் பார்த்து வாயில் கையை வைத்து சைகைக் காட்டினான்.

''இப்ப பாரு வேடிக் கையை...''

தாத்தாவை நெருங்கி அவர் காதருகே கத்தினான்.

''தாத்தா! தாத்தா! இத பாருங்க மறுபடி ஒரு சிலந்தி வந்துடுச்சி!''

தாத்தாவின் முகத்தில் கல வரம் மூண்டது. அவர் முகம் இருண்டது.

''டேய்! நீ மொதல்ல வெளியே போ!''

''தாத்தா! நெஜமாலுமே சிலந்தி வந்துருச்சி!'' - பையன் வீறிட்டான்.

''அட, குட்டிச்சாத்தானே! வெளியே போ! அப்புறம் நான் சொல்றப்போ சிலந்தியைப் பிடிக்கலாம்!''

டியை எடுத்தான். கிழவரின் கை அருகே அதைக் கொண்டு போனான்!

தீப்பெட்டியைத் திறந்தான். அதற்குள் ஓர் உயிருள்ள சிலந்தி இருந்தது!

அப்படியே அதை தாத்தாவின் கைமீது கவிழ்த்தான். கத்தினான்:

''தாத்தா! அதோ உங்க கைமேலயே இருக்கு!''

தாத்தா தனது கையை உதறினார். அவர் முகத்தில் படுபயங்கர பீதி பரவிற்று.

அப்படியே சிலந்தி இருந்த கையை தன் முழங்கால் மீது அறைந்தார்.

அருவருப்பும் ஆத்திரமும் அவருக்குள் ளிருந்து குமுறி எழுந்தன.

அப்போதுதான் கவனித்தார். அவர் பேரன் நக்கலாச் சிரிப்பதை! அந்தச் சிரிப்பில் எத்தனை கேலி!

அவருக்குள் அந்த அவமானம் ஒரு சூறாவளி யாய் நுழைந்தது. அவருடைய கை அவரது

சிறுவனின் அலறல் அவன் இருக்கும் திசையைக் காட்டிக் கொடுத்தது. அவன் சிறுவன் அல்ல. சிலந்திப் பூச்சி!

''சரி, என்னை நம்ப வேண் டாம். ஆனா அது உங்க முழங்கை மேலதான் இருக்கு!''

கிழவரின் வாய் பிளந்தது. பையன் சொல்வது உண்மை யாய்க் கூட இருக்கலாம். முழங்கை மீது கையால் ஒரு தட்டுத் தட்டினார்.

அவர் முகத்தில்தான் எத் தனை திகில்... பீதி...

''பொய்யாடா சொல்றே? போ இங்கிருந்து! கடவுளே எனக்குக் கண் தெரியாம போச்சே!''

பையன் சட்டென்று ஒரு காரியம் செய்தான். சட்டைப் பையிலிருந்து ஒரு தீப்பெட்

'வாக்கிங் ஸ்டிக்'கை இறுகப் பற்றி நாலா பக்கமும் சுழற்றியது.

சிறுவனின் அலறல் அவன் இருக்கும் திசை யைக் காட்டிக் கொடுத்தது. அவன் சிறுவன் அல்ல; சிலந்திப் பூச்சி! தோளில், கையில், கழுத்தில், காலில் முதுகில் அவன் கதறக் கதறக் கிழவர் வாக்கிங் ஸ்டிக்கால் அவனை அடித்து நொறுக்கிக் கொண்டிருந்தார்.

கதவோரம் சரிந்தான் சிறுவன். அவனிட மிருந்து சத்தமே இல்லை. கிழவருக்கு அந்த மௌனம் உறைத்தது. வாக்கிங் ஸ்டிக் அவர் கையிலிருந்து நழுவி விழுந்தது. குரல் நடுங்கக் கூப்பிட்டார். 'ஜோ! ஜோ! ஜோ பதில் பேச வில்லை.

''ஜோ! எங்கே இருக்கே ஜோ! சொல்லு!''

சிறுவன் கதவருகே இருந்து அவரைப் பயத் துடன் கவனித்தபடி மெல்ல அழ ஆரம்பித்தான். ●

ச.ந.கண்ணன்

தள்ளாட்டம் ஏன்?

1950-ம் ஆண்டு நடந்த பிரேஸில் உலகக்கோப்பைப் போட்டியில், ஷூ இல்லாத அவலமான நிலையில், இந்தியா அதிலிருந்து விலகியது எல்லோருக்கும் தெரியும். ஆனால் 1948 முதல் 1960 வரை தொடர்ந்து நடைபெற்ற நான்கு ஒலிம்பிக் போட்டிகளில் ஆடத் தகுதி பெற்றது இந்திய அணி. 1956 மெல்போர்ன் ஒலிம்பிக் போட்டியில் நான்காவது இடத்தைப் பிடித்து, உலக அரங்கில் தன்னை முதல்முறையாக நிரூபித்தது. அந்த ஜோரில் இந்தியக் கால்பந்து அணி அடுத்தத் தளத்துக்குச் சென்றிருக்க வேண்டும். ஆனால், நடந்ததோ தலைகீழ். இந்தியக் கால்பந்தின் மீதான அக்கறை யாருக்கும் இல்லை.

வெளிநாடுகளில் தனியார் க்ளப்புகள் ஊர்ஊராக, கிராம கிராமமாகச் சென்று திறமைகளை வலை வீசிப் பிடிக்கிறார்கள். அவர்கள் வலையில் எந்தத் திறமையும் சிக்காமல் இருப்பதில்லை. கல்வி, இருப்பிடம், தரமான பயிற்சி என வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து, இறுதியில் அந்த வீரனை இன்னொரு க்ளப்புக்கு விற்றுவிடும். இருதரப்பினரும் பயனடையும் சிஸ்டம் இது. புகழ்பெற்ற அர்ஜெண்டினா வீரரான மெஸ்ஸி, இளம் வயதில் ஹார்மோன்கள் வளர்ச்சிக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருந்தார். அந்தச் சமயத்தில் பல கால்பந்துப் போட்டிகளில் ஆடி, கொஞ்சம் பேர் வாங்கியிருந்ததால், ஸ்பெயினைச் சேர்ந்த கால்பந்து க்ளப்பான பார்சிலோனா, மெஸ்ஸியை அடையாளம் கண்டு ஒப்பந்தம் போட முன் வந்தது. மருத்துவச் செலவுகளையும் நாங்களே பார்த்துக் கொள்கிறோம் என்று வாக்குறுதி தந்தது. இன்று மெஸ்ஸி மிகப்பெரிய கால்பந்து ஆட்டக்காரராக உருவாகியிருக்கிறார். இந்தியாவில், இது எந்த நூற்றாண்டில் சாத்தியமாகும் என்று தெரியவில்லை.

1960-க்குப் பிறகு ஏற்பட்ட தொய்வுக்கு உடனடியாகச் சிகிச்சை அளித்திருக்க வேண்டும்.





ஆனால், போட்டிகள் எதுவும் முறையாக நடத்தப்படாததால், வீரர்களுக்குப் போதிய பயிற்சி இல்லாமல் போய்விட்டது. அரசு கால்பந்தை பத்தோடு பதினொன்றாக நினைத்ததால், ரசிகர்களும் அதைப் புறக்கணித்துவிட்டார்கள். ஏழை நாடு என்று நாம் தப்பித்துக் கொள்ள முடியாது. உருகுவே நம்மைக்காட்டிலும் பரம ஏழை. ஆனால், அந்நாடு இருமுறை உலகக் கோப்பை சாம்பியன்.

1990-ல் நடந்த உலகக் கோப்பை போட்டியில், நடப்புச் சாம்பியனான அர்ஜென்டினாவை குட்டி ஆப்பிரிக்க நாடான கேமரூனும், 2002 உலகக் கோப்பையின்போது நடப்புச் சாம்பியனான ஃப்ரான்ஸை செனகல் வென்றதும் 2002-ல் தென்கொரியா அரையிறுதிக்குள் நுழைந்ததும் வரலாறுகள்.

ஸ்ட்ரீட் கிரிக்கெட் பிரபலமானது போல், ஸ்ட்ரீட் ஃபுட்பால் இளைஞர்கள் வசமாகாதது கால்பந்துக்கு ஏற்பட்ட பெரிய இழப்பு.

இந்தியக் கால்பந்தின் வளர்ச்சியில், வடகிழக்கு மாநிலங்களின் பங்களிப்பு பாராட்டும்படி உள்ளது. பலகீனமான வடகிழக்குப் பிரதேசத்திலிருந்து, அரை டஜன் வீரர்கள் கால்பந்து அணியில் இடம் பிடித்திருக்கிறார்கள். கொல்கத்தா, கோவா, கேரளாவில் கால்பந்து ரசிகர்கள் ஏராளம் உண்டு. கோவாவிலுள்ள க்ளப்புகள் ஓரளவு பசை பார்ட்டிகள். இதில் தமிழகத்தின் நிலைதான் சொல்லிக் கொள்ளும்படி இல்லை. ஆரம்பித்து அறுபத்தோரு வருடங்கள் ஆகியும், தமிழகத்தால் பாரம்பரியமிக்க தேசியப் போட்டியான சந்தோஷ் டிராபியை ஒருமுறைகூட வெல்ல முடியவில்லை.

தரவரிசைப் பட்டியலில் இந்திய அணி 132 வது இடத்தில் இருக்கிறது. பவுச்சிங் பூட்டியாவைத் தவிர வெளியே அறியப்பட்ட வீரர் ஒருவரும் இல்லை.

இன்றைக்கும் இந்தியக் கால்பந்தில் சர்ச்சைகள் ஓயவில்லை. பயிற்சியாளர் ஹாட்டன் அதிருப்தி காரணமாக பதவியை ராஜினாமா செய்துவிட்டதாகத் தகவல்கள் வருகின்றன. முதலில் தூக்கத்திலிருந்து இந்தியக் கால்பந்து எழவேண்டும். நிவாரணப் பணிகள் எல்லாம் பிறகுதான் செய்ய முடியும்.



எஸ்.சங்கர நாராயணன்

பொற்கிழி 12



எண்ணத்தில் உள்ளதெலாம்
எடுத்துரைக்க எந்நாளும்
எனைவிட்டுப் போகாது அச்சம் - மதுக்
கிண்ணத்தின் பரப்புக்குள்
சுகம்தோடும் மனசுக்குள்
நினைவன்றி வேறேது மிச்சம்?

எல்லைக்குள் அடங்காத
எழில்வான வெளியெங்கும்
என்பாடல் உனைநாளும் பாடும் - ஒரு
கல்லறைக்குள் என்வாழ்க்கைக்
கதைமுடியும் நாள்வரையில்
கதியென்று உயிருன்னைத் தேடும்

கண்ணுக்குள் உன்னாசை
கருவாகி உருவாகிக்
கடைசிவரை எனைவந்து கொல்லும் - இனி
மண்ணுக்குள் போனாலும்
மறுபடிநான் பிறந்தாலும்
மனம்என்றும் உன்பேரைச் சொல்லும்.

என் பாடல்


ரசிச்சு ரசிச்சு தன் அனுபவங்களை
ஐ—பாடில் பதிவு செய்யும் ஊர்வசி, விரைவில்
கல்கி —யில் எழுத இருக்காங்க...
காலை எழுந்தவுடன் சிரிப்பு!

முதல்வர் கருணாநிதியின் கதை - வசனத்தில் உருவான ''பெண் சிங்கம்'' திரைப்படத்தின் சிறப்புக் காட்சி ஃபோர் ஃப்ரேம்ஸ் தியேட்டரில் நடந்தது. முதல்வர், அவரது துணைவியார் ராஜாத்தி, கனிமொழி, ஸ்டாலின், அவரது மனைவி சாந்தா, கவிஞர் வைரமுத்து ஆகியோரைத் தவிர, அன்றைய முக்கிய விருந்தினர் ரஜினி. அவருடன் அவரது நீண்டகால நண்பர்களும் வந்திருந்தார்கள். ரஜினி முதலிலேயே வந்து விட்டார். ஸ்டாலினுக்குத் தம் நண்பர்களை அறிமுகப்படுத்தினார் ரஜினி. முதல்வர் வருவதற்குச் சற்றுத் தாமதமாகிவிட்டது. வந்து அமர்ந்ததும், முதல்வர் நகைச்சுவையாக 'மற்றவர்களைப் போல் போக்குவரத்து நெருக்கடி; அதுதான் லேட் என்றெல்லாம் நான் சொல்ல முடியாது' என்று வைத்தார் ஒரு பஞ்ச்! அரசு வேலை அழுத்தமே அவரது தாமதத்துக்குக் காரணம் என்றார், உடன் வந்திருந்த ஓர் அதிகாரி. படத்தின் இயக்குநர் பாலி ஸ்ரீரெங்கம் தனிக்கைச் சான்றிதழை முதல்வரிடம்



சுறு சுறு விறு விறு பெண் சிங்கம்!

- ரஜினிகாந்த் கமெண்ட்



காட்ட, விளக்குகள் அணைக்கப்பட்டதும் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று டி.எம்.எஸ். திரையில் தோன்றிப் பாடும் செம்மொழி மாநாட்டு மைய நோக்கப் பாடல் காட்சிகள் ஓடத்துவங்கின. ''இதுவும் படத்தின் ஒரு பகுதியா?'' என்று நாம் யோசிக்க, பக்கத்தில் இருந்த நண்பர், ''ரஜினிக்காக இந்த மைய நோக்க ஒலி - ஒளிக்காட்சி ஸ்பெஷலாகப் போடப்படுகிறது'' என்றார். பாடல் முடிந்ததும் ''பிரமாதம். பாடலும், இசையும், காட்சி அமைப்புகளும் அசத்தலாக இருக்கிறது'' என்றார் ரஜினி.

பெண் சிங்கம் படத்தின் ஹீரோ உதய்கிரண்; நாயகி மீரா ஜாஸ்மின். இடைவேளையில் ரஜினி முதல்வரிடம் ''சுறுசுறுப்பாக இருக்கு... நல்ல ஸ்பீடு... ரொம்ப ஃப்ரெஷ்ஷா இருக்காங்க...'' என்று பாராட்டினார். படத்தில் ஒரு ஓரங்க நாடகம். அதில் வீரமங்கை வேலுநாச்சியாராக வேடம் கட்டி நடிக்கும் மீரா ஜாஸ்மினுக்கு, குரல் கொடுப்பவர் கவிஞர் தமிழச்சி. ''என்ன தமிழச்சி... உன் போர்ஷன் எப்படி வந்திருக்கு?''என்று முதல்வர் கேட்க...''நல்லா வந்திருக்குங்கப்பா'' என்றார் தமிழச்சி.

இடைவேளைக்குப் பின் படம் பல திருப்பங்களுடன் விரைய, லாரன்ஸ் ராகவா பெண்களுடன் குத்தாட்டம் போட்ட காட்சியில், தொழில்நுட்பக் கோளாறு காரணமாகப் படம் நின்று விட்டது. உடனே டைரக்டரும், தயாரிப்பாளரும் பதற்றமடைந்து ஆபரேட்டர் அறைக்கு ஓடினார்கள். இரண்டு நிமிடங்களில் கோளாறு சரி செய்யப்பட்டுப் படம் மீண்டும் தொடர்ந்தது. ''ஐம்பதாண்டுகளுக்கும் மேலாகப் படத்துறையோடு தொடர்பு வைத்திருக்கும் கலைஞர் லேட்டஸ்ட் ட்ரெண்ட் தெரிந்து காட்சியமைப்புகளை வைத்திருக்கிறார்'' என்று நண்பர்களிடையே சொன்னாராம் ரஜினி.

தேவா இசையில் கலைஞரின் பாடலான ''வீணையில் எழுவது வேணுகானமா?'' என்ற பாடல் கேட்பவர்களை முணுமுணுக்க வைக்கும். மற்றபடி நீளத்தைக் குறைத்து, படத்தைக் கொஞ்சம் செதுக்கினால் வெற்றிப்பட வரிசையில் இடம் பிடிப்பாள் 'பெண் சிங்கம்'.

- ப்ரியன்



வாசகர்

உறவைப் புதுப்பித்த தராசு!

"கல்கி நீங்கள் கேட்டவை - தராசு பகுதிக்கு, கேள்வி எழுதி அனுப்புறதுல எனக்கு ஆர்வம் அதிகம். பத்து வருஷத்துக்கு முன்னாடி, சேலத்துல சொந்தக்காரங்க கல்யாணம். மனைவியோட நான் போயிருந்தேன். கல்யாணத்துல சரியான கூட்டம். 'என்ன மதிவாணன்?'ன்னு என் பின்னால ஒரு குரல் கேட்டுச்சு. பின்னாடி திரும்பிப் பார்த்தேன். ரொம்ப



வருஷமா எங்களோட பேசாம இருந்த மாமா. ஏதும் வம்புச் சண்டையோன்னு எனக்குக் கலவரமாய்டுச்சி. பக்கத்துல வந்தவரு என் தோள்களைத் தட்டி, 'சபாஷ் மதிவாணன். இந்த வார கல்கியில தராசு கேள்வி பதில் பகுதியில் உன்னோட கேள்வியப் படிச்சேன். அந்தக் கேள்வியும் சூப்பர். தராசு பதிலும் சூப்பர். தொடர்ந்து எழுது!'ன்னு உற்சாகப்படுத்தினாரு. அப்பத்தான் எனக்கே நிம்மதியானது. அன்றைக்குப் புதுப்பிச்சுக்கிட்ட எங்களோட அந்த உறவு இன்னிய வரைக்கும் தொடருது!'' என்கிறார் அரூர் மு.மதிவாணன்.

தனியார் நிறுவனம் ஒன்றில் மேனேஜராகப் பணியாற்றி வருகிறார். மனைவி வசந்தி, அரசு கிராமப்புற செவிலியர். மகள் அட்சயா, நான்காம் வகுப்பு படிக்கிறார். தன் மனைவிக்கும் மகளுக்கும் தற்போது பத்திரிகைக்குக் கடிதம் எழுதும் பழக்கம் தொற்றிக் கொண்டதாகப் பெருமிதம் கொள்கிறார். மனைவி, வசந்தி மதிவாணன் என்கிற பெயரில் பெண்கள் பத்திரிகைகளுக்குத் தொடர்ந்து வாசகர் கடிதம் எழுதி வருகிறார். மகள் அட்சயா, கோகுலம் உட்பட குழந்தைகள் பத்திரிகைகள் வாசித்து, அவற்றுக்கு கடிதங்கள் எழுதுகிறார்.

"முதன் முதலா பத்திரிகைகளுக்குனு வாசகர் கடிதம் எழுதி அனுப்ப ஆரம்பிச்சது 'கல்கி'க்குத்தான். அதுக்கப்புறம் வரிசையா தொடர்ந்து மத்த பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்பிச்சேன். வாசகர் கடிதம், கேள்வி - பதில் பகுதிக்குக் கேள்விகள் எழுதி அனுப்பிச்சதுன்னு எல்லா பத்திரிகைகள்லயும் பிரசுரமானது இதுவரைக்கும் சுமார் பத்தாயிரத்தைத் தொடும்!'' என்கிறார் கல்கி வார இதழின் முப்பது ஆண்டு கால வாசகர் அரூர் மு.மதிவாணன்.



பாவம் பா.ம.க.!



அன்புமணிக்கு ராஜ்யசபா ஸீட் இல்லை என்று அதிர்ச்சிக் குண்டை தி.மு.க. போட்டதில் பா.ம.க. ஆடித்தான் போயிருக்கிறது.

பென்னாகரம் தேர்தலுக்குப் பின், தி.மு.க.வுடன் நெருக்கத்தை பா.ம.க. வளர்த்து வந்த நிலையில், 'அன்பு மணிக்கு தி.மு.க. கட்டாயம் ஸீட் கொடுக்கும்' என்று உறுதியாகவே நம்பினார்கள் பா.ம.க.



முன்னணிப் பிரமுகர்கள். தி.மு.க. முக்கியஸ்தர்களே முகம் சுளிக்கும் அளவுக்கு சட்டமன்றக் கூட்டத் தொடரில் கலைஞர் மீது வெயிலுக்கு இதமான பாராட்டுப் பனிமழை பொழிந்தார்கள் பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர்கள். தி.மு.க.வில், குறிப்பாக வடமாவட்டங்களில் உள்ள முக்கியப் பிரமுகர்கள், பா.ம.க. உறவை அறவே விரும்பவில்லை. பலமான அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. இருந்த போதே அதைத் தோற்கடிக்க முடிந்ததால், 'இனி அதன் சகவாசமே தேவையில்லை' என்ற கருத்தோட்டத்தில் தான் அவர்கள் இருந்தார்கள்.

தி.மு.க. உயர்நிலைக் கூட்டத்தில் பேசியவர்களில் எண்பது சதவிகிதத்தினர் ''அவர்கள் உறவு தேவையில்லை; வேண்டுமானால் தேர்தல் நெருக்கத்தில் பார்த்துக் கொள்ளலாம்'' என்றுதான் பேசினார்கள். வழக்கமாக பா.ம.க.வுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் வீரபாண்டி ஆறுமுகம் கூட 'மருத்துவருக்கு நோ' சொல்ல வேண்டும் என்றபோது செயல்திட்டக் குழுவில் ஆச்சர்யம்.

அதிர்ச்சியில் இருக்கும் பா.ம.க. பிரமுகர்கள் வெளிப்படையாகப் பேசுவதற்கே தயங்குகிறார்கள். ''2006-ல் தி.மு.க. கூட்டணியில் இருந்தபோதே எங்களுக்கு ஒரு ராஜ்ய சபா ஸீட் விட்டுத் தருவதாக உறுதி மொழி கொடுக்கப்பட்டது. 2009-ல் கூட்டணி மாறி பாராளுமன்றத் தேர்தலில் நிற்கும்போது, அ.தி.மு.க. 'ஒரு ராஜ்ய சபா ஸீட் தருகிறோம்' என்று வாக்குறுதி கொடுத்தது. ஆனால் மருத்துவர் மீ அ.தி.மு.க. பிரமுகரால் கொலைப் ப வழக்குப் போடப்பட்டதால், அந்தக் கூ டணியில் நீடிக்க முடியவில்லை. இந் நிலையில், பென்னாகரம் தேர்தலி ஆளும் கட்சியின் அதிகார - பண பல துக்கு எதிராக நின்று, இரண்டாவது இட துக்கு வந்தோம். தேர்தல் பிரசாரத்தி போது கொஞ்சம் கடுமையான தாக்குத கள் இருக்கத்தான் செய்யும். இந்திர காந்தியைக் கொலை செய்ய முயன்றதா தி.மு.க. மீது குற்றம் சாட்டப்பட்டு ஆனால், அதற்குப் பின்னேதா 'நேருவின் மகளே வருக' என்று கூட்டன வைத்துக் கொண்டார்கள். உண்மையை சொல்லப் போனால், கலைஞர், அன் மணிக்கு ஸீட் கொடுத்து, கூட்டணி வை துக்கொள்ளத் தயாராக இருந்தார். இ தொடர்பாக எங்கள் தலைமைக்கு அவ வேண்டுகோளையும் வைத்தார். (தக் சமயத்தில் மருத்துவர் அய்யா இந்த செய்திகளை வெளிப்படுத்திப் பேசுவார். ஆனால், எப்போதும் கலைஞரைச் சுற்றி



சுற்றி வரும் தமிழக, மத்திய அமைச்சர்கள் சிலர், எங்களுக்கு எதிரான முடிவெடுக்கக் காரணமாகிவிட்டார்கள். தி.மு.க.வின் இந்த முடிவு வன்னியர்களின் தன்மானத்தை மிகவும் பாதித்துவிட்டது. இப்போது இவ்வளவுதான் சொல்ல முடியும்'' என்கிறார் பா.ம.க.வின் தலைமைக்கு நெருக்கமான பிரமுகர் ஒருவர்.

''நம் கட்சியை வளர்க்கும் வேலையைப் பார்ப்போம்''என்று அன்புமணி சொல்ல, ''தி.மு.க.வுக்கு ஒரு பாடம் கற்பிப்போம்'' என்று ராமதாஸ் சொல்கிறாராம். கருத்து மோதல் தொடர்கிறது.

தி.மு.க. இப்படித் திரிசங்கு நிலையில் பா.ம.க.வை வைத்தவுடன், ஜெ. ராமதாஸுக்குத் தூது அனுப்பியிருக்கிறார். விஜயகாந்த்தோடு கூட்டணி வைத்து அவரை ஒரு சக்தியாக வளர்த்து விடுவதைவிட, பா.ம.க.வோடு இருந்தால் என்ன என்ற எண்ணமும் ஜெ.வுக்கு இருக்கிறது. அதேசமயம் தி.மு.க.வோ, ராமதாஸ் அல்லது விஜயகாந்த் யாராவது ஒருவர் தனியாக மூன்றாவது அணியில் நிற்பது தங்களுக்கு ஆதாயம் என்று கருதுகிறது. ''அ.தி.மு.க. கொடுக்கும் ஸீட்டை வாங்கிக் கொண்டு அவர்களுடன் உடனடியாகக் கூட்டணியில் சேர, தற்போது நாங்கள் ஆர்வமாக இல்லை. காரணம், அடிக்கடி தாவுவதால் ஏற்பட்டிருக்கும் அவப் பெயரைப் போக்க நினைக்கிறோம்'' என்கிறார் பா.ம.க. ஆலோசகர் ஒருவர். காலம் கடந்த ஞானோதயம்.

- ப்ரியன்

விஜயகாந்தை வளர்த்து விடுவதைவிட பா.ம.க.வோடு இருந்தால் என்ன என்ற எண்ணம் ஜெ.வுக்கு இருக்கிறதாம்!



வட்டமேஜை



வாமன தேசங்களில் பற்பல தேசங் களைப் பற்றிய கட்டுரைகள் படிக்கப் பிரமாதமாக இருக்கிறது.

- ஆர்.ராஜாமணி, சென்னை-88

மரணம் பற்றி ஒவ்வொருவரும் பிரக்ஞையுடன் 'உள்ளே' இருந்து அனு பவித்தாற்போல உணர்த்தியிருந்தார் இந்திரா பார்த்தசாரதி.

- மயில்வீரன், தாமரை நகர்

''டைரக்ஷன் பற்றிய அறிவு பெண் களிடம்தான் அதிக அளவில் இருக்கு. அதற்கான சூழல்தான் அமையவில்லை''

புதுசா...

எனப் பிரதாப் போத்தன் கூற... பெண் இயக்குனர் மதுமிதா... நான் நான்கு ஆண் களின் பாதுகாப்பு வளையத்தில் எனக்கான வெற்றியைப் பறிக்கிறேன் என்று கூறி யிருந்தது 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியை ரசித்த உணர்வைத் தந்தது.

-என்.சண்முகம், திருவண்ணாமலை

'அண்டோரா'வின் சங்கதிகள் 'தண் டோரா' போட்டா மாதிரி பளிச்சென கொடுத்து கலக்கிட்டீங்க.

- கே.அருள், வேலூர்

ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் ஆசையையும், ஆதங்கத்தையும் பிரதிபலிக் கிறது தலையங்கம்.

-எஸ்.ராமசாமி, சித்தோடு

'புதுசா, புது தினுசாப் போட்டிகளை அறிவிக்கப் புளகாங்கிதப்படுத்தறீங்க.

திரமான வாழ்வு பற்றிய காஞ்சிப் பெரியவரின் விளக்கம் மிகவும் அருமை.

- கே.என்.சுப்பிரமணியன், சென்னை-15

'வண்ணங்களில் வசியமாகும் வாழ்வு' தலைப்பில் இடம்பெற்ற கதிர் எஸ்.பங்கர் அவர்களின் கைவண்ணத்தில் மூன்று முத்தான ஓவியங்கள் அகத்தை 'மெஸ்மெரிசம்' செய்துவிட்டது!

- தனுஸ்ரீ, அரியலூர்

பரிசுக் கடிதம்

கிழக்குப் பதிப்பகம் வழங்கும் ரூ.250 மதிப்புள்ள நூல்கள் பரிசு பெறும் கடிதம்:

'**க**லப்பாலில் துளி விஷம்' என்றுதான் நமது முன்னோர்கள் அனுபவித்து சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். எனவே, 'ஒரு நடிகையின் பேச்சால் கலாசாரச் சீரழிவு ஏற்பட்டு விடாது' என்ற மதுமிதாவின் கருத்து ஏற்புடையது அல்ல! காரணம் தாயன்பு, நல்லொழுக்கம், சகோதர பாசம் என அனைத்தும் பள்ளி ஆசிரியர்களை விட எம்.ஜி.ஆர்., சிவாஜி போன்ற நடிகர்கள் தங்களின் படங்களின் மூலமாகத்தான் கற்றுத் தந்தனர். எனவே, அவர்களின் பேச்சு பொறுப்பானதாய் அமைய வேண்டும்.

- கே.சண்முகம், ஆதமங்கலம்புதூர்



ஒரு சின்ன டவுட். எப்படி இப்படியெல்லாம் யோசிக்கறீங்க?'

- ஜி.எம்.மஞ்சரி, கிருஷ்ணகிரி-1

***ப**விமலரின் 'அவர்களுக்குத் தெரியாது' என்ற மின்னல் கதையினுள் பொதிந்திருந்த யதார்த்தமான உண்மை சுளீரென்று வலித்தது!*

-எஸ்.மும்தாஜ், சென்னை-93

***வ**டிவமைப்பில் கல்கி 'தூக்கல்' என்பதை விளம்பத் தேவையில்லை. அப்படி ஒரு பளிச்! திரும்பத் திரும்பப் புரட்டிப் பார்த்தேன்.*

- அழகிய தமிழ் மகன், முத்துப்பேட்டை

சென்ற வாரம் வெளியான எனது பேட்டிக் கட்டுரையில், என்னுடைய பணியின் பலம், தன்னம்பிக்கை (self confidence) என்றும், பெண் என்பவள் தன்னைப் பலவீனமானவளாக நினைத்து ஒதுங்கி விடாமல், அதையே பெருமிதமாய்க் (pride) கொள்ள வேண்டும் என்ற அர்த்தத்தில், நான் சொன்னது 'திமிர்தான் எனக்கு பலம்' என்ற தலைப்பில் பிரசுரமாகியுள்ளது. 'திமிர்' என்ற வார்த்தை தேவையில்லாமல் arrogance என்ற தொனியில் எடுத்துக்கொள்ளப்பட வாய்ப்பிருக்கிறது. அப்படி ஒரு பரிமாணம், என் உண்மையான கருத்தைப் பிரதிபலிக்கவில்லை என்பதுடன், என்னைப் பற்றி ஒரு தவறான அபிப்பிராயத்தை உருவாக்கிவிடக்கூடும்.



- இயக்குநர் மதுமிதா, சென்னை

'காஸ்ட்லி காமெடியன்' - இப்படி ஒரு பெயர் தயாரிப்பாளர் மத்தியில் இருக்கிறது வடிவேலுக்கு. அதே நேரத்தில் 'வாங்குற காசுக்கு வஞ்சனை இல்லாம நடிச்சுக் குடுக்கறான்யா மனுஷன்' என்கிற நல்லப் பெயரும் உண்டு. காமெடியில் புயல் போல அடிச்சு துவம்ஸம் பண்ணினாலும், தனி வாழ்க்கையில் பல சறுக்கல்களுக்குச் சொந்தக்காரர். அவர் பற்றி நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார் கோடம்பாக்கத்தின் ஓர் உதவி இயக்குநர்.

காஸ்ட்லி

ப்ளஸ்

- வடிவேலுவை நம்பி இயக்குநர் ஒரு scene -ஐ ஒப்படைக்கலாம். அவர் தன் கிரியேட்டிவிட்டியையும் சேர்த்து, அந்த scene -ஐ அழகாக்கிவிடுவார். இப்படி மெனக்கெடுவதில் வடிவேலுதான் நெம்பர் ஒன் காமெடியன். (உதாரணம்: வின்னர், போக்கிரி, கச்சேரி ஆரம்பம் போன்ற படங்கள்.)
- எம்.ஜி.ஆர் பாடல்களை, எந்தப் படத்தில் எந்தப் பாடல் என்று சரியாகச் சொல்லும் அளவுக்குப் பயங்கரமான ஞாபகச் சக்தி. பாடும் திறமையும் உண்டு.
- வடிவேலுவின் பாடி லாங்வேஜோடு போட்டிப் போடும் அளவு தமிழில் காமெடியன் ரொம்ப ரொம்பக் கம்மி.
- நாகேஷுக்கு அடுத்து தமிழ் சினிமாவில் ஹீரோவாக ஜெயித்த காமெடியன் வடிவேலுதான்.
- ரஜினிக்கு நிகராகக் குழந்தைகள் மனத்தில் தன் சேஷ்டையாலும், மொழியாலும் இடம் பிடித்த ஒரே காமெடியன்.
- நடிப்பிலும் டப்பிங்கிலும் படத்துக்குப் படம் வித்தியாசம் காண்பிப்பார்: தம்மைப் பாதித்த காமெடியன் சுருளி ராஜன்தான் என்று வெளிப்படையாக ஒப்புக்கொள்வார்.

மைனஸ்

- தயாரிப்பாளர் தலையே கழண்டு போகும் அளவுக்கு, சம்பள விஷயத்தில் சல்லிப்பைசா குறைக்க மாட்டார். (ஒருநாள் சம்பளம் பத்து லட்சம்!)
- உதவியாளர்கள், கூட நடிக்கும் சக காமெடி நடிகர்களுடன் உரசல்கள்.
- ஷூட்டிங்குக்கு எவ்வளவு லேட்டாக வருகிறாரோ அவ்வளவு சீக்கிரம் கிளம்பிப் போய்விடுவார். ஆறு மணிக்கு மேல் ஸ்பாட்டில் இருந்தது கிடையாது.
- இயக்குநர்களையே விஞ்சும் அளவுக்கு இயங்குவது!
- வடிவேலுவின் வளர்ச்சிக்குக் காரணமானவர்கள், அவர் வளர்ந்த பிறகு தங்களைப் புறக்கணிப்பதாகச் சொல்லிப் புலம்புவது.
- சின்ன பட்ஜெட் படங்களைப் புறக்கணிப்பது
- அப்பப்போ, பெரிய ஆட்களோட மோதி மனசைக் காயப்படுத்திக் கொள்வது.
- முளைவிட ஆரம்பித்திருக்கும் அரசியல் ஆசை.

- மகிமைராஜன்


[+] ப்ளஸ் [-] மைனஸ் =
பெரும்புள்ளி
காமெடியன்?
வடிவேலு

நிப்பட்...



'பப்பெட்'டின் தங்கை போல இருக்கிறது நிப்பட். அதென்ன பொம்மையா? என்று கேட்காதீர்கள்! கன்னடத்துல தான் இதுக்கு பேர் நிப்பட், சேலத்துல தட்டுவடை, வேலூர்ல ஒட்டடை, கோவையில் கையடை...'' இப்படிப் பல நாமகரணங்களைச் சூட்டிக்கொண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தின் காவேரிப்பட்டணத்தையே கடந்த இருபத்தைந்து வருஷமா வாழ வச்சுக்கிட்டிருக்கு, நிப்பட் என்கிற மொறு மொறு தின்பண்டம்!''- இது மஹா அபி நிப்பட் கம்பெனியின் உரிமையாளர் மாதுவின் வாக்குமூலம். கடந்த பதினைந்து வருடங்களாக 'நிப்பட்' தயாரிப்பில் ஈடுபட்டு வருபவர் இவர்.



● மாது

''காவேரிப்பட்டணம்னா நிப்பட், நிப்பட்னா காவேரிப்பட்டணம்னு பிரிக்க முடியாத அளவுக்கு எங்க மக்களோட இணக்கமாயிடுச்சுங்க இந்த நிப்பட். கிட்டத்தட்ட 100 லேர்ந்து 150 குடும்பங்க நிப்பட்டை நம்பிதாங்க இருக்கோம்'' என்கிற மாது, ''ஆந்திரா நொய்யரிசிதாங்க இதுக்கு முக்கியமான மூலப்பொருள். அதைப் பக்குவமா காயவைச்சு அரைச்சுடணும். பிறகு பொட்டுக்கடலை, வேர்க்கடலை, சீரகம், எல்லாம் கலந்து மறுபடியும் அரைக்கணும். அரைச்ச மாவை இயற்கையான காத்துலதான் உலர்த்தணும். இல்லைன்னா மாவு திரிஞ்சு போயிடும். உலர்த்துன மாவுல, மறுபடியும் பொட்டுக்கடலை, நிலக்கடலை போட்டு தண்ணியைவிட்டுப் பிசைஞ்சு பக்குவத்துக்குக் கொண்டு வரணும். அதைச் சிறுசிறு துண்டுகளாக்கி, கையால தட்டி, எண்ணெய்ல போட்டு எடுத்தோம்னா சும்மா வாயில கரையும். முக்கியமா நிப்பட்டை சுட்டு எடுக்கற







துக்குப் பயன்படுத்தற அடுப்புக்கு, தேங்காய் உரி மட்டையைத்தான் பயன்படுத்தறோம். கேஸ் அடுப்போ, விறகு அடுப்போ, இதுக்கு ஆகவே ஆகாது. நிதான தீயில நின்னு வேகணும்'' என்கிறார் மாது.

''மூணு கிலோ மாவு பிசைஞ்சு 'நிப்பட்' தட்டிக் கொடுத்தா பத்து ரூபாய்ங்க. ஒரு நாளைக்கு முப்பது கிலோ மாவுத் தட்டுவோம். எங்களை மாதிரி காவேரிபட்டணத்துல

நிப்பட்!

நிப்பட் கூலி தொழிலாளிங்க 300 பேர் இருப்பாங்க'' என்று பேசிக் கொண்டிருக்கும் இளவரசியின் கைகள் 'நிப்பட்' தட்டுவதை நிறுத்துவதில்லை!

''சிவகாசிக்கு வெடி எப்படியோ, அப்படிதாங்க காவேரிபட்டணத்துக்கு நிப்பட். ஆனால், சிவகாசி அளவுக்கு இங்க காசு பணம் புழக்கம் கிடையாது. கடன் வாங்கித்தான் தொழில் நடத்தறோம். நிப்பட் வித்த காசுல கடன் கொடுத்துட்டு, மீந்த காசுல கூலியும் கொடுத்துட்டு, எண்ணிப் பார்த்தா ஏமாத்தமா இருக்கு. நாங்க திருப்பிக் கட்டுற அளவுக்கு




அரசாங்கம் எங்களுக்குக் கடனுதவி செஞ்சா, காவேரிபட்டணத்துல மட்டும் நூறு குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்'' என்கிற மாதுவின் கண்களில் 'நிப்பட்' போல அவ்வளவு சீக்கிரத்தில் நொறுங்கிப் போகாத நம்பிக்கை தெரிகிறது.

வாசகர் யோசனை: ரியாஸ், கிருஷ்ணகிரி



போடுங்கய்யா தீர்மானம்-7

நவீன யுகத்துக்கேற்ப வந்துவிட்ட பெயர்ப் பலகைகளில் தப்பும் தவறுமாய் சொற்கள்! தமிழின் மானத்தைக் கப்பலேற்றுகிறது. (உ.ம்: தமிழின் வாலே வருக!, இங்கு மாவு அறைக்கப்படும்) பொது மக்களுக்கு பயன்படும் வகையில், விளம்பரத்துக்கான தனியான தமிழ்ச் சொற்களை அச்சிட்டு நூலாக அரசே வெளியிடலாம் - (உ.ம். Anbu Agencies = அன்பு முகவாண்மை) இவற்றை ஒற்றுப்பிழையின்றி தவறான தமிழ்ச் சொல்லின்றி விளம்பரப் பலகையில் எழுதப்படுவதைக் கவனித்துத் திருத்த ஒரு குழு அமைக்கவும், தவறாக எழுதுவோர் மீது அபராதம் விதிக்கவும் வகைசெய்யத் தீர்மானம் போட வேண்டும். அப்போதுதான் சாலையெல்லாம் சரியான தமிழ் காட்சியளிக்கும்!




- நந்திதா,
ஸ்ரீ கிருஷ்ணா கலை
மற்றும் அறிவியல் கல்லூரி,
கோவை

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57* Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11* Licensed
post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11* Registered as a Newspaper in Srilanka.

புற்றுநோய்க்கு ஒரே இடத்தில் தீர்வு!

ONE STOP SOLUTION FOR CANCER

- PET CT SCAN
- All Endoscopies
- Linear Accelerator & Brachy Therapy
- Radiation
- IGRT
- Surgical Oncology
- Medical Oncology



- பெட் சிடி ஸ்கேன்
- அனைத்து என்டோ ஸ்கோபி
- கதிர்வீச்சு
- லீனியர் ஆக்ஸிலரேடர் & உட்கதிர்வீச்சு
- IGRT
- புற்றுநோய் அறுவை சிகிச்சை
- புற்றுநோய் மருத்துவம்

இலவச ஆலோசனைக்கு:

(044) 2246 9200
(044) 66 300 300

PET CT CENTRE AT CANCER INSTITUTE (WIA)
CANAL BANK ROAD, GANDHI NAGAR, ADYAR, CH-20

24 HRS PHARMACY & AMBULANCE SERVICES AVAILABLE

Dr. KAMAKSHI MEMORIAL HOSPITAL

1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Ph: 2246 9200, 66300300 Fax : 22463282 66300400
E-mail: info@drkamakshimemorialhospital.org.
Website: drkamakshimemorialhospital.org.

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11" Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11" Registered as a Newspaper in Srilanka.